**<u>ம.க.கு.ந.க.எண்.அ8/1246/2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 08.05.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.177/2012 பொருள் எண்.01

**<u>தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் /மதிப்பூதியம் பெறும் பணியாளர்கள் / தனிஉயர்வு 01.01.2012 முதல் வழங்குவதற்கான அரசாணையினை அமுல் படுத்த அனுமதி வேண்டி</u>**

அரசாணை நிலை எண். 117 நிதித்(படிகள்)துறை, நாள். 09.04.2012–ல் திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம், பெறுபவர்களின் தொகையை உயர்த்தி, ஜனவரி 2012 முதல் மார்ச் 2012 வரை மாதங்களுக்கான தனிப்பட்ட நிலுவை தொகையை உடனடியாக ரொக்கமாக வழங்கிட அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனை சென்னை மாநகராட்சியில் (விரிவாக்கம் செய்யபட்ட பகுதிகள் உட்பட) அமல்படுத்தப்பட வேண்டும்.

<u>அரசாணையின் விவரம் பின்வருமாறு:</u>

திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம், பெறுபவர்களுக்கு 01.01.2012 –லிருந்து இத்தனிப்பட்ட தொகையை உயர்த்தி வழங்குவதென தீர்மானித்து தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம், பெறும் பணியாளர்களுக்கு 01.01.2012– ஆம் நாளிலிருந்து மற்றும் ஒரு தனிப்பட்ட தொகையை உயர்த்தி வழங்கி கீழ்கண்டவாறு அரசு ஆணையிட்டுள்ளது.

| | |
|---|---|
| 01.01.2006–ஆம் நாளிலிருந்து திங்களொன்றுக்கு ரூபாய் 600 வரை திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம், பெறுபவர்களுக்கு | திங்களொன்றுக்கு ரூ. 20/– |
| 01.01.2006 – ஆம் நாளிலிருந்து திங்களொன்றுக்கு ரூபாய் 600–க்கு மேலாக திருத்தப்பட்ட தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் /மதிப்பூதியம் பெறுபவர்களுக்கு | திங்களொன்றுக்கு ரூ. 40/– |

ஜனவரி, பிப்ரவரி, மற்றும் மார்ச் 2012– ஆம் மாதங்களுக்கான தனிப்பட்ட நிலுவைத் தொகை உடனடியாக ரொக்கமாக வழங்கப்பட வேண்டும்.

உள்ளாட்சி மன்றங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் கீழ் பணியாற்றும் மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர்கள் மற்றும் துப்புரவு பணியாளர்கள் ஆகியோர்களுக்கும் இந்த ஆணை பொருந்தும்.

எனவே அரசாணை எண். 117 நிதி (படிகள்)த்துறை நாள். 09.04.2012 – ஐ சென்னை மாநகராட்சியில் (விரிவாக்கம் செய்யபட்ட பகுதிகள் உட்பட) நடைமுறைப்படுத்த (நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக) மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> "12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.140/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**பொ.து.ந.க.எண்.பி13/8312/2012**
**ஆணையாளர் அவர்களின் 18/05/2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.178/2012 பொருள் எண்.02

**அரசாணை அமலாக்கம் – பின்னேற்பு அனுமதி**

அரசாணை எண்.118, நிதி (ஓய்வூதியம்) துறை, நாள் : 10/04/2012ன் படி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு 01/01/2012 முதல் 58 விழுக்காட்டிலிருந்து 65 விழுக்காடாக உயர்த்தி திருத்திய அகவிலைப்படி வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வரசாணை உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொருந்துமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சியில் 16,046 ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்கள் உள்ளனர். இவ்வரசாணையை நடைமுறைப்படுத்தி திருத்தப்பட்ட அகவிலைப்படியை ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு, ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி மற்றும் குடும்ப ஓய்வூதிய அகவிலைப்படிக்கு கணக்கிடப்பட்டு வழங்க ஒரு ஆண்டிற்கு ரூ.06.16 கோடி செலவாகும். (01.01.2012 ஜனவரி முதல் மார்ச் 2013 வரை நடப்பு நிதியாண்டிற்கு மட்டும் ரூ.7.70 கோடி செலவிட வேண்டியுள்ளது. நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு மேற்கண்ட அரசாணை அமலாக்கம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, அரசாணை எண்.118 நிதி (ஓய்வூதியம்) துறை நாள் : 10.04.2012ன் படி திருத்தப்பட்ட அகவிலைப்படி 58 விழுக்காட்டிலிருந்து 65 விழுக்காடாக சென்னை மாநகராட்சி ஓய்வூதியர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியர்களுக்கு அமலாக்கம் செய்யப்பட்டமைக்கு நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.142/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.5.ந.க.எண்.இ1/1177/2012**
**ஆணையர் அவர்களின் 18.05.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.179/2012 பொருள் எண்.03

**துணை மின் நிலைய கட்டடம் இடிக்க அனுமதி**

| வார்டு எண்.53 | மண்டலம்—5 |
|---|---|
| இடிக்கப்பட்ட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | கெனால் தெருவில் உள்ள மாநகராட்சி துணை மின் நிலைய கட்டடம் |
| கட்டிடம் கட்டப்பட்ட துறை மற்றும் வருடம் | 40 ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டது. |
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் பரப்பளவு | 1600 சதுர .அடி |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | ரூ.16000/— |
| கட்டிடம் இடிப்பதற்கான காரணம் | மிகவும் மோசமான நிலையில் பழுதடைந்துள்ளது |
| திட்ட முன் மொழிவு | பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| வார்டு குழு தீர்மான (பரிந்துரை) எண் மற்றும் நாள் | 43 / 17.04.2012 |

மேற்சொன்ன கட்டிடத்தை இடிப்பதற்கு நிலைக்குழு (பணிகள்) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“11.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தில் தீர்மான எண்.122/2012, நாள்.11.06.2012—ன்படி இதற்கு நிலைக்குழு (பணிகள்)) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>க.து.ந.க.எண்.பி3/12560/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 08.05.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.180/2012 பொருள்எண்.04

**<u>5 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் NIIT நிறுவனத்தின் மூலம் கணித ஆய்வகம் அமைக்க அனுமதி.</u>**

சென்னை உயர்நிலைப் பள்ளி வி.பி.கோயில் தெருவில் NIIT நிறுவனம் மூலம் கணித ஆய்வகம் ரூ.1,21,330 (ரூபாய் ஒரு இலட்சத்து இருபத்தோராயிரத்து முன்னூற்று முப்பது செலவில்) அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் கணித ஆய்வகம் அமைப்பதன் மூலம் நவீன தொழிற் நுட்பத்தை உட்புகுத்தலின் பொருட்டும் மாணவர்கள் பயனடையும் வகையிலும் ஆர்வமுடன் கணிதம் கற்கவும் நினைவாற்றலை தூண்டும் விதமாகவும் இக்கணித ஆய்வகம் அமையும்.

இத்திட்டத்தை விரிவு படுத்தும் வகையில் மேலும் 5 சென்னை உயர்நிலைப் பள்ளிகளில் கணித ஆய்வகம் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**<u>சென்னை உயர்நிலைப் பள்ளிகளின் விவரங்கள்</u>**

| | | |
|---|---|---|
| 1. சென்னை உயர்நிலைப் பள்ளி கொடுங்கையூர் | – | ம – 4 |
| 2.சென்னை உயர்நிலைப் பள்ளி எஸ்.என்.செட்டி தெரு | – | ம – 5 |
| 3.சென்னை உயர்நிலைப் பள்ளி சர்மா நகர் | – | ம – 4 |
| 4.சென்னை உயர்நிலைப் பள்ளி நம்மாழ்வார் பேட்டை | – | ம – 6 |
| 5.சென்னை உயர்நிலைப் பள்ளி கீழ்ப்பாக்கம் | – | ம – 8 |

ஆகிய பள்ளிகளாகும் வரிசை 1ல் குறிப்பிடப்பட்டுள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி கொடுங்கையூரில் ஏற்கனவே கணினி ஆய்வகம் உள்ள காரணத்தாலும் போதிய இட வசதி இல்லாத காரணத்தாலும் கணித ஆய்வகம் அமைக்க இயலாது.

எனவே,

1. சென்னை உயர்நிலைப் பள்ளி கொடுங்கையூர் மண்டலம் – 4க்கு பதிலாக அதே மண்டலம் – 4ல் உள்ள சென்னை உயர்நிலைப் பள்ளி ஹரிநாராயணபுரத்தில் NIIT நிறுவனம் மூலம் கணித ஆய்வகம் அமைக்கவும்
2. மேற்கண்ட 5 உயர்நிலைப் பள்ளிகளில் NIIT நிறுவனம் மூலம் கணித ஆய்வகம் அமைக்க முதன்மைச் செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது ஒரு பள்ளிக்கு கணித ஆய்வகம் அமைக்க ரூ.1,21,330 என 5 பள்ளிகளுக்கு ரூ.1,21,330x5=ரூ.6,06,650/–(ரூபாய் ஆறுலட்சத்து ஆறாயிரத்து அறுநூற்று ஐம்பது மட்டும்) செலவில் மேற்கொள்ளவும்
3. இச்செலவினத்தை கணக்கு குறியீட்டு எண் EF 480 – 82 - 01 DP 230 – 11 – 01 – 01 கல்வித் தரமேம்பாடு உயர்நிலைக் கல்வி என்ற தலைப்பில் மேற்கொள்ளவும்,

நிலைக்குழு(கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“06.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.37/2012, நாள்.06.06.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.148/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>க.து.ந.க.எண்.அ2/9474/ 2011</u>**

**<u>ஆணையர் அவர்களின் 29.05.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.181/2012 பொருள்எண்.05

**<u>சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவியர்களுக்கு 2012 – 2013 கல்வியாண்டில் ஒரு வருடத்திற்கு தேவையான சானிடரி நாப்கின்கள் கொள்முதல் செய்ய அனுமதி.</u>**

சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பயிலும் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை உள்ள மாணவியர்களின் உடல் ஆரோக்கியம் காக்கும் வகையிலும், சுகாதாரம் பேணும் வகையிலும் 2012 – 2013 கல்வியாண்டில் வழங்குவதற்காக சானிடரி நாப்கின்கள் விலையில்லா திட்டத்தின் கீழ் வழங்க ஒப்பம் மூலம் கோரப்பட்டு கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்டதில் கீழ்க்கண்டுள்ளவாறு மூன்று நிறுவனங்கள் ஒப்பத்தில் கலந்து கொண்டுள்ளனர்.

| Sl. No | Name of the Companies |
|---|---|
| 1 | Bella Premier Happy Hygiene care Pvt., Ltd., |
| 2 | Bhagirathi Traders / Salem |
| 3 | RMP Agencies / Coimbattor |

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையின் மூலம் மூன்று நிறுவனங்களின் சானிடரி நாப்கின்களின் மாதிரிகள் தரபரிசோதனை செய்ததில் Bella Premier Happy Hygiene Care Pvt Ltd,. என்ற நிறுவனத்தின் சானிடரி நாப்கின் நல்ல முறையில் அமைந்துள்ளதாக சுகாதார அலுவலர் அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட Bella Premier Happy Hygiene Care Pvt Ltd,. என்ற நிறுவனத்தை அழைத்து விலைக்குறைப்பு பேச்சு வார்த்தை நடத்தப்பட்டதில் ஒரு சானிடரி நாப்கின் பாக்கெட்டின் விலை ரூ. 17.75 என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1) 2012 - 2013 ஆம் ஆண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளியில் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மொத்தம் 29,679 மாணவியர்களுக்கு ஒரு ஆண்டுக்கு தேவையான 3,47,670 சானிடரி நாப்கின்கள் ரூ. 17.75 பைசா என கணக்கிடப்பட்டு மொத்தம் ரூ.61,71,142/- செலவில் இத்திட்டத்தினை செயல்படுத்தவும்,
2) ஒப்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள Bella Premier Happy Hygine care Pvt.,Ltd., என்ற நிறுவனத்திற்கு கொள்முதல் ஆணை வழங்கவும், ரூ.61,71,142/- தொகையினை அந்நிறுவனத்திற்கு காசோலையாக வழங்கவும்,
3) இச்செலவினத்தை 230 – இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் துறை குறியீடு E பிரிவு 80-82-01, கணக்கு குறியீடு 230-11-02-02 உயர்நிலை மற்றும் மேல்நிலை என்ற கல்விச் செலவின கணக்குக் குறியீட்டு தலைப்பின் கீழ் ரூ, 61,71,142/-னை மேற்கொள்வதற்கும்

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழு (கல்வி) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**06.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (கல்வி) கூட்டத்தில் தீர்மான எண்.**38/2012**, நாள்.**06.06.2012**–ன்படி இதற்கு நிலைக்குழு (கல்வி) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரி விதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது"**.**

"**12.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**149 /2012** நாள்.**12.06.2012**–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>சு.து.கா.பி.ந.க.எண்.அ1/515/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 12.05.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.182/2012 பொருள் எண்.06

**<u>பொது சுகாதாரத்துறை கால்நடைப்பிரிவு சென்னை மாநகராட்சி பெருநகர் பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகள் பற்றிய பொதுமக்கள் புகார்களின் மீது நடவடிக்கை எடுக்க தனியார் மூலமாக பிடிப்பதற்கு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் பன்றிகளால் பொது மக்களுக்கு சுகாதார கேடும், பல்வேறு தொற்று நோய்களை ஏற்படுத்தும் சூழ்நிலைகளும் ஏற்படுத்துகின்றன. மேலும் போக்குவரத்திற்கு இடையூறாகவும் உள்ளன. பொது மக்கள் மற்றும் மக்கள் பிரநிதிகள் மூலம் பெறப்படும் பன்றிகள் பற்றிய புகார்கள் மீது கடந்த ஆண்டுகளில் கீழ்கண்டவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. திரியும் பன்றிகளை பிடிக்க அந்தந்த பகுதிகளின் சுகாதார ஆய்வாளர், துப்புரவு அலுவலர், பன்றிகள் பிடிக்கும் நபர்கள், கால்நடை உதவி மருத்துவர் அடங்கிய குழு மண்டல சுகாதார அலுவலர் மேற்பார்வையில் அந்தந்த பகுதிகளில் திரியும் பன்றிகளை பிடித்து அகற்றப்பட்டு சுகாதார முறையில் அப்புறப்படுத்தப்படுகிறது. பிடிக்கப்படும் பன்றி ஒன்றிற்கு ரூ.80/— வீதம் மண்டல சுகாதார அலுவலர் மூலம் பன்றி பிடிக்கும் நபருக்கு மண்டல அளவில் பணம் பட்டுவாடா செய்யப்படுகிறது. விலங்கியல் ஆர்வலர்கள் மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் எதிர்ப்புகள் தெரிவித்ததால் 2006 ஆம் ஆண்டு காவல்துறை மூலம் பன்றிகள் பிடிப்பவர்கள் மீது பொது சுகாதாரச் சட்டம் 1939ன் பிரிவு 139ன்படி நேரடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. மேலும், தமிழ்நாடு நகர் சார்ந்த பகுதிகளில் விலங்கு மற்றும் பறவைகள் கட்டுப்பாடு சட்டம் மற்றும் முறைப்படுத்தும் சட்டம் 1997—ன்படியும் அரசாணை நிலை எண்.157, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 25.08.1998—ன்படியும் மற்றும் 30.06.2004 நாளிட்ட உயர்நீதி மன்ற பேராணையின்படியும் (W.P.No.3965 மற்றும் பல) தெருக்களில் சுற்றித்திரியும் மாடுகள், எருமைகள் மற்றும் பன்றிகளை பிடித்து உரிய மேல் நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

தற்சமயம் சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்த பின்பு இணைத்த பகுதிகளிலிருந்தும் மக்களிடமிருந்தும், மக்கள் பிரதிநிதிகளிடமிருந்தும் புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. பன்றிக் காய்ச்சல் நோய் பற்றி பத்திரிகை செய்திகள், புகார்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது.

திரு.ஏ.ராமநாதன், என்பவரின் கடிதத்தில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதிகளில் திரியும் பன்றிகளை பிடிப்பதாகவும், பிடிக்கப்படும் பன்றி ஒன்றிற்கு ரூ.100/— வீதம் பிடிக்கப்படும் பன்றிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப தொகையினை மாநகராட்சி கரூவூலத்தில் கட்டி விடுவதாகவும் தெரிவித்துள்ளார், இதே போல், திரு. மகேந்திரன், பன்றி பிடிப்பவரும் விருப்பக்கடிதம் அளித்துள்ளார்கள். சென்னை மாநகராட்சியும் உரிய ஆணை வழங்கினால் தனது பணியினை செய்வதாகவும் தெரிவித்துள்ளார்கள். நகர சுகாதார அலுவலர், திருச்சி மாநகராட்சி அவர்களை தொலைப்பேசியில் தொடர்பு கொண்டதில் மேற்கூறிய நடைமுறை இரண்டு மாதங்களாக சிறப்புற செயல்படுவதாகவும், 650 திரியும் பன்றிகளுக்கு மேல் பிடித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த செயல்முறையில் பன்றிகள் பிடிக்க பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் பன்றிகளை ஏற்றிச் செல்வதற்கு தேவைப்படும் வாகனங்களை பன்றி பிடிப்பவர் மூலமே ஏற்பாடு செய்து கொள்ளப்படுகிறது. சென்னை மாநகராட்சியில் தற்போதைய நடைமுறையில் பன்றி ஒன்றிற்கு ரூ.80/— வீதம் செலவிடும் முறையும் வாகன போக்குவரத்து செலவுகளையும் தவிர்க்கலாம்.

எனவே, இந்த செயல்முறையை சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த கீழ்கண்ட 1 முதல் 16 இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

01. திரியும் பன்றிகளை பிடிக்கும் பணிக்கு இரண்டு அல்லது மூன்று பன்றி பிடிக்கும் நபர்களுக்கு அனுமதி வழங்கவும், விருப்பக்கடிதம் அளித்துள்ள திரு ஏ.ராமநாதன் மற்றும் திரு. மகேந்திரன் அவர்களுக்கு செயல்முறை ஆணை வழங்கவும்,
02. சென்னை மாநகராட்சி பெருநகர் எல்லைக்குட்பட்ட 200 வார்டுகளில் சுற்றித் திரியும் பன்றிகளை மட்டுமே பிடிக்கப்பட வேண்டும். பன்றி வளர்ப்பு மையங்களில் உள்ளே சென்று பிடிக்கக்கூடாது என்ற நிபந்தனையுடனும்,

03. பன்றிகளை பிடிக்கும்போது அப்பன்றிகளுக்கு எந்தவிதமான காயம் மற்றும் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படாவண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டும்.

04. பிடித்த பன்றிகளை அப்புறப்படுத்தும் காலம் வரை அதற்குரிய தீவனங்கள் அளிக்கப்பட வேண்டும்.

05. பன்றிகளை பிடிக்கும்போது பொது மக்களுக்கும், போக்குவரத்துக்கும் எந்த விதமான இடையூறின்றி பணிமேற்கொள்ள வேண்டும்.

06. பன்றிகளை பிடிக்கும்போது அதன் உரிமையாளர்கள் தலையிட்டு பிரச்சனைகள் ஏற்பட்டால், சம்பந்தப்பட்ட மண்டல அலுவலகத்தில் தெரிவித்து அலுவலக ரீதியான நடவடிக்கை மட்டுமே எடுக்க வேண்டும்.

07. பன்றிகளை பிடிக்கும் போது அவைகளுக்கு எதிர்பாராத விதமாக விபத்து/இறப்பு நேரிட்டால் அதற்கு பன்றிபிடிப்பவரே முழு பொறுப்பாகும்.

08. பன்றிகளை பிடிப்பதற்கு முன்பாக சம்பந்தப்பட்ட வார்டு சுகாதார ஆய்வாளர்கள், துப்புரவு அலுவலர் மற்றும் கால்நடை உதவி மருத்துவர் முன் அனுமதியோடு அவர்களுடைய மேற்பார்வையின் கீழ் பிடிக்கப்பட வேண்டும்.

09. பன்றிகளை காலை 6.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பிடிக்கப்பட வேண்டும். மேற்கண்ட நேரங்களில் பிடிக்கப்படும்போது உயர் அலுவலர் முன்நிலையில் மட்டுமே இப்பணி நடைபெறவேண்டும்.

10. பன்றிகளை பிடிக்கும்போது தேவையான உபகரணங்களை பன்றிபிடிப்பவரே கொண்டு வரவேண்டும்.

11. பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்துவதற்கு முன்பு சுகாதார ஆய்வாளரிடம் சான்று பெறப்பட வேண்டும்.

12. பன்றிகளை பிடித்த எண்ணிக்கைக்கு உரியத்தொகையினை அன்றைய தினமே மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட வேண்டும்.

13. பன்றிகளை பிடித்ததற்கான தினசரி அறிக்கையினை பதிவேடுகளாக பராமரிக்கப்பட வேண்டும்.

14. பிடிக்கப்பட்ட பன்றிகளின் எண்ணிக்கைக்கு ஏற்ப (பன்றி ஒன்றிற்கு ரூபாய் 100/– வீதம்) உரியத்தொகையினை சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துவதற்கு ஏதுவாக கணக்கு குறியீடு எண் நிதி ஆலோசகர் மூலம் வழங்குவதற்கும்

15. பிடிக்கப்பட்ட பன்றிகளை எக்காரணத்தை கொண்டும் சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் மீண்டும் திரிய விடக்கூடாது என்ற நிபந்தனையுடனும்,

16. இந்தப்பணி மேற்கொள்ளும் போது உரிய பாதுகாப்பினை காவல்துறை மூலம் வழங்கிட, ஆணையர், சென்னை மாநகர காவல்துறை அவர்களுக்கு கடிதம் அனுப்பவும்.

30.05.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொது சுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண்.09/2012, நாள்.30.05.2012ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.145/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>சு.து.கா.பி.ந.க.எண்.அ1/447/2012</u>**

**<u>ஆணையர் அவர்களின் 03.05.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.183/2012 பொருள் எண்.07

**<u>சென்னை மாநகராட்சி நாய் இன கட்டுப்பாட்டு மையம் தனியார் நாய் பிடிக்கும் பணியாளர்கள் ஊக்கத்தொகை வழங்குவதற்காக அலுவல் முன் பணம் (Imprest) Rs.25,000/- லிருந்து Rs.75,000/-ஆக உயர்த்துவதற்கு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி சுகாதாரத்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் நாய் இன கட்டுப்பாட்டு மையம் மூலமாக சென்னை மாநகரில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடிக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நாய் பிடிக்கும் பணியாளர்களுக்கு நாய் ஒன்றிற்கு ரூ.25/—என வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.50/—மன்றத் தீர்மான எண்.295/11 நாள்.23/11/11ன்படி உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், சென்னை மாநகராட்சியில் கூடுதலாக 5 மண்டலங்கள் அதிகரிக்கப்பட்டதால் தற்போது அதிக அளவில் நாய்கள் பிடிக்கப்படுகின்றது. மேலும் இப்பணி தீவிரப்படுத்தும்போது பிடிக்கப்படும் நாய்களின் எண்ணிக்கை மாதம் ஒன்றிற்கு 1400 லிருந்து சுமார் 2,000 எண்ணிக்கையில் உயர்ந்து உள்ளது. இப்பணியில் ஈடுபட்டு வரும் தனியார் நாய் பிடிக்கும் பணியாளர்களுக்கு நாய் ஒன்றுக்கு ரூ.50/— வீதம் பிடிக்கப்படும் நாய்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்ய வேண்டியிருப்பதாலும், தற்சமயம் உள்ள அலுவல் முன் பணம் (Imprest) ரூ.25,000/—ல் வங்கியிருப்பு ரூ.2,000/— போக மீதமுள்ள ரூ.23,000/—ல் அனைவருக்கும் உடனுக்குடன் பணம் பட்டுவாடா செய்வதில் சிரமம் ஏற்படுவதால் மேற்படி முன் பணத்தை (Imprest) ரூ.75,000/— என உயர்த்தி வழங்கவும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள மாநகர சுகாதார அலுவலர் அவர்களின் நிதி செலவிடும் அளவு அதிகாரத்தினை ஆணையரின் அறிவுரையின்படி காலதாமதத்தினை தவிர்க்க கால்நடை மருத்துவ அலுவலர் அவர்களுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, கீழ்கண்ட மூன்று இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பொது சுகாதாரம்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது,

1) தனிப்பட்ட நாய் பிடிக்கும் பணியாளர்களுக்கு உடனுக்குடன் பணம் பட்டுவாடா காலதாமதமின்றி செய்வது அவசியம் என்பதாலும், நாய்பிடிக்கும் பணி தொய்வில்லாமல் நடப்பதற்கும் அலுவல் முன்பணம் ரூ.25,000/—லிருந்து ரூ.75,000/— என உயர்த்தி வழங்கிடவும்,
2) மாநகர சுகாதார அலுவலர் அவர்களின் நிதி செலவிடும் பணியினை கால்நடை மருத்துவ அலுவலர் அவர்களுக்கு மாற்றி கால்நடைப்பிரிவில் மேற்கொள்ளவும், நிதி செலவிடும் அளவினை ரூ.25,000/—லிருந்து ரூ.75,000/—ஆக உயர்த்தப்பட்டமைக்கு மன்றத்தீர்மானத்தின் பின்னேற்பு அனுமதியும்
3) மேற்படி செலவினத்தை தற்போது நடைமுறையில் உள்ள லீதல் சேம்பர் (Lethal Chamber ) Function Code 40—46—00ல் செயல்படுவதை கால்நடை மருத்துவ அலுவலர் Veterinary Function Code 40-43-02ல் மாறுதல் செய்து செலவினம் மேற்கொள்ளவும்.

> ''30.05.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தில் ஊக்கத்தொகை ரூ.75,000/— என்பதற்கு பதிலாக ரூ.50,000/— ஆக நிர்ணயிக்கலாம் என்ற கருத்தின் அடிப்படையில் தீர்மான எண்.10/2012 நாள் 30.05.2012—ன் படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.
>
> ''12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 146 /2012 நாள்.12.06.2012—ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**இ.பொ.து.ந.க.எண்.தொ2/123/2012**
**ஆணையர் அவர்களின் 24.5.2012 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண்.184/2012 பொருள் எண்.08

**பயனற்ற டயர்கள் மற்றும் ட்யூப்புகள் கழிவு செய்து ஏலமுறையில் விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கும் வடசென்னை வாகன பணிமனையில் கனரக வாகன பண்டக சாலையில் கனரக வாகன டயர் (900 x 20 = 190 எண்ணிக்கை 10.00 x 20 டயர் – 40 எண்ணிக்கை) 230 டயர்களும், 700 டயூப்களும் பயன்படுத்த இயலாத நிலையில் பார்வை 1ல் கண்ட ஆணையின்படி தகுதி வாய்ந்த போக்குவரத்து வாகனங்கள் மற்றும் டயர் பொருட்கள் தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு பலமுறை இட்டயர்களை பெற்றுச் செல்ல கடிதம் அனுப்பப்பட்டது. எந்தக் கூட்டுறவு சங்கங்களும் முன்வராத நிலையில் இந்த டயர்களை கழிவு என தீர்மானிக்கவும், ஒப்பம் ஏல முறையில் விற்பனை செய்யவும் ஒரு தொழில் நுட்பக்குழு அமைக்கப்பட்டது.

இக்குழுவில் 22.10.2010 அன்று ஆய்வு செய்தது. பார்வை–3ல் அளிக்கப்பட்ட ஆய்வறிக்கையில் இந்த டயர்களை மற்றும் ட்யூப்கள் கழிவு செய்யப்படலாம் என்றும் இதனை ஒப்பம் ஏலம் மூலம் விற்பனை செய்யலாம் என்றும் தனது ஆய்வறிக்கையில் அளிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரரர்களிடமிருந்து ஏலம் விடும் பொருளின் மதிப்பில் 1 சதவீகிதம் முன் வைப்பு தொகையாக பெற்ற பின்னரே ஏலதாரர்களை ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுகிறது. இந்நிகழ்வில் முன்வைப்பு தொகை ரூ. 2000/– பெறப்பட்ட நிலையில் ஏலம் விடும் பொருட்களின் மதிப்பு ரூ. 2,00,000/–குறைவாக இருக்கும் என கருதப்படுகிறது. பொருட்களின் விலை ரூ. 5,00,000/– ற்கு மேல் இருந்தால் தான் தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படும் என்ற நிலையில் டயர், மற்றும் டியூப் ஏலம் விட சென்னை மாநகராட்சி அறிவிப்பில் மட்டுமே விளம்பரம் செய்யப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் 12.11.2010ல் நடத்தப்பட்ட ஏலத்தில் 10 ஏலதாரர்கள் கலந்து கொண்டனர். ஏலம் முடிந்தப்பிறகு ஒப்பந்தப்புள்ளி பெட்டியை திறந்து பார்த்ததில் 11.11.2010 அன்று எவரும் ஒப்பந்தப்புள்ளி அளிக்கவில்லை என தெரிய வந்துள்ளது. இவ் ஏலத்தில் திரு.ராமராஜ் அவர்கள் 900 x 20 கனரக டயர்கள் = 190 எண்ணிக்கை, 10.00 x 20 கனரக டயர்கள் 40 எண்ணிக்கை மற்றும் டியூப்கள் 900 x 20 = 700 எண்ணிக்கைக்கு மொத்தம் ரூ. 63,000/– கோரியுள்ளார். உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் செலுத்த வேண்டிய ஒப்ப வைப்புத் தொகை (20%) ரூ.12,600/– வசூலித்து சென்னை மாநகராட்சி கரூவுலத்தில் செலுத்துச்சீட்டு செலுத்தப்பட்டுள்ளது. பின்னடைந்த ஏலதாரர் அனைவருக்கும் டேவணித்தொகை ( வரைவு காசோலை) ஏலம் முடிந்தவுடன் திரும்ப அளிக்கப்பட்டு விட்டது.

பார்வை–1ல் அளிக்கப்பட்டட அரசாணையின்படி, அரசுத் துறைகளில் கழிவு செய்யப்படும் டயர் மற்றம் ட்யூபுகளை அரசு பரிந்துரை செய்து அரசாணை வழங்கப்பெற்ற சிறு தொழில் கூட்டுறவு சங்கங்களுக்கு கனரக ஊர்திகளின் உருளை ( ஒன்று ) ரூ. 300/– க்கும் கனரக ஊர்திகளின் குழாய் (ஒன்று) ரூ.60/–க்கும் வழங்கலாம் எனவும் அதனின் அடிப்படையில் கூட்டுறவு சங்கங்களுக்கு வட சென்னை வாகன பணிமனையில் உள்ள டயர்கள் மற்றும் டியூப்களை பார்வையிடவும் எடுத்துச் செல்லவும் ஆணையரின் ஆணை பெற்று தகுதி வாய்ந்த கூட்டுறவு சங்கங்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அவ்வாறு அழைக்கப்பட்ட பல்வேறு கூட்டுறவு சங்கங்கள், மேற்கூறிய டயர்கள் மற்றும் ட்யூபுகள் மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ளதால் தங்கள் செயல்பாட்டிற்கு அவை ஏற்றவை இல்லையென்பதால், இந்த டயர்கள் மற்றும் ட்யூப்களை பெற்றுக் கொள்ள எவரும் முன்வரவில்லை. எனவே மிகவும் பழுதடைந்த இவற்றை ஒப்பம் ஏலம் மூலம் தீர்வு செய்யப்பட்டது. 12.11.2010 அன்று நடந்த ஏலத்தில் திருவாளர். ஆர்.ஜி. ராமராஜ் மிகவும் பழுதடைந்த டயர்கள் 900 x 20 கனரக டயர்கள் 190 எண்ணிக்கை, 10.00 x 20 கனரக டயர்கள் 40 எண்ணிக்கை மற்றும் ட்யூப்கள் 900 x 20 – 700 எண்ணிக்கை ஒரே தொகுப்பாக ரூ.63,000/– ஆக ஏலத்தில் எடுத்துள்ளார். இத்தொகை அரசாணைதொகையைவிட (கனரகஉருளை ரூ.300 x 230 = 69,000 + கனரக குழாய் ரூ. 60 x 700 = 42,000/–மொத்தம்ரூ.1,11,000/–) ரூ. 48,000/– குறைவாக இருந்தாலும் கூட்டுறவு சங்கங்கள் இந்த டயர்கள் மற்றும் ட்யூப்களை பெற்றுக் கொள்ளாத நிலையில் ஏலத்தில் அதிகம் கேட்கப்பட்ட திரு.ராமராஜ் அவர்களுக்கு ஒரே தொகுப்பாக கனரக டயர்கள் மற்றும் ட்யூப்கள் விற்பனை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்படுகிறது.

இக்கோப்பு **15.6.2011** அன்று ஆணையர் அவர்களின் ஆணை பெற்று இத்துறையில் பெறப்பட்டது. இதில் நிலைக்குழு மற்றும் மன்றத்திற்கு ஆணை பெறப்படாததாலும், உள்ளாட்சி தேர்தலின் தொடர்ச்சி பணியிருந்ததாலும், நவம்பர் மாதம் மாமன்றம் கூட்ட தொடர் அமைக்கப்பட்டப்பின் இக்கோப்பு மன்றத்தில் வைக்கலாம் என நினைத்து நிலைவையில் வைக்கப்பட்டது. மன்றம் கூடிய பின் நகரம் விரிவாக்கம் சம்மந்தமான பணிகள் காரணமாகவும், அலுவலர்கள் மாற்றப்பட்ட நிலையில் தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே,

1) ஆணையர் ஆணையின்படி அமைக்கப்பட்ட தொழில் நுட்பக்குழுவின் பரிந்துரையின்படி வடசென்னை வாகன பணிமனையில் உள்ள ( 900 x 20 டயர் – 190 எண்ணிக்கை ) ( 10 .00 x 20 டயர் = 40 எண்ணிக்கை) ( 900 x 20 டியூப் = 700 எண்ணிக்கை) டயர் மற்றும் ட்யூப்கள் கழிவு செய்யவும்,

2) ஒப்ப ஏலத்தில் அதிக விலைப்புள்ளிகள் கோரிய ஏலதாரர் திருவாளர். ஆர்.ஜி.ராமராஜ் அவர்களுக்கு மிகவும் பழுதடைந்த 900 x 20 கனரக டயர்கள் – 190 எண்ணிக்கை, 10.00 x 20 கனரக டயர்கள் 40 எண்ணிக்கை மற்றும் டியூப்கள் 900 x 20 – 700 எண்ணிக்கையில் ஒரே தொகுப்பாக உள்ளது உள்ளபடி நிலையில் ரூ. 63,000/–க்கு விற்பனை செய்யவும்,

3) மேற்கண்ட டயர்கள் மற்றும் டியூப்கள் விற்பனை செய்யும்பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பு தொகை 20% ரூ.12,600/–ஐ சரிகட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகையை மற்றும் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள விற்பனை வரியையும் (மொத்த விலைக்கு) தனித்தனியாக செலுத்தும் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கரூவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்றுக் கொண்டு செல்லவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் ( பணிகள் ) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது..

**11.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள் ) கூட்டத்தின் தீர்மான எண். **114/2012** நாள்.**11.6.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**12.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**152/2012** நாள். **12.06.2012**–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**இ.பொ.து.ந.க.எண்.தொ5/521/2012**
**ஆணையர் அவர்களின் 18.5.2012 நாளிட்ட குறிப்பு.**

தீர்மான எண்.185/2012 பொருள் எண்: 09

**பயனற்ற பிளாஸ்டிக் பின் கழிவுகள் ஏலமுறையில் விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சியின் பல்வேறு நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட பயனற்ற பிளாஸ்டிக் பின் கழிவுகள் 15 மெட்ரிக் டன் எடை உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யும்பொருட்டு மதிப்பாய்வு செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக்குழு 27.3.2012 அன்று மாட்டு தொழுவத்தில் உள்ள பிளாஸ்டிக் பின்களை நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அவை அனைத்தும் பயனற்றவை என கழிவு செய்யப்பட்ட நிலையில் திறந்த வெளியில் பழுதடைந்து காணப்படுவதால் ஒரு கிலோ ரூ.16/– வீதம் 15 மெட்ரிக் டன்னுக்கு (15,000 கிலோ) மொத்த மதிப்பாக ரூ. 2,40,000/– என நிர்ணயித்தும், இதனை எடை கணக்கில் உள்ளது உள்ளபடி ஒப்பம் ஏலம் கோரி விற்பனை தீர்வு செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 9.5.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறவும் 10.5.2012 அன்று ஏலம் நடத்தவும் இறுதி தேதி அறுதியிட்டு மற்றும் முறையே சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் மட்டும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இப்பொருளின் மதிப்பாய்வுத் தொகை ரூ. 5,00,000/– கீழ் உள்ளதால் தினசரி வெளியாகும் தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படவில்லை. 10.5.2012 அன்று நடத்தப்பட்ட ஏலத்தில் 14 ஏலதாரர்கள் கலந்து கொண்டு விலைப்புள்ளி கோரினார். அதில் உயர்ந்த விலை கோரிய விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | விவரம் | தொழிற் நுட்பக் குழு நிர்ணயித்த மதிப்பு | கோரிய விலை ரூ. | உயர்ந்த விலை அளித்த ஏலத்தாரர்கள் |
|---|---|---|---|---|
| 1. | பயனற்ற பிளாஸ்டிக் 15 மெட்ரிக் மன் ( 15,000) கிலோ எடை அளவு | ரூ. 2,40,000<br>ஒரு கிலோ ரூ. 16/– | ரூ. 3,01,500/–<br>ஒரு கிலோ<br>ரூ. 20.10 | ஆல்பா பிளாஸ்டிக்ஸ் |

உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் செலுத்த வேண்டிய ஒப்ப வைப்புத் தொகை ( 20%) ரூ. 60,300/– க்கு பதிலாக அதிகமாக ரூ. 60,500/– வசூலித்து சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தச் சீட்டு மூலம் 10.5.2011 அன்று ( ந.கோ. எண். 321.) செலுத்தப்பட்டு விட்டது. பின்னடைந்த ஏலதாரர் அனைவருக்கும் டேவணித் தொகை ( வரைவு காசோலை ) ஏலம் முடிந்தவுடன் திரும்ப அளிக்கப்பட்டு விட்டது.

மாநகராட்சியில் உள்ள பல நிர்வாக பிரிவுகளிலிருந்து பெறப்படும் பிளாஸ்டிக் கழிவுகள் பொது தொழிற்சாலை மற்றும் “சி” மாட்டு தொழுவத்திற்கு வந்த வண்ணம் உள்ள நிலையில் கழிவு செய்யப்பட்ட பிளாஸ்டிக் பின் கழிவுகள் அனைத்தும் வெய்யிலிலும், பழையிலும் பாதிக்கப்பட்டு மேலும் சேதடைய வாய்ப்பு உள்ளது. இவ்விடத்தில் வாகனங்கள் நிறுத்தப்பட்டு இருப்பதாலும், மின்சார கசிவினாலும், தீ விபத்துக்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

எனவே ஒரு கிலோ எடைக்கு ரூ.20.10 பெறப்பட விலையானது தொழிற்நுட்பக்குழுவினால் நிர்ணயித்த மதிப்பு ரூ.16.00 ஐ விட ரூ.4.10 அதிகமுள்ள நிலையில் இந்த விலையானது ஏற்புடையதாக கருதப்படுவதால் 15 மெட்ரிக் டன் எடை அளவு பயனற்ற பிளாஸ்டிக் பின் கழிவுகளை வாங்குவதற்கு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் மெசர்ஸ் ஆல்பா பிளாஸ்டிக்ஸ் அவர்களுக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டது.

எனவே,

1) பல்வேறு நிர்வாகப் பிரிவுகளிலிருந்து பெறப்பட்ட பயனற்ற பிளாஸ்டிக் பின் கழிவுகள் 15 மெட்ரிக் டன் ( 15000 கிலோ) எடை அளவு பயனற்றவை என கழிவு செய்யவும்,

2) மேற்கண்ட 15 மெட்ரிக் டன் எடை அளவு பயனற்ற பிளாஸ்டிக் பின் கழிவுகளை வாங்குவதற்கு ஏலத்தில் மெசர்ஸ் ஆல்பா பிளாஸ் டிக்ஸ் அவர்கள் கோரிய (மொத்தம் ரூ.3,01,500) விலையானது தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து நிர்ணயித்த (மொத்தம் ரூ.2,40,000) மதிப்பை விட ரூ. 61,500/– கூடுதலாக இருப்பதாலும் அன்னாருக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்,

3) மேற்கண்ட பயனற்ற பிளாஸ்டிக் பின் கழிவுகளை விற்பனை செய்யும்பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்ப வைப்புத் தொகை 20% ரூ.60,500/–ஐ சரி கட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகை மற்றும் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள விற்பனைவரியையும் (மொத்த விலைக்கு ) தனித்தனியாக செலுத்துச் சீட்டின் மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்று கொண்டு செல்லவும் ,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் ( பணிகள் ) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது..

11.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மானஎண். 115/2012 நாள்.11.6.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.153 /2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**இ.பொ.து.ந.க.எண்.தொ2/77/2012**
**ஆணையர் அவர்களின் 06.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.186/2012 பொருள் எண்.10

**சென்னை மாநகராட்சி பயனற்ற அச்சக இயந்திரங்கள் கழிவுகள் ஏலம் முறையில் விற்பனை செய்தல்**

சென்னை மாநகராட்சியில் கட்டுப்பாட்டில் அமைந்திருக்கும் அச்சகத்தில் பல்வேறு நிர்வாக பிரிவுகளிலிருந்து அச்சடிக்க வேண்டியவை அச்சடிக்கப்பட்டும், அச்சடித்தப்பிறகு மேல் உரைகள் இடப்பட்டும் அந்தந்த நிர்வாகப் பிரிவிற்க்கு அனுப்பப்படுகிறது. இதற்காக பலதரப்பட்ட இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களின் மூலம் இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றது. தற்பொழுது அச்சகம் நவீன மயமாக்கப்பட்டதால் பல வருடங்களாக உபயோகப்படுத்தப்பட்டு, உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ள 16 வகையான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யும்பொருட்டு மதிப்பாய்வு செய்வதற்கு மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்ட தொழில் நுட்பக்குழு 27.03.2012 அன்று அச்சகத்தில் 16 வகையான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்களை நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. அவை அனைத்தும் பயனற்றவை என கழிவு செய்யப்பட்ட நிலையில் உபயோகமற்று பழுதடைந்து காணப்படுவதால், ஒரு தொகுப்பாக ரூ.1,30,000/– என நிர்ணயித்தும், இதனை உள்ளது உள்ளபடி ஒப்பம் ஏலம் கோரி விற்பனை தீர்வு செய்யலாம் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அதன்படி 16.05.2012 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறவும் 17.05.2012 அன்று ஏலம் நடத்தவும் இறுதி தேதி அறுதியிட்டு மற்றும் முறையே சென்னை மாநகராட்சி செய்தி வெளியீட்டில் மட்டும் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. இப்பொருளின் மதிப்பாய்வுத் தொகை ரூ.5,00,000/– கீழ் உள்ளதால் தினசரி வெளியாகும் தமிழ் நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்படவில்லை. 17.05.2012 அன்று நடத்தப்பட்ட ஏலத்தில் 15 ஏலதாரர்கள் கலந்து கொண்டு விலைப்புள்ளி கோரினார். அதில் உயர்ந்த விலை கோரிய விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது.

| வரிசை எண் | விவரம் | தொழிற் நுட்பக் குழு நிர்ணயித்த மதிப்பு | கோரிய விலை ரூ. | உயர்ந்த விலை அளித்த ஏலத்தாரர்கள் |
|---|---|---|---|---|
| 1. | 16 வகையான அச்சக இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் | ரூ.1,30,000 ஒரு தொகுப்பாக | ரூ.1,51,000/– | M. பரந்தாமன் |

உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் செலுத்த வேண்டிய ஒப்ப வைப்புத் தொகை (20%) ரூ.30,200/– வசூலித்து சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்துச் சீட்டு மூலம் 18.05.2011 அன்று (ந.கோ.எண். 3131) செலுத்தப்பட்டு விட்டது. பின்னடைந்த ஏலதாரர் அனைவருக்கும் டேவணித் தொகை (வரைவு காசோலை) ஏலம் முடிந்தவுடன் திரும்ப அளிக்கப்பட்டு விட்டது.

மாநகராட்சி அச்சகத்தில் உள்ள பல வருடமாக உபயோகப்படுத்தப்பட்டு, உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ள 16 வகையான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் இன்னும் தேங்கியிருந்தால் அவை இடத்தை ஆக்கிரமிப்பதுடன், வெளிச்சந்தையில் விற்பனை செய்ய இயலாத நிலை ஏற்பட வாய்ப்பு உள்ளது. எனவே 16 வகையான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் ஒரே தொகுப்பாக ரூ.1,51,000/– பெறப்பட்ட விலையானது தொழிற்நுட்பக்குழுவினால் நிர்ணயித்த மதிப்பு ரூ.1,30,000/–ஐ விட ரூ.21,000/– அதிகமுள்ள நிலையில் இந்த விலையானது ஏற்புடையதாக கருதப்படுவதால் 16 வகையான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கு ஏலத்தில் உயர்ந்த விலை கோரிய ஏலதாரர் மெசர்ஸ் M. பரந்தாமன் அவர்களுக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யலாம் என தெரிவிக்கப்படுகிறது.

1. அச்சகத்தில் பலவருட காலமாக பயன்படுத்தப்பட்டு, பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள 16 வகையான கீழ்கண்ட இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் பயனற்றவை என கழிவு செய்யவும்.

1. Gestener 5308B Digital copy Printer - 1No.
2. Risograph GR 3710 copy Printer - 1 No.
2A. Risograph duplicater GR 3710 Ink drum – 1 No.
3. Gestener 5327 Model – 1 No.
4. Grafo Press (Numbering m/c)
5. Printo Max – 28 Machine.

6. Grafart machine
7. Tradle Printing machine
8. Mercedos Super Printing machine
9. Dise Pen ruler machine
10. Cutting machine (Hand)
11. Punching machine – 1 No.
12. Avery weight machine – 1 No.
13. Two holes punching machine – 1 No.
14. Exhaust Fan – 2 Nos.
15. Rapido Type high numbering machine – 9 Nos
16. Indian (frame) proof press of size bed 17”x27” with stand – 1 No.

- மேற்கண்ட 16 வகையான இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கு ஏலத்தில் மெசர்ஸ் M. பரந்தாமன் அவர்கள் கோரிய (மொத்தம் ரூ.1,51,000) விலையானது தொழில்நுட்பக் குழு ஆய்வு செய்து நிர்ணயித்த (மொத்தம் ரு.1,30,000) மதிப்பை விட ரூ.21,000/– கூடுதலாக இருப்பதால் அன்னாருக்கு உள்ளது உள்ளபடி நிலையில் விற்பனை செய்யவும்,

- மேற்கண்ட இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் விற்பனை செய்யும்பொருட்டு ஏற்கனவே செலுத்தப்பட்ட ஒப்ப வைப்புத் தொகை 20% ரூ.30,200/– ஐ சரி கட்டி மீதம் செலுத்த வேண்டிய விலை தொகை மற்றும் விற்பனை செய்யப்படும் நேரத்தில் அமுலிலுள்ள விற்பனை வரியையும் (மொத்த விலைக்கு) தனித்தனியாக செலுத்துச்சீட்டு மூலம் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி அனுமதி பெற்று கொண்டு செல்லவும்.

மேற்கண்ட ஒன்று முதல் மூன்று வரை உள்ள இனங்களுக்கு நிலைக்குழுக்கள் (பணிகள்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

11.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.125/2012 நாள்.11.6.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.161/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.து.ந.க.எண்.பி6/MLA/3783/2011**

**ஆணையர் அவர்களின் 12.05.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.187/2012 பொருள் எண்.11

**ஒப்பந்தப்புள்ளி ஏற்பு**

வார்டு எண் : 117 மண்டலம் : 9

| | |
|---|---|
| பணியின் பெயர் மற்றும் விவரங்கள் | கட்டடத்துறை – மண்டலம்–9, வார்டு–117 (பழைய மண்டலம்–8, வார்டு–114) கிரியப்பா சாலையில் சமுதாயக் கூடம் கட்டும் பணி |
| பணிமேற்கொள்ளவிருக்கும் துறை .. / மண்டலம் | கட்டடத்துறை |
| மதிப்பீட்டுத்தொகை ரூபாய் (இலட்சங்களில்) | ரூ.121.80 இலட்சம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2011-2012 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி |
| நிதியின் மூலத்தன்மை | சட்ட மன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி |
| வார்டு குழு தீர்மான எண். மற்றும் நாள் | வார்டு குழு தீர்மானம் பெறப்பட்டுள்ளது |

ஒப்பப்படிவங்கள் பெறப்பட்ட விவரங்கள்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர் திருவாளர்கள் / திரு | பணியின் அலுவலக மதிப்பு | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | **2011–2012 ஆம் ஆண்டின் விலைவிகிதம் விழுக்காடு அதிகம் / குறைவு** |
|---|---|---|---|---|
| 1. | சாம் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | ரூ.1,18,39,261.31 | ரூ.1,28,87,035.94 | (+)8.85% அதிகம் |
| 2. | ஆர். தாமஸ் ஐயாதுரை | ரூ.1,18,39,261.31 | ரூ.1,24,13,465.48 | (+)4.85% அதிகம் |

| | |
|---|---|
| குறைந்த ஒப்பந்ததாரரிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட விவரங்கள் | ஆம். பேச்சு வார்த்தை நடத்தப்பட்ட நாள் 23.04.2012 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்ப விவரம் | ரூ. 1,24,07,545.85 |
| பரிந்துரைக்கப்பட்ட ஒப்பந்ததாரரின் பெயர் | திரு.ஆர். தாமஸ் ஐயாதுரை |
| இறுதி ஒப்பந்தத்தொகை ரூபாய் | ரூ. 1,24,07,545.85 |
| இறுதி ஒப்ப சதவிகிதம் | (+)4.80% அதிகம் |
| விலைப்பட்டி ஆண்டு | 2011-2012 |

எனவே, மேற்குறிப்பிட்ட பணிக்கு குறைந்த ஒப்பந்ததாரர் திரு.ஆர். தாமஸ் ஐயாதுரை அவர்களின் ரூ.1,24,07,545.85க்கான அதாவது 2011-12ஆம் ஆண்டின் அலுவலக விலையைவிட (+)4.80% அதிகமான ஒப்பத்தை ஏற்று இவ்வொப்ப பணியை அவர்களுக்கு அளிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**11.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். **117/2012** நாள் **11.6.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"**12.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**55/2012** நாள்.**12.06.2012**–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**<u>மி.து.ந.க.எண்,சி.மே2/ பி1/ 6879 /2011</u>**

**<u>ஆணையர் அவர்களின் 6.6.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.188/2012 பொருள் எண்.12

<u>மண்டலம்—5 வார்டு—58 ல் ரிப்பன் கட்டிட இணைப்பு வளாகத்திற்கு தீ அணைப்பு தொடர்பான கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் தீ அணைப்பு எச்சரிப்பு கருவிகள் வழங்கி,நிறுவி மற்றும் இயக்கி வைக்கும் பணிக்கு அனுமதி</u>

| | | |
|---|---|---|
| 1 | செய்ய வேண்டிய பணி / கொள்முதல் செய்ய வேண்டிய பொருள் | மண்டலம் 5ல் , வார்டு 58ல் புதிதாக கட்டப்படுகின்ற ரிப்பன் கட்டிட இணைப்பு வளாகத்திற்கு தீ அணைப்பு தொடர்பான கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் தீ அணைப்பு எச்சரிப்பு கருவிகள் வழங்கி,நிறுவி மற்றும் இயக்கி வைக்கும் பணி |
| 2 | மதிப்பீடு | ரூ. 1,75,96,500/- |
| 3 | மதிப்பீட்டிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்ட நாள் | மன்ற தீர்மான எண்.367/2011 நாள்.12.12.2011. |
| 4 | தேவைப்படும் இடம் | ரிப்பன் கட்டிட இணைப்பு வளாகம் |
| 5 | மதிப்பீடு எந்த வருடத்தின் அட்டவணை விலைப்பட்டியல் முன் வைத்து தயாரிக்கப்பட்டது. | லாரசன் அண்டு டியூபுரோ லிமிட்டட் என்ற கலந்தாளுனர் அளித்த விலைப்பட்டியல் அடிப்படையில் தயாரிக்கப்பட்டது. |
| 6 அ | மாநகராட்சி செய்தி மலரில் வெளியிட்ட நாள் | **23.2.2012.** |
| ஆ | பத்திரிக்கைகளில் வெளியிட்ட நாள் | தினத்தந்தி – நாள் .24.2.2012<br>தி இந்தியன் எக்ஸ்பிரஸ் – நாள்.24.2.12 |
| 7 | ஒப்ப முன் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்ற நாள் மற்றும் விபரங்கள் | 1.3.2012 (3 ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்டனர்) |
| 8 | ஒப்ப நமூனா விற்பனைக்கான இறுதி நாள் | **14.3.2012.** |
| 9 | ஒப்பம் செய்திதாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்பம் பெறுவதற்கு குறைந்தது 15 நாட்கள் ஒதுக்கப்பட்டதா | ஆம் , ஒரு மாதம் ஒதுக்கப்பட்டது |
| 10 | ஒப்பப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் (ஒப்பம் திறக்கப்பட்ட நாள்) | **16.3.2012.** |
| 11 | விற்பனை செய்யப்பட்ட ஒப்ப நமூனாக் களின் எண்ணிக்கை | ஏதும் இல்லை |
| 12 | பெறப்பட்ட ஒப்பங்களின் எண்ணிக்கை | **3** (இணையதளத்திலிருந்து இறக்கம் செய்யப்பட்டது) |
| 13 | செலுத்தப்பட்ட ஒப்ப வைப்பத் தொகை | **ரூ. 1,53,100 / —** |
| **14** | **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் குறித்த விவரங்கள்** | |

| | நிறுவனம் | தொழில்நுட்ப ஆவணங்கள் மதிப்பாய்வு செய்யப்பட்ட விவரம் |
|---|---|---|
| 1 | திருவாளர் கார்மல் இன்ஜினியரிங் சி.எச்.இ. பிரைவேட் லிமிடெட் | 14.09.2012 வரை செல்லதக்க வங்கி பிணை இணைக்கப்பட்டுள்ளது. அங்கிகரிக்கப்பட்ட உற்பத்தியாளரிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது பணி ஆணை மற்றும் பணி முடித்தமைக்கான நகல்கள் இணைக்கப்பட்டுள்ளன. 15 சதவிகித மூலதன ஆதாரம் உள்ளது. எனவே, தொழில்நுட்ப ஆவணம் தகுதியுடையதாகிறது |
| 2 | திருவாளர் எம்.இ.டெக், டிசைன் மற்றும் கண்ஸ்டரக்ஷன் இன்ஜினியர்ஸ் | 15.09.2012 வரை செல்லதக்க வங்கி பிணை இணைக்கப்பட்டுள்ளது. பணி ஆணை மற்றும் பணி முடித்தமைக்கான நகல்கள் இணைக்கப்பட்டுள்ளன. 15 சதவிகித மூலதன ஆதாரம் உள்ளது. எனவே, தொழில்நுட்ப ஆவணம் தகுதியுடையதாகிறது. |
| 3 | திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட் | ஒப்ப வைப்பு தொகை செலுத்தப்பட்டுள்ளது அங்கிகரிக்கப்பட்ட விற்பனையாளரிடமிருந்து கடிதம் பெறப்பட்டுள்ளது .பணி ஆணை மற்றும் பணி முடித்தமைக்கான நகல்கள் இணைக்கப்பட்டுள்ளன. 15 சதவிகித மூலதன ஆதாரம் உள்ளது. எனவே, தொழில்நுட்ப ஆவணம் தகுதியுடையதாகிறது. |
| 15 | **தொழில் நுட்ப ஆவணங்களில் தேர்வு பெற்ற நிறுவனங்கள்**<br>1. திருவாளர் கார்மல் இன்ஜினியரிங் சி.எச்.இ. பிரைவேட் லிமிடெட்<br>2. திருவாளர் எம்.இ.டெக், டிசைன் மற்றும் கண்ஸ்டரக்ஷன் இன்ஜினியரஸ்<br>3. திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட்<br>நிறுவனத்தின் **நிதி ஆவணம் 16.4.2012**. அன்று திறக்கப்பட்டன. | |
| 16 | **ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனங்களின் ஒப்பத் தொகை விவரங்கள்** | |
| | ஒப்பத்தில் பங்கேற்ற நிறுவனத்தார். | மொத்த ஒப்பத் தொகை |
| | திருவாளர் கார்மல் இன்ஜினியரிங் சி.எச்.இ. பிரைவேட் லிமிடெட் | ரூ..1, 70, 00,000/- (+) **11.01**% . |
| | திருவாளர் எம்.இ.டெக், டிசைன் மற்றும் கண்ஸ்டரக்ஷன் இன்ஜினியர்ஸ் | ரூ.**8969402641/– (+)58498.94**% நிறுவனம் விலை வீதத்திற்கு பதிலாக மொத்த தொகையை குறிப்பிட்டுள்ளது. இருப்பினும் ஒட்டு மொத்த தொகையான ரூ.**1,39,33,683/–** (வரிகள் தனி) சரியாக குறிப்பிட்டிருந்ததால் இத்தருனத்தில் மட்டும் அது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டது. ரூ**1,51,98,164.73**(வரிகள் உள்ளிட்டது) இத்தொகை துறை மதிப்பீட்டை விட **(–) 0.67** சதவிகிதம் குறைவாகும். |
| | திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட் | ரூ.1,45,40,190/-**(–) 4.97**% |
| 17 | குறைந்த ஒப்ப புள்ளி அளித்த நிறுவனத்தார் | திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட் |
| 18 | குறைந்த ஒப்பம் அளித்தவருடன் பேச்சுவார்த்தை தேவையா ? ஆம் எனில் நடத்தப்பட்ட நாள் | தேவை. நாள்.**25.4.2012.** |

| | | | |
|---|---|---|---|
| **19** | பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பத் தொகை | | ஒப்பந்ததாரர் **25.4.2012.** நாளிட்ட கடிதம் மூலம் **0.5** % தள்ளுபடி வழங்குவதாக குறிப்பிட்டுள்ளது. ஒப்பத் தொகை. ரூ**1,44,67,489 /–** |
| 20 | மதிப்பீடு | | திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட் ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பப்புள்ளி, ரூ**1,44,67,489 /–** (**0. 5** )சதவிகித தள்ளுபடிக்கு பின்) துறையின் மதிப்பீட்டை விட (–) **5.44**% குறைவாக உள்ளது. துறையின் மதிப்பீடு : ரூ.**1,53,01,303/–** |
| 21 | **பரிந்துரைக்கப்படும் நிறுவனம்** திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட், லிமிடெட் ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பப்புள்ளி ரூ.**1,44,67,489 /–**, ( வரிகள் உள்ளிட்டது ) துறையின் மதிப்பீட்டை விட (–) **5.44**% குறைவாக உள்ளதால் ஏற்பதற்காக பரிந்துரைக்கப்படுகிறது | | | |
| 22 | **பரிந்துரைக்கப்படும்ஒப்பந்ததாரரின் விவரம்** | | |
| **23** | செல்லத்தக்க காலம் | | **90** நாட்கள்.**14.06.2012** வரை |
| **24** | பணி முடிக்கும் காலம் | | 6 மாதங்கள்(**180** நாட்கள்) (கட்டிடப்பணியின் முன்னேற்ற நிலை அடிப்படையில் பணி முடிக்கும் காலம் மாறுபடும்). |
| **25** | உத்திரவாதம் | | 24 மாதங்கள் |
| **26** | பணம் பட்டுவாடா | | **1.** துறையின் அளவீட்டு புத்தகத்தில் குறிக்கப்பட்டு அவ்வப்பொழுது **– 80** சதவிகிதம் பணி முடிக்கப்பட்டவுடன்<br>2. பணி முடிக்கப்பட் டு **––15** சதவிகிதம் ஒப்படைப்பு செய்யப்பட்ட உடன்<br>**3** உத்தரவாத காலத்திற்கு. பின் **––5** சதவிகிதம் பணம் பட்டுவாடா செய்யப்படும். |
| **27** | பணிக்கான நிதி ஆதாரம் உள்ளதா<br>அ. வரவு செலவு திட்ட தலைப்பு. | | : உள்ளது .<br>மூலதன வரவு செலவு திட்டம் .<br>ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின் கீழ் செலவினம் பற்று வைக்கப்படும் |
| **28** | உடன்படிக்கை | | துறையில் குறிப்பிடப்பட்ட படிவத்தில் கொள்முதல் ஆணை பெறப்பட்ட **7** தினங்களுக்குள் செய்து கொள்ள வேண்டும். |

சென்டரல் ரயில் நிலைய மின் தண்டவாளம் அருகாமையில் உள்ளதால் சோதனை செய்து தேவை ஏற்படின் மின்காந்த அலைகள் மூலம் புதைக்கப்படும் குழாய்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் கேதடிக் புரடெக்ஷன் ( Cathodic Protection) அமைக்க திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட், லிமிடெட் நிறுவனம் தோராயமாக ரூ.**1,62,000/–** ஆகும் என தெரிவித்துள்ளது. எனினும் இதுகுறித்து தேவை ஏற்படின் தொழில்நுட்ப குழு அமைத்து ஆய்வு செய்யப்பட்டு உரியமுறையில் அனுமதி பெற்றபின் தேவையின் அடிப்படையில் இப்பணியினை மேற்கொள்ளலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

பேச்சு வார்த்தைக்குப்பின் துறையின் மதிப்பீட்டை விட (–) **5.44** % குறைந்த ஒப்பப்புள்ளி அளித்த திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் ஒப்பத் தொகை ரூ**1,44,67,489 /–** ஏற்பதற்காக ஒப்பந்த குழுவின் பரிந்துரை செய்யப்பட்டது

எனவே ஒளிவு மறைவற்ற ஒப்பந்தபுள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** & **(2)** –ன்படி படி

1. மண்டலம் 5ல் , வார்டு 58ல் புதிதாக கட்டப்படுகின்ற ரிப்பன் கட்டிட இணைப்பு வளாகத்திற்கு தீ அணைப்பு தொடர்பான கருவிகள் மற்றும் உபகரணங்களுடன் தீ அணைப்பு எச்சரிப்பு கருவிகள் வழங்கி,நிறுவி மற்றும் இயக்கி வைக்கும் பணிக்கு பேச்சு வார்த்தைக்குப்பின் குறைந்த ஒப்பப்புள்ளி அளித்துள்ள திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் துறையின் மதிப்பீட்டை விட (–) 5.44 குறைந்த ஒப்பத்தை ஏற்கவும்,மற்றும் ரூ. 1,44,67,489 /– (வரிகள் உள்ளிட்டது) தொகைக்கு பணி ஆணை வழங்கவும்,
2. இந்த பணிக்கான செலவினத்தை மூலதன பணிக்கான ஒப்புதல் பெற்ற மதிப்பீட்டின்கீழ் நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளவும்,
3. சென்டரல் ரயில் நிலைய மின் தண்டவாளம் அருகாமையில் உள்ளதால் சோதனை செய்து தேவை ஏற்படின் மின்காந்த அலைகள் மூலம் புதைக்கப்படும் குழாய்களுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம்கேதடிக் புரடெக்ஷன் (Cathdic Production) இதற்கு திருவாளர். எம்.ஐ. இன்டஸ்ரியல் பிராடக்ட் பிரைவேட், லிமிடெட் நிறுவனம் தோராயமாக ரூ.1,62,000/– ஆகும் என தெரிவித்துள்ளது. எனினும் இதுகுறித்து பணிமுடிக்கப்பட்டவுடன் தலைமை பொறியாளர் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள் அடங்கிய தொழில்நுட்ப குழு அமைத்து ஆய்வு செய்யப்பட்டு பணியினை மேற்கொள்ளவும் ,

நிலைக்குழு (பணிகள் ) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

11.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.128/2012 நாள்.11.6.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரைசெய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.162/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ப.து.ந.க.எண்/1458/2012</u>**

**<u>ஆணையாளரின் 05.06. 2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.189/2012 பொருள் எண்.13

**<u>தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை – ஊதியம் – ஏற்பு</u>**

பொதுப்பணித் துறை, தலைமைப் பொறியாளர், சேப்பாக்கம், சென்னை, அவர்களால் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் பெறப்பட்ட, விலை விவர அட்டவணை (ஊதியம் மற்றும் பொருட்கள் அடிப்படை இனங்கள் மட்டும்) பெறப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில், ஒவ்வொரு ஆண்டும் பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்படும் தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை மன்றத்தின் முன் வைக்கப்பட்டு ஒப்புதல் பெற்ற பிறகு சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளிலும் நடைமுறைக்கு ஏற்றுக் கொள்ளப்படும். அது போலவே, இந்த ஆண்டும் பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலை விவர அட்டவணை (ஊதியம் மற்றும் பொருட்கள் –அடிப்படை இனங்கள் மட்டும்) சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளும் கையாளவும் மற்றும் கீழே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு குறிப்பிட்ட முடிக்கப்பட்ட வேலைகளுக்கு விலைப்பட்டி (DATA) ஆதாரமாக கொண்டு தயாரிக்கப்படும் விலை விவரப்பட்டியல் ( SCHEDULE OF RATES FOR FINISHED ITEMS), பணித் துறை, கட்டிடத் துறை, மழைநீர் வடிகால் துறை, பாலங்கள் துறை, பேருந்து சாலைகள் துறை, திடக்கழிவு மேலாண்மை துறை, மண்டல அலுவலகங்கள் மற்றும் அனைத்து பொறியியல் துறைகளும் நடைமுறைக்கு ஏற்றுக்கொள்வதற்காக, விலை விவர அட்டவணையின்படி.

1) (அடிப்படை இனங்கள் மட்டும் – ஊதியம் மற்றும் பொருட்களின்) விலை விவர அட்டவணை பொதுப்பணித்துறையை போலவே 01.05.2012 முதல் சென்னை மாநகராட்சியில் அனைத்துத் துறைகளும் அமுல்படுத்துவதற்கும்,
2) சேர்க்கைகள் அல்லது திருத்தங்கள் பொதுப்பணித்துறையிலிருந்து/ நெடுஞ்சாலைத் துறையிலிருந்து/சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றுதல் வாரியத்திலிருந்து பெறப்படுமாயின் அதன்படி சென்னை மாநகராட்சியில் செயல்படுத்தவும்.
3. சென்னை மாநகராட்சியின் தற்காலிகத் தொழிலாளர்களுக்கு 01.05.2012 முதல் விலைவிவர அட்டவணைப் புத்தகத்தின்படி, ஊதியம் வழங்கவும்,
4. பொதுப் பணித்துறையிலிருந்து பெறப்பட்ட அட்டவணையில் இல்லாத இனங்களுக்கு விலைப்புள்ளி (QUOTATION) பெற்று குறைந்த விலையினை அந்தந்த துறை சம்பந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் முடிவு செய்யவும்,
5. தற்போது நடைமுறையிலுள்ள அனைத்து அடிப்படை விவரங்களின் அடிப்படையில் அந்தந்த துறை மேற்பார்வைப் பொறியாளர்கள் விலைப்பட்டி விவரம் தயாரிக்கவும் மற்றும் தொழிற் நுட்ப மாறுதல் இருப்பின்அதற்கேற்றவாறு விலைப்பட்டி விவரம் மாற்றி தயாரிக்கவும்,
6. பொதுப்பணித் துறையிலிருந்து பெறப்பட்ட திண்காரை (CEMENT) விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.5,200/– எனவும் , இரும்புக் கம்பிக்கான (STEEL) விலை ஒரு மெட்ரிக் டன்னுக்கு ரூ.48,000/– (பொருட்களின் விலை வேலை நடைபெறும் இடத்திற்கு வந்து சேர ஏற்படும் ஏற்றுதல், இறக்குதல், அடுக்குதல், எல்லா வரிகளும் உட்பட மற்றும் இதர செலவுகளும் சேர்த்து) எனவும் சென்னை மாநகராட்சியின் அனைத்துத் துறைகளும் விலைப்பட்டியில் பொதுப்பணித் துறை போலவே கையாளவும், மேலும் பொதுப்பணித் துறையிலிருந்து திண்காரை (CEMENT) மற்றும் இரும்புக் கம்பிகளுக்கான (STEEL) விலைகளை பெறப்படும் பொழுதெல்லாம், அனைத்து துறைகளிலும், பொதுப்பணித் துறையின் விலைகளைப் போலவே அமுல் படுத்துவதற்கும்,

நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு(வ.வி.ம.நி) வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

11.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள் ) கூட்டத்தின் தீர்மான எண். 121/2012 நாள்.11.6.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள் ) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண். 159/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/ 2038 /2011</u>**

**<u>ஆணையாளரின் 30.4.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.190/2012 பொருள் எண்.14

**<u>உணவுப்பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்பு துறை அலுவலகத்திற்கு மாத வாடகைக்கு வழங்க அனுமதி</u>**

உதவி ஆணையர், உணவுப்பொருள் வழங்கல் துறை, இராயபுரம் மண்டலம் அவர்களின் 04.07.2011 நாளிட்ட கடிதத்தில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களால் 20.06.2011—இல் பலதுறை அலுவலர்களின் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றபோது இராயபுரம் ஷேக் மேஸ்திரி தெருவில் மாநகராட்சியால் கட்டப்பட்டுள்ள சமுதாய கூடம் இதுவரை பயன்படுத்தாமல் வீணாகி உள்ளது என்றும், இதனை பிற துறைக்கு மாத வாடகைக்கு வழங்கலாம் என கருத்து தெரிவிக்கப்பட்டதனடிப்படையில் மேற்படி கட்டிடத்தை இராயபுரம் உணவு பொருள் வழங்கல் (ம) நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலகத்திற்கு மாத வாடகைக்கு பயன்படுத்திக் கொள்ள அனுமதியளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. 2—ஆவது வார்டுகுழு தீர்மானத்தில் மேற்கண்ட இடத்தை அவ்வாறு ஒதுக்கீடு செய்ய பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

2) இதனை தொடர்ந்து இராயபுரம் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலகத்திற்கு மண்டலம்—2, வார்டு—17—இல் ஷேக் மேஸ்திரி தெருவில் உள்ள சமுதாய கூடத்தினை இவ்வலுவலகத்திற்கு சதுர அடிக்கு ரூ.20/— என வாடகை நிர்ணயம் செய்து 12 மாத வாடகை முன்பணமாக செலுத்த வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு இராயபுரம் உணவு பொருள் வழங்கல் துறையின் இசைவினை பெற்ற பின்னர் ஒதுக்கீடு செய்வதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. இப்பொருள் சம்மந்தமாக நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) தீர்மான எண்.188/2011, நாள் 16.12.2011 இல் கூர்ந்தாய்வு செய்து மண்டல அலுவலர்—2 மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்(நி.ம.உ) அவர்களிடம் விரிவாக குறிப்பு பெற்று மீண்டும் சமர்ப்பிக்கலாம் என்று தீர்மானித்து ஒத்தி வைக்கப்பட்டது.

3) நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி)யின் தீர்மானத்தில் தெரிவித்துள்ளவாறு மண்டல அலுவலர்—2 அவர்களிடம் இப்பொருள் குறித்த விரிவான அறிக்கை அளிக்குமாறு இவ்வலுவலக குறிப்பு மூலம் கேட்டுக் கொள்ளப்பட்டது.

4) மண்டல அலுவலர்—5 அவர்களின் 09.04.2012 நாளிட்ட குறிப்பில் மேற்படி சமுதாய கூடத்தினை இராயபுரம் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் பாதுகாப்பு நுகர்வோர் துறை அலுவலகத்திற்கு மாத வாடகை அடிப்படையில் வழங்க பழைய 2வது வார்டு குழுவால் இயற்றப்பட்ட தீர்மான எண்.42, நாள் 09.08.2011க்கு புதிய 5வது வார்டு குழு தீர்மான எண்.64, 19.03.2012ல் ஒப்புதல் அளித்துள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**<u>மன்றத்தின் அனுமதி வேண்டி</u>**

5) இராயபுரம் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை அலுவலகத்திற்கு மண்டலம்—2, வார்டு—17—இல் ஷேக் மேஸ்திரி தெருவில் உள்ள சமுதாய கூடத்தினை மேற்கண்ட அலுவலகத்திற்கு சதுர அடிக்கு ரூ.20/— என மாத வாடகை நிர்ணயம் செய்து 12 மாத வாடகை முன்பணமாக பெறுவதற்கும், ஒதுக்கப்படவுள்ள மேற்படி கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் சென்னை மாநகராட்சி அனுமதி பெற்ற பின்னர் தான் செய்யவேண்டும் என்ற நிபந்தனை விதிப்பதற்கும் வாடகை தொடர்பாக இராயபுரம் உணவு பொருள் வழங்கல் துறையின் இசைவினை பெற்ற பின்னர் ஒதுக்கீடு செய்வதற்கு நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

''12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.166/2012 நாள்.12.06.2012—ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ4/1510/2012**

**ஆணையாளரின் 30.4.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.191/2012 பொருள் எண்.15

**மகளிர் காவல் நிலையம் தற்காலிகமாக இயங்குவதற்கு இடம் ஒதுக்கீடு**

20.01.2012 நாளிட்ட சென்னை மாநகர காவல் துணை ஆணையரின் (வண்ணாரப்பேட்டை சரகம்) கடிதத்தில், இராயபுரம், (பழைய மண்டலம்–2) புதிய மண்டலம்–5, வார்டு–50இல் ஷேக் மேஸ்திரி தெருவில் உள்ள சமுதாய கூடத்தினை காவல்துறை இயங்குவதற்கு VI-15 அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு தற்காலிகமாக ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டிருந்தது. ஆனால் மேற்கண்ட இடத்தை சென்னை–5, சேப்பாக்கம் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறைக்கு அலுவலக பயன்பாட்டிற்கு மாத வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்து 5வது மண்ட வார்டுகுழு தீர்மான எண்.40, நாள் 9.8.11 – இல் பரிந்துரைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால் மகளிர் காவல் நிலையத்திற்கு இந்த இடம் ஒதுக்கீடு செய்ய இயலாத நிலையை தெரிவிக்கப்பட்டது.

26.03.2012 நாளிட்ட மாநகர காவல், உதவி ஆணையர், (ராயபுரம் சரகம்) அவர்களின் கடிதத்தில் VI-15 அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்கு மாற்று இடமாக மண்டலம்–2 வார்டு–50இல் எண். 59, மன்னார்சாமி கோயில் சாலையில் உள்ள பழைய 18ஆவது வார்டு அலுவலகத்தின் கீழ்த்தளம் (105 ச.மீ) முதல் தளம் (105 ச.மீ) என மொத்தம் 210 சதுர மீட்டர் இடத்தை தற்காலிகமாக காவல் துறைக்கு ஒதுக்கீடு செய்ய கோரப்பட்டட்டுள்ளது. இதற்கிடையில் 5வது மண்டல வார்டுகுழு தீர்மான எண்.58/2012 நாள் 19.3.2012இல் அதே இடத்தை பரிந்துரைத்துள்ளது.

(பழைய மண்டலம்–2) புதிய மண்டலம்–5, க.எண்.59, மன்னார்சாமி கோயில் சாலையில் உள்ள சென்னை மாநகராட்சி வார்டு அலுவலக கட்டிடத்தை முதல் மற்றும் இரண்டாவது தளம் (மொத்தம் 210 சதுர மீட்டர்) காவல் துறைக்கு மாத வாடகை அடிப்படையில் சதுர அடிக்கு ரூ.20/– என வாடகை நிர்ணயம் செய்து 12 மாத வாடகை முன் பணமாக பெறுவதற்கும், ஒதுக்கப்படவுள்ள கட்டிடத்தில் ஏதேனும் மாற்றம் செய்வதாக இருப்பின் சென்னை மாநகராட்சி அனுமதி பெற்று தான் செய்ய வேண்டும் என்ற நிபந்தனை விதிப்பதற்கும், வாடகை தொடர்பாக காவல்துறையின் இசைவினை பெற்ற பின்னர் ஒதுக்கீடு செய்வதற்கும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.167/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.1.ந.க.எண்.அ1/5835/2006**

**முதன்மைச் செயலர் (ம) ஆணையாளர் அவர்களின் 12.03.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.192/2012 **பொருள் எண்.16**

**சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான எண்ணூர் விரைவு சாலையில் உள்ள காலியிடத்தை சென்னை துறைமுக பொறுப்பு கழகத்திற்கு 30 ஆண்டு குத்தகை விடுதல் அனுமதி**

அரசாணை நிலை எண்.1, நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்குதுறை நாள். 21.01.2011ன் படி சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான எண்ணூர் விரைவு சாலையில் உள்ள காலியிடத்தை சென்னை துறைமுகம் பொறுப்பு கழகத்திற்கு மாத வாடகையாக ரூ.12,66,580/— ஒப்படைக்கும் நாள் முதல் 30 ஆண்டுகளுக்கு குத்தகைவிடவும் ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 % வாடகை உயர்வு செய்து கொள்ள அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையினை சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்த நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மாமன்றத்தின் மூலமாக தீர்மானம் நிறைவேற்றப்படும்போது மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒவ்வொரு மூன்று ஆண்டுக்கு ஒருமுறை 15 % வாடகை உயர்வு செய்து வசூலிக்க வேண்டுமென இருப்பதை, ஒவ்வொரு ஆண்டும் 15 % வாடகை உயர்வு செய்ய வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட குத்தகை இனத்திற்கு ஒவ்வொரு ஆண்டுக்கு ஒரு முறை 15 % உயர்வு செய்து வசூலிக்க வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டதை, அரசின் ஆணைப்படி ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 15 % வாடகை உயர்வு செய்து வசூலிக்க வேண்டுமென திருத்தம் மேற்கொள்ள நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

> ‘‘12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.168/2012 நாள்.12.06.2012—ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பே.சா.து.ந.க.எண்.பி3/0530/2012**
**ஆணையர் அவர்களின் 07.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.193/2012 **பொருள் எண்.17**

**பேருந்து சாலைகள் துறை – கட்டுதல், பராமரித்தல், பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் 189 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணி – சிப்பம் – 'B' க்கான ஒப்பத்திற்கு ஒப்புதல் அளிக்க அனுமதி**

சென்னை மாநகரில் உலகத்தரத்திற்கு ஒப்பாகவும், சென்னை மாநகரின் எழில் கூட்டும் வகையிலும், பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டும், கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் நவீன பேருந்து நிழற்குடைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி வரையறுத்த பேருந்து நிழற்குடை வடிவமைப்பின்படி கட்டி நன்கு பராமரித்து பின் மாநகராட்சி வசம் நல்ல நிலையில் ஒப்படைக்க வேண்டும். இந்த பேருந்து நிழற்குடைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விளம்பர பலகைகளை ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அதில் வரும் வருவாயை சென்னை மாநகராட்சியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) அடிப்படையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது.

முதலில் 2007–2008 வருடம் 500 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள். அமைக்கும் பணிக்காக 4 சிப்பங்களாக ஒப்பங்கள் கோரப்பட்டன.

திருவாளர்கள்.அட்லாப் பிலிம்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் ஒவ்வொரு சிப்பத்திற்கும் அதிகபட்ச தொகையாக தலா ரூ.4.05 கோடி அளித்தனர். இந்த ஒப்பங்களை சென்னை மாநகரில் விளம்பரப்பலகைகள் அகற்றுவதற்கு முன் கோரப்பட்டதால் மாமன்றம் நிராகரித்துவிட்டது.

இரண்டாவது முறையாக ஒப்பங்கள் கோரியதில் திருவாளர்கள்.லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் சிப்பம் 1ற்கு அதிகபட்ச தொகையாக ரூ.4,06,00,000/– மற்ற மூன்று சிப்பங்களுக்கு திருவாளர்கள்.ஜின்டால் ஸ்டெயின்லெஸ் என்ற நிறுவனம் முறையே ரூ.6,05,00,000/–, ரூ.6,22,59,840/– மற்றும் ரூ.6,37,96,464/– அதிகபட்சத் தொகையாக அளிக்க முன் வந்தார்கள்.

இதில் திருவாளர்கள்.லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் ஒப்ப காலத்தை நீட்டிக்க மறுத்துவிட்டதால் அவ்வொப்பம் ரத்து செய்யப்பட்டது. மற்ற மூன்று சிப்பங்களுக்கு திருவாளர்கள்.ஜின்டால் ஸ்டெயின்லெஸ் என்ற நிறுவனம் ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொள்ளாததனால் அவர்களின் ஒவ்வொரு சிப்பத்திற்குமான ஒப்ப முன் வைப்புத் தொகையான 18 இலட்சங்கள் பிடித்தம் செய்யப்பட்டது.

மாநகரை விரிவாக்கம் செய்வதற்கு முன்பு சென்னை மாநகரில் 1241 பேருந்து நிழற்குடைகள் உள்ளன. அவற்றில் 500 பேருந்து நிழற்குடைகள் மாநகர போக்குவரத்து கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த 500 பேருந்து நிழற்குடைகள் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டி உச்ச நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. மீதமுள்ள 741 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் சென்னை மாநகராட்சி வசம் உள்ளது. இவற்றில் சென்னை நகரின் மிக முக்கிய இடங்களில் உள்ள 99 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் ஒப்பங்கள் கோரப்பட்டதில் திருவாளர்கள்.லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் ஒப்பந்ததாரர்களாக தேர்வு செய்யப்பட்டார்கள் (மன்றத்தீர்மான எண்.286/2010 நாள்.22.06.2010) அவர்கள் இந்த 99 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை கட்டி, பராமரித்தல் பின் ஒப்படைத்தல் மட்டுமின்றி சென்னை மாநகராட்சி ஒருவருடத்திற்கு ரூ.2,02,00,300/– செலுத்த வேண்டும். இத்தொகை ஒவ்வொரு வருடமும் 5% உயர்த்தி தர வேண்டும். இவர்கள் 65 நவீன நிழற்குடைகளை கட்டி முடித்துள்ளார்கள்.

மீதமுள்ள 642 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை முன்பிருந்த 10 மண்டலங்கள் வாரியாக ஒப்பங்கள் கோரப்பட்டது. அதில் 5 மண்டலங்களுக்கு மட்டுமே ஒப்பங்கள் பெறப்பட்டதாலும் புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களையும் சேர்க்க வேண்டி அவைகள் ரத்து செய்யப்பட்டன.

விரிவாக்கம் செய்யப்படுவதற்கு முன்பு மாநகராட்சியிடம் இருந்த 642 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள 349 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளையும் சேர்த்து மொத்தம் 1031 பேருந்து நிழற்குடைகளை ஆறு சிப்பங்களாக, விளம்பரங்கள் செய்ய வலுவான மற்றும் வலுவற்ற பகுதிகளை இணைத்து கீழ்காணும் பட்டியலின்படி ஒப்பங்கள் கோரப்பட்டன.

**சிப்ப விவரங்கள்**

| வரிசை எண். | சிப்பம் | மண்டலம் | மண்டலத்தின் பெயர் | பேருந்து நிழற்குடைகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | A | I | திருவொற்றியூர் | 69 | 154 |
| | | III | மாதவரம் | 19 | |
| | | XIII | அடையார் | 66 | |
| 2 | B | VIII | அண்ணாநகர் | 166 | 189 |
| | | II | மணலி | 23 | |
| 3 | C | X | கோடம்பாக்கம் | 115 | 147 |
| | | VI | திரு.வி.க.நகர் | 32 | |
| 4 | D | IV | தண்டையார்பேட்டை | 84 | 263 |
| | | IX | தேனாம்பேட்டை | 73 | |
| | | V | ராயபுரம் | 106 | |
| 5 | E | VII | அம்பத்தூர் | 107 | 151 |
| | | XII | ஆலந்தூர் | 44 | |
| 6 | F | XV | சோழிங்கநல்லூர் | 29 | 127 |
| | | XI | வளசரவாக்கம் | 35 | |
| | | XIV | பெருங்குடி | 63 | |
| **மொத்தம்** | | | | | **1031** |

இதில் ‘‘A, ‘B’ & ‘C’ “ சிப்பங்களுக்கு மட்டுமே ஒப்பங்கள் பெறப்பட்டன மற்ற மூன்று சிப்பங்களுக்கு ஒப்பங்கள் யாரும் சமர்ப்பிக்கவில்லை. இதற்கு மறு ஒப்பங்கள் கோரியதில் சிப்பம் ‘D’–க்கு மட்டுமே ஒப்பம் பெறப்பட்டது. சிப்பங்கள் ‘A’ மற்றும் ‘D’க்கு ஒரே ஒரு ஒப்பம் பெறப்பட்டதாலும் அதில் மிகக் குறைந்த அளவே ஒப்பத் தொகை அளிக்க முன்வந்ததினாலும் அச்சிப்பங்களுக்கான ஒப்பங்கள் நிராகரிக்க ஒப்பந்தக்குழு 22.05.2012 நடை பெற்ற கூட்டத்தில் பரிந்துரை செய்துள்ளது.

சிப்பம் ‘B’க்கு கீழ்காணும் மூன்று ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்ப இறுதி நாளான 18.05.2012 அன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. அவர்கள் அனைவருமே தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்றதனால் அவர்களின் ஒப்பப்புள்ளி 21.05.2012 அன்று திறக்கப்பட்டது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சலுகைத் தொகை(ரூபாய்) |
|---|---|---|
| 1 | திருவாளர் பிரகாஷ் ஆர்ட்ஸ் (பி) லிமிடெட் | 1,53,00,000/- |
| 2 | / திருவாளர் வாண்ட்டேஸ் அட்வர்டைசிங் (பி) லிமிடெட் | 36,06,000/- |
| 3 | திருவாளர்கள். லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் | 2,07,00,000/- |

திருவாளர்கள். லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் அதிகபட்ச ஒப்பத்தொகையாக ரூ.2,07,00,000/– அளிக்க முன்வந்தனர். இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதில் ஒப்பத்தொகையை ரூ.2,09,00,000/– ஆக உயர்த்தி அளித்தனர். சென்னை மாநகராட்சியால் நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச சலுகைக்கட்டணம் ரூ.30.00 இலட்சங்கள் மட்டுமே. இப்பணி ஒருவருட காலத்திற்குள் முடிக்கப்படவேண்டும். இக்கட்டணம் சலுகைகாலமான 20

வருடத்தில் முதல் **10** வருடங்களுக்கு **5%** சதவீதமும் அடுத்த **5** வருடங்களுக்கு **15%** சதவீதமும் இறுதி **5** வருடங்களுக்கு **20%** சதவீதமும் உயர்த்தித்தரப்படவேண்டும். இச்சலுகை கட்டணம் ஒவ்வொரு நிழற்குடைக்கும் ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.**1,10,582/–** என்ற அளவில் உள்ளது.

**22.05.2012** அன்று நடைபெற்ற ஒப்பந்தக்குழு கூட்டத்தில் கடந்த **5** வருடங்களாக திரும்ப திரும்ப இப்பணிக்கு ஒப்பங்கள் கோரப்பட்டு வருவதாலும் பயணிகள் நலனைக் கருத்தில் கொண்டும் திருவாளர்கள.லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு இவ்வொப்பத்தினை (சிப்பம் ‘B’) வழங்க பரிந்துரை செய்துள்ளது.

01) அதிகபட்ச சலுகை தொகை ரூ.**2,09,00,000/–** (ரூபாய் இரண்டு கோடியே ஒன்பது லட்சங்கள் மட்டும்) அளித்த திருவாளர்கள். லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற ஒப்பந்ததாரருக்கு சிப்பம் ‘B’ல் உள்ள **189** எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் இப்பணியினை வழங்க ஒப்புதலும்.

02) ஒப்ப விதிகளின்படி சலுகைகாலமான **20** வருடத்தில் முதல் **10** வருடங்களுக்கு **5%** சதவீதமும் அடுத்த **5** வருடங்களுக்கு **15%** சதவீதமும் இறுதி **5** வருடங்களுக்கு **20%** சதவீதமாக இத்தொகையினை உயர்த்தித்தரவும்

03) ஒப்ப விதிகளின்படி சலுகை காலமான **20** வருடங்களுக்கு பின் இப்பேருந்து நிழற்குடைகளை நல்ல நிலையில் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கவும்

எனவே பயணிகளின் சிரமத்தை போக்கும் வகையில் சிப்பம் ‘B’ல் உள்ள **189** எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் வழங்க மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**11.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.**136/2012** நாள்.**11.6.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“**12.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**170/2012** நாள்.**12.06.2012**–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**பே.சா.து.ந.க.எண்.பி1/0531/2012**

**ஆணையர் அவர்களின் 07.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.194/2012 பொருள் எண்.18

**பேருந்து சாலைகள் துறை – கட்டுதல், பராமரித்தல், பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் 147 எண்ணிக்கையிலான நவீன பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணி – சிப்பம் – 'C' க்கான ஒப்பத்திற்கு ஒப்புதல் அளிக்க அனுமதி**

சென்னை மாநகரில் உலகத்தரத்திற்கு ஒப்பாகவும், சென்னை மாநகரின் எழில் கூட்டும் வகையிலும், பயணிகளின் வசதியைக் கருத்தில் கொண்டும், கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் நவீன பேருந்து நிழற்குடைகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டது.

சென்னை மாநகராட்சி வரையறுத்த பேருந்து நிழற்குடை வடிவமைப்பின்படி கட்டி நன்கு பராமரித்து பின் மாநகராட்சி வசம் நல்ல நிலையில் ஒப்படைக்க வேண்டும். இந்த பேருந்து நிழற்குடைகளில் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு விளம்பர பலகைகளை ஒப்பந்ததாரர்கள் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். அதில் வரும் வருவாயை சென்னை மாநகராட்சியுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் (BOT) அடிப்படையில் அமைக்க உத்தேசிக்கப்பட்டது.

முதலில் 2007–2008 வருடம் 500 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள். அமைக்கும் பணிக்காக 4 சிப்பங்களாக ஒப்பங்கள் கோரப்பட்டன.

திருவாளர்கள்.அட்லாப் பிலிம்ஸ் லிமிடெட் என்ற நிறுவனம் ஒவ்வொரு சிப்பத்திற்கும் அதிகபட்ச தொகையாக தலா ரூ.4.05 கோடி அளித்தனர். இந்த ஒப்பங்களை சென்னை மாநகரில் விளம்பரப்பலகைகள் அகற்றுவதற்கு முன் கோரப்பட்டதால் மாமன்றம் நிராகரித்துவிட்டது.

இரண்டாவது முறையாக ஒப்பங்கள் கோரியதில் திருவாளர்கள்.லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் சிப்பம் 1ற்கு அதிகபட்ச தொகையாக ரூ.4,06,00,000/– மற்ற மூன்று சிப்பங்களுக்கு திருவாளர்கள்.ஜின்டால் ஸ்டெயின்லெஸ் என்ற நிறுவனம் முறையே ரூ.6,05,00,000/–, ரூ.6,22,59,840/– மற்றும் ரூ.6,37,96,464/– அதிகபட்சத் தொகையாக அளிக்க முன் வந்தார்கள்.

இதில் திருவாளர்கள்.லேண்ட் மார்க் 360 மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் ஒப்ப காலத்தை நீட்டிக்க மறுத்துவிட்டதால் அவ்வொப்பம் ரத்து செய்யப்பட்டது. மற்ற மூன்று சிப்பங்களுக்கு திருவாளர்கள்.ஜின்டால் ஸ்டெயின்லெஸ் என்ற நிறுவனம் ஒப்பந்த உடன்படிக்கை செய்து கொள்ளாததனால் அவர்களின் ஒவ்வொரு சிப்பத்திற்குமான ஒப்ப முன் வைப்புத் தொகையான 18 இலட்சங்கள் பிடித்தம் செய்யப்பட்டது.

மாநகரை விரிவாக்கம் செய்வதற்கு முன்பு சென்னை மாநகரில் 1241 பேருந்து நிழற்குடைகள் உள்ளன. அவற்றில் 500 பேருந்து நிழற்குடைகள் மாநகர போக்குவரத்து கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த 500 பேருந்து நிழற்குடைகள் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டி உச்ச நீதி மன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. மீதமுள்ள 741 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் சென்னை மாநகராட்சி வசம் உள்ளது. இவற்றில் சென்னை நகரின் மிக முக்கிய இடங்களில் உள்ள 99 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் ஒப்பங்கள் கோரப்பட்டதில் திருவாளர்கள்.லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் ஒப்பந்ததாரர்களாக தேர்வு செய்யப்பட்டார்கள் (மன்றத்தீர்மான எண்.286/2010 நாள்.22.06.2010) அவர்கள் இந்த 99 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை கட்டி, பராமரித்தல் பின் ஒப்படைத்தல் மட்டுமின்றி சென்னை மாநகராட்சி ஒருவருடத்திற்கு ரூ.2,02,00,300/– செலுத்த வேண்டும். இத்தொகை ஒவ்வொரு வருடமும் 5% உயர்த்தி தர வேண்டும். இவர்கள் 65 நவீன நிழற்குடைகளை கட்டி முடித்துள்ளார்கள்.

மீதமுள்ள 642 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளை முன்பிருந்த 10 மண்டலங்கள் வாரியாக ஒப்பங்கள் கோரப்பட்டது. அதில் 5 மண்டலங்களுக்கு மட்டுமே ஒப்பங்கள் பெறப்பட்டதாலும் புதிதாக விரிவாக்கம் செய்யப்பட்ட மண்டலங்களையும் சேர்க்க வேண்டி அவைகள் ரத்து செய்யப்பட்டன.

விரிவாக்கம் செய்யப்படுவதற்கு முன்பு மாநகராட்சியிடம் இருந்த 642 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகளுடன் விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள 349 எண்ணிக்கையிலான

பேருந்து நிழற்குடைகளையும் சேர்த்து மொத்தம் 1031 பேருந்து நிழற்குடைகளை ஆறு சிப்பங்களாக, விளம்பரங்கள் செய்ய வலுவான மற்றும் வலுவற்ற பகுதிகளை இணைத்து கீழ்காணும் பட்டியலின்படி ஒப்பங்கள் கோரப்பட்டன.

**சிப்ப விவரங்கள்**

| வரிசை எண். | சிப்பம் | மண்டலம் | மண்டலத்தின் பெயர் | பேருந்து நிழற்குடைகளின் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1 | A | I | திருவொற்றியூர் | 69 | 154 |
| | | III | மாதவரம் | 19 | |
| | | XIII | அடையார் | 66 | |
| 2 | B | VIII | அண்ணாநகர் | 166 | 189 |
| | | II | மணலி | 23 | |
| 3 | C | X | கோடம்பாக்கம் | 115 | 147 |
| | | VI | திரு.வி.க.நகர் | 32 | |
| 4 | D | IV | தண்டையார்பேட்டை | 84 | 263 |
| | | IX | தேனாம்பேட்டை | 73 | |
| | | V | ராயபுரம் | 106 | |
| 5 | E | VII | அம்பத்தூர் | 107 | 151 |
| | | XII | ஆலந்தூர் | 44 | |
| 6 | F | XV | சோழிங்கநல்லூர் | 29 | 127 |
| | | XI | வளசரவாக்கம் | 35 | |
| | | XIV | பெருங்குடி | 63 | |
| மொத்தம் | | | | | 1031 |

இதில் ‘‘A, ‘B’ & ‘C’ “ சிப்பங்களுக்கு மட்டுமே ஒப்பங்கள் பெறப்பட்டன மற்ற மூன்று சிப்பங்களுக்கு ஒப்பங்கள் யாரும் சமர்ப்பிக்கவில்லை. இதற்கு மறு ஒப்பங்கள் கோரியதில் சிப்பம் ‘D’–க்கு மட்டுமே ஒப்பம் பெறப்பட்டது. சிப்பங்கள் ‘A’ மற்றும் ‘D’க்கு ஒரே ஒரு ஒப்பம் பெறப்பட்டதாலும் அதில் மிகக் குறைந்த அளவே ஒப்பத் தொகை அளிக்க முன்வந்ததினாலும் அச்சிப்பங்களுக்கான ஒப்பங்கள் நிராகரிக்க ஒப்பந்தக்குழு 22.05.2012 நடை பெற்ற கூட்டத்தில் பரிந்துரை செய்துள்ளது.

சிப்பம் ‘C’க்கு கீழ்காணும் நான்கு ஒப்பந்ததாரர்களிடமிருந்து ஒப்ப இறுதி நாளான 18.05.2012 அன்று ஒப்பங்கள் பெறப்பட்டன. அவர்கள் அனைவருமே தொழில்நுட்ப ஒப்பத்தில் தகுதி பெற்றதனால் அவர்களின் ஒப்பப்புள்ளி 21.05.2012 அன்று திறக்கப்பட்டது.

| வரிசை எண் | ஒப்பந்ததாரர் பெயர் | சலுகைத் தொகை(ரூபாய்) |
|---|---|---|
| 1 | திருவாளர் பிரகாஷ் ஆர்ட்ஸ் (பி) லிமிடெட் | 2,26,80,000/- |
| 2 | திருவாளர் வாண்ட்டேஸ் அட்வர்டைசிங் (பி) லிமிடெட் | 42,33,000/- |
| 3 | திருவாளர்கள். லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் | 2,62,00,000/- |
| 4 | திருவாளர்கள். ஜே.சி. டிக்காவ் | 61,74,000/- |

திருவாளர்கள். லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனம் அதிகபட்ச ஒப்பத்தொகையாக ரூ.2,62,00,000/– அளிக்க முன்வந்தனர். இவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதில் ஒப்பத்தொகையை ரூ.2,64,00,000/– ஆக உயர்த்தி அளித்தனர். சென்னை மாநகராட்சியால்

நிர்ணயிக்கப்பட்ட குறைந்தபட்ச சலுகைக்கட்டணம் ரூ.30.00 இலட்சங்கள் மட்டுமே. இப்பணி ஒருவருட காலத்திற்குள் முடிக்கப்படவேண்டும். இக்கட்டணம் சலுகைகாலமான 20 வருடத்தில் முதல் 10 வருடங்களுக்கு 5% சதவீதமும் அடுத்த 5 வருடங்களுக்கு 15% சதவீதமும் இறுதி 5 வருடங்களுக்கு 20% சதவீதமும் உயர்த்தித்தரப்படவேண்டும். இச்சலுகை கட்டணம் ஒவ்வொரு நிழற்குடைக்கும் ஒவ்வொரு வருடத்திற்கும் ரூ.1,79,599/— என்ற அளவில் உள்ளது.

22.05.2012 அன்று நடைபெற்ற ஒப்பந்தக்குழு கூட்டத்தில் கடந்த 5 வருடங்களாக திரும்ப திரும்ப இப்பணிக்கு ஒப்பங்கள் கோரப்பட்டு வருவதாலும் பயணிகள் நலனைக் கருத்தில் கொண்டும் திருவாளர்கள.லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு இவ்வொப்பத்தினை (சிப்பம் ‘C’) வழங்க பரிந்துரை செய்துள்ளது.

1) அதிகபட்ச சலுகை தொகை ரூ.2,64,00,000/— (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தி நான்கு லட்சங்கள் மட்டும்) அளித்த திருவாளர்கள். லக்ஷியா மீடியா பிரைவேட் லிமிடெட் என்ற ஒப்பந்ததாரருக்கு சிப்பம் ‘C’ல் உள்ள 147 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் இப்பணியினை வழங்க ஒப்புதலும்.

2) ஒப்ப விதிகளின்படி சலுகைகாலமான 20 வருடத்தில் முதல் 10 வருடங்களுக்கு 5% சதவீதமும் அடுத்த 5 வருடங்களுக்கு 15% சதவீதமும் இறுதி 5 வருடங்களுக்கு 20% சதவீதமாக இத்தொகையினை உயர்த்தித்தரவும்

3) ஒப்ப விதிகளின்படி சலுகை காலமான 20 வருடங்களுக்கு பின் இப்பேருந்து நிழற்குடைகளை நல்ல நிலையில் சென்னை மாநகராட்சியிடம் ஒப்படைக்கவும்

எனவே பயணிகளின் சிரமத்தை போக்கும் வகையில் சிப்பம் ‘C’ல் உள்ள 147 எண்ணிக்கையிலான பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை கட்டுதல், பராமரித்தல் பின் ஒப்படைத்தல் என்ற அடிப்படையில் வழங்க மேற்காணும் இனங்களுக்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வ.வி(ம)நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது

11.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண். 137/2012 நாள் 11.6.2012—ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.171/2012 நாள்.12.06.2012—ன்படி, இதற்கு நிலை நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**<u>தி.க.மே.து.ந.க.எண்.எ7/4069/2007</u>**

**<u>ஆணையர் அவர்களின் 06.06.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.195/2012 பொருள் எண். 19

**<u>குப்பைகளை கண்ட இடங்களில் கொட்டுபவர்கள் மற்றும் கட்டுமான கழிவுகளை சாலைகளில் கொட்டி இடையூறு செய்வோர்கள் மீது விதிக்கப்படும் அபராதத்தொகையினை உயர்த்தி நிர்ணயித்தல்</u>**

சென்னை மாநகராட்சி திடக்கழிவுகள்(கண்ட இடங்களில் குப்பையினை போடுதலை தடுத்தல், குப்பையினை தரம்பிரித்தல், சேர்த்துவைத்தல், வழங்குதல் மற்றும் சேகரித்தல் ஆகியவைகளை முறைபடுத்துதல்) விதிகள் 2007(வரைவு)க்கு மன்றத்தீர்மானம் எண்.22/2008, நாள்.31.01.2008ல் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு கண்ட இடங்களில் குப்பையை போடுதலுக்கு ரூ.100/—ம் வரிசை எண்.15ல் கட்டுமான கழிவுகளை குறிப்பிட்டபடி பிரித்து வழங்காமல் இருப்பதற்கு ரூ.500/—ம் அபராதம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

இந்த அபராதம் 2008, ஜனவரியில் நிர்ணயிக்கப்பட்டது. மேலும், மக்களிடையே விழிப்புணர்வை அதிகரிக்கவும் குப்பையை கண்ட இடங்களில் போடாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணத்தினை தீவிரமாக ஏற்படுத்தவும், மற்றும் கட்டுமான கழிவுகளை சாலையில் போட்டு போக்குவரத்திற்கும் நடைபயணிகளுக்கும் தொல்லை தருவதை தீவிரமாக தடுக்க வழிவகை செய்யவும் இந்த அபராதத் தொகைகளை அதிகரித்து நிர்ணயிப்பது அவசியமாகும் என்று கருதப்படுகிறது.

மேலும், கண்ட இடங்களில் குப்பையை போடுதலுக்கு ரூ.100/— என்று இருக்கும் அபராதத்தொகையினை ரூ.500/—(ரூபாய் ஐநூறு மட்டும்) என்றும், வரிசை எண்.15ல் சொல்லப்பட்டுள்ள கட்டுமான கழிவுகளை கண்ட இடங்களில் சாலையில் போட்டு போக்குவரத்திற்கும் நடைபயணிகளுக்கும் தொல்லை தருவதை தடுக்க விதிக்கப்படும் அபராதத்தொகையினை ரூ.500/—லிருந்து ரூ.2000/—(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) என்றும் உயர்த்தி நிர்ணயிக்க மன்றத்தின் அனுமதி அவசியமாகிறது.

சென்னை மாநகராட்சி திடக்கழிவுகள்(கண்ட இடங்களில் குப்பையினை போடுதலை தடுத்தல், குப்பையினை தரம்பிரித்தல், சேர்த்துவைத்தல், வழங்குதல் மற்றும் சேகரித்தல் ஆகியவைகளை முறைபடுத்துதல்) விதிகள் 2007(வரைவு)க்கு மன்றத்தீர்மானம் எண்.22/2008, நாள்.31.01.2008ல் மன்றத்தின் ஒப்புதல் பெறப்பட்டு

அதன்படி கண்ட இடங்களில் குப்பையை போடுதலுக்கு ரூ.100/— என்று இருக்கும் அபராதத்தொகையினை ரூ.500/—(ரூபாய் ஐநூறு மட்டும்) என்றும், வரிசை எண்.15ல் சொல்லப்பட்டுள்ள கட்டுமான கழிவுகளை கண்ட இடங்களில் சாலையில் போட்டு போக்குவரத்திற்கும் நடைபயணிகளுக்கும் தொல்லை தருவதை தடுக்க விதிக்கப்படும் அபராதத்தொகையினை ரூ.500/—லிருந்து ரூ.2000/—(ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) என்றும் உயர்த்தி நிர்ணயிக்க நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

11.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.135/2012 நாள்.11.6.2012—ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.158/2012 நாள்.12.06.2012—ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.7.ந.க.எண்.இ1/00398/2012**
**ஆணையர் அவர்களின் 02.05.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.196/2012 பொருள் எண்.20

**தானப்பத்திரம்**

திரு. அம்பாவரம் லஷ்மி ரெட்டி மற்றும் திரு. அம்பாவரம் கோபால் ரெட்டி, திருமதி. பவானி அம்பாவரம் மற்றும் திருமதி. ராதா ராணி அவர்களின் பவர் ஏஜெண்டான திரு.பி.வி. சேஷா ரெட்டி என்பவர் சென்னை முகப்பேரில் உள்ள அத்திப்பட்டு கிராமத்தில் A.N.A நிழற்சாலை, மனை எண்–4, நில அளவை எண்.101/2இ, 102/டி மற்றும் 107/2பி இல் வாகன நிறுத்த தளம் மற்றும் 4 தளங்களில் 16 குடியிருப்புகள் கொண்ட குடியிருப்புக் கட்டிடம் கட்டுவதற்கு சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் கடித எண்.பி3/10853/07 நாள் 20.11.2007 திட்ட அனுமதி எண் B/Spl.Bldg/424/2007 மற்றும் அம்பத்தூர் நகராட்சி கட்டிட அனுமதி எண் 79/08 நாள் 04.02.08 மூலம் கட்டிடம் கட்டுவதற்கு அனுமதி பெற்றுள்ளார். மேற்கூறிய கட்டிடத்திற்கு அனுமதி வழங்கும் போது 0.91 மீ X 26.8 மீ அளவுள்ள நிலத்தினை சாலை விரிவாக்கம் செய்வதற்கு அம்பத்தூர் நகராட்சியிலோ அல்லது சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கோ தானமாக வழங்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து, மேற்கூறிய மனையில் கட்டிட பணிகள் மேற்கொள்ளப்பட்டு பணிகளும் முடிவடைந்துள்ளன. கட்டிடத்திற்கு மின் இணைப்பு பெற, சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் கட்டிடம் முடிந்ததற்கான சான்றிதழ் (Completion Certificate) பெற வேண்டும். ஆனால் அந்த சான்றிதழ் பெறாமல் மின் இணைப்பு வழங்குமாறு தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மீது கட்டிடத்தின் உரிமையாளர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

அவ்வழக்கில் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி, தீர்ப்பில் தமிழ்நாடு மின்சார வாரியம் கட்டிடம் முடிந்ததற்கான சான்றிதழை கோராமலும் மற்றும் சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை நகராட்சியில் ஒப்படைத்த பின்னர் என்கின்ற நிபந்தனையுடன் மின்சார இணைப்பு வழங்க வேண்டும் என்று தீர்ப்பு வழங்கி உள்ளது. இதன் தொடர்ச்சியாக சென்னை பெருநகர வளர்ச்சி குழுமமும் சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானமாக பெற்றுக் கொள்ளுமாறு முந்தைய அம்பத்தூர் நகராட்சியிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

அதன் பொருட்டு கட்டிட உரிமையாளர் முந்தைய அம்பத்தூர் நகராட்சியில் மனு கொடுத்துள்ளார். தற்பொழுது அம்பத்தூர் நகராட்சி விரிவாக்கப்பட்ட சென்னை மாநகராட்சியில் இணைக்கப்பட்டுள்ளது. உரிமையாளர் மனையின் முன்புறம் இருந்த சுற்றுச் சுவரை இடித்து விட்டு சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானமாக எடுத்துக் கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும், மனுதாரர் தங்கள் நிலத்திற்கு புதியதாக சுற்றுசுவரும் கட்டியுள்ளார். தற்பொழுது தானமாக வழங்கப்பட வேண்டிய நிலம் எந்த விதமான ஆக்கிரமிப்பு இன்றி உள்ளது.

இதற்கிடையில் கட்டிடத்தின் உரிமையாளரின் பவர் ஏஜெண்டான திரு. சேஷா ரெட்டி கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டவுடன் 16 குடியிருப்புகளையும் கீழ்க்கண்டவர்களுக்கு விற்பனை செய்துள்ளார்.

1. பிரியாதர்ஷனி ராதாகிருஷ்ணன்
2. பாலகுரு
3. லஷ்மி நாராயணன்
4. பிரசன்ன குமார்
5. ராஜ்குமார்
6. பவானி
7. ஜிலுயா ப்ரியா
8. பாலமுருகன்.ஆர்
9. பூங்கொடி
10. ஹரிஷ்
11. ரூபேத் பாபு
12. தனபால் துரைசாமி

13. உதயகுமார் மற்றும் சிந்துஜா
14. சுபிஷி இப்பர்கஸ் பிரைவேட் லிமிடெட்
15. கலைசெல்வி
16. பாபு.கே

எனவே,

1. வார்டு எண்91 முகப்பேரில் உள்ள அத்திப்பட்டு கிராமத்தில் A.N.A நிழற்சாலை, மனைஎண்–4, நில அளவை எண்.101/2இ, 102/டி மற்றும் 107/2பி இல் 0.91 மீ X 26.8 மீ=24.49ச.மீ இடத்தினை சாலை விரிவாக்கத்திற்காக தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

2. மேற்படி இடத்தினை சாலை விரிவாக்கப் பணிக்காக ஆகும் செலவுத் தொகையான ரூ.53,000/– (ரூபாய் ஐம்பத்திமூன்றாயிரம் மட்டும்) மனுதாரர்களிடமிருந்து வசூல் செய்யவும்,

நிலைக்குழு (நகரமைப்பு) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> “31.05.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (நகரமைப்பு) கூட்டத்தில் தீர்மான எண்.05/2012, நாள் 31.05..2012–ன்படி இதற்கு நிலைக்குழு (நகரமைப்பு) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**வ.து.ந.க.எண்.ஜி1/3520/2012**
**ஆணையரின் 31.05.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.197/2012 பொருள் எண்.21

**சொத்துவரி விதிப்பிற்கான குழு அமைத்தல்**

சென்னை மாநகர முனிசிபல் சட்டம், 1919, பிரிவு எண்.99ல் வழங்கப்பட்டுள்ள வழிவகையின்படி, சென்னை மாநகராட்சிக்குட்பட்ட எல்லைக்குள் கட்டப்படும் கட்டடங்களுக்கு சொத்துவரியானது சென்னை மாநகராட்சி ஆணையரால் விதிக்கப்படுகிறது.

கட்டப்படும் கட்டடங்களின் பரப்பளவு மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் சொத்துவரி விதிப்பினை மேற்கொள்ள சென்னை மாநகராட்சி ஆணையரால் கீழ்கண்டவாறு அலுவலர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டுள்ளது

| அலுவலரின் பதவி | வகைப்பாடு | |
|---|---|---|
| | குடியிருப்பு வசதி | குடியிருப்பு அல்லாத வசதி |
| உதவி வருவாய் அலுவலர் | 3000 சதுர அடி வரையில் | 1000 சதுர அடி வரையில் |
| மண்டல அலுவலர்/ கூடுதல் வருவாய் அலுவலர் | 3001 சதுர அடி முதல் 5000 சதுர அடி வரையில் | 1001 சதுர அடி முதல் 5000 சதுர அடி வரையில் |
| வருவாய் அலுவலர் | 5001 சதுர அடி முதல் 50000 சதுர அடி வரையில் | 5001 சதுர அடி முதல் 50000 சதுர அடி வரையில் |
| துணை ஆணையர்(வருவாய் மற்றும் நிதி) | 50001 சதுர அடிக்கு மேல் | 50001 சதுர அடிக்கு மேல் |

சொத்துவரி விதிப்பில் வெளிப்படையான முறை மேற்கொள்ளப்படவேண்டும் என்ற கருத்தினால், மேற்குறிப்பிட்டவாறு சென்னை மாநகராட்சி ஆணையரால் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அதிகாரப் பகிர்வு வழங்கப்பட்டிருப்பினும், மேற்குறிப்பிட்ட அலுவலர்களால் சொத்துவரி விதிப்பு செய்யப்படுவதற்கு முன்பாக சொத்துவரி விதிப்பு தொடர்பான விவரங்களை சரிபார்த்திட ஒரு குழு ஒன்று 30.04.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் விவரம் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| கூடுதல் ஆணையர்(வருவாய் மற்றும் நிதி) | – | தலைவர், |
| வருவாய் அலுவலர் | – | உறுப்பினர், |
| நகரப் பொறியாளர் | – | உறுப்பினர், |
| வருவாய் துறை தலைமையிடத்தில் பணிபுரிந்திடும் இரண்டு உதவி வருவாய் அலுவலர்கள் | – | உறுப்பினர்கள். |

மேற்குறிப்பிட்ட குழுவானது ஒவ்வொரு வெள்ளிக்கிழமை அன்றும் ரிப்பன் மாளிகையில் கூடி, மண்டல அலுவலகத்தினால் சமர்ப்பிக்கப்படும் சொத்துவரி தொடர்பான பொருட்களை ஆய்வு செய்து தனது ஒப்புதலை வழங்கிவருகிறது.

மேற்குறிப்பிட்ட நடைமுறையினால் சொத்துவரி விதிப்பு என்பது வெளிப்படையான முறையில் மேற்கொள்ளப்பட்டுவருகிறது என்பதனை மன்றத்தின் தகவலுக்காக நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக சமர்ப்பிக்கப்படுகிறது.

“12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.143/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் தகவலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.”

“இதனை மன்றம் பதிவு செய்கின்றது”

*******

**மஅ.6.ந.க.எண்.இ3/ 2947 /2012**

**ஆணையர் அவர்களின் 02.04.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.198/2012 **பொருள் எண்.22**

**மண்டலம்–6ல் ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) PHASE-I திட்டத்தின்மூலமாக குடிசை பகுதிகளில் வசிக்கும் பயனாளிகளுக்கு பங்களிப்புடன் கூடிய குடியிருப்பு வீடுகள் கட்டித்தர பயனாளிகளை தேர்வு செய்யப்பட்டதில் 8 தகுதியற்ற பயனாளிகளின் பெயர்களை ரத்து செய்யவும் புதியதாக 8 பெயர்களை சேர்த்து இத்திட்டத்தை செயல்படுத்த அனுமதி**

மண்டலம்–6, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் நகர்ப்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) PHASE-I மற்றும் (BSUP) PHASE-II திட்டத்தின்மூலமாக குடிசை பகுதிகளில் வசிக்கும் பயனாளிகளுக்கு பங்களிப்புடன் கூடிய குடியிருப்பு வீடுகள் கட்டித்தரவும் 27.10.2007 அன்று நடைபெற்ற மத்திய ஒப்புதல் மற்றும் கண்காணிப்பு குழு கூட்டத்தில் ரூ.12743.88 இலட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இதில் இடுகாடுகள், மேற்பார்வை செலவினம் மற்றும் சேவை துறைகளின் தடங்களை மாற்றியமைத்தல் ஆகிய இனங்களுக்கான செலவினம் முறையே ரூ.1933.94, ரூ.599.81 மற்றும் ரூ.68.08 இலட்சங்கள் நீங்கலாக மீதமுள்ள செலவினம் ரூ.10142 இலட்சங்களில் 50% மைய அரசும் 50% மாநில அரசும் ஏற்க வேண்டும் என்கின்ற அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் புதிய மண்டலம்–6ல் 170 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அவற்றில் 122 பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர். 41 பயனாளிகளின் வீடுகள் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. மீதமுள்ள கீழ்காணும் அட்டவணை–1ல் இடம் பெற்ற 8 பயனாளிகள் மேற்படி திட்டத்தின்கீழ் வீடு கட்டுவதற்கு முன்வராததால் இப்பயனாளிகளுக்கு பதிலாக அட்டவணை–2ல் காணும் 8 பயனாளிகளுக்கு மேற்படி திட்டத்தின்கீழ் குடியிருப்பு வீடுகள் கட்ட அனுமதி வேண்டப்படுகிறது.

**அட்டவணை–1**

**ரத்து செய்யப்படும் பயனாளிகளின் பட்டியல்**

| வ. எண் | வார்டு எண் | பயனாளியின் பெயர் (திரு/திருமதி) | குடிசைப் பகுதியின் பெயர் | பயனாளிகளின் விலாசம் | நிராகரிக்க காரணம் | மன்ற தீர்மான எண். |
|---|---|---|---|---|---|---|
| 1. | 62 | எல். நிர்மலா | ஜி.கே.எம். காலனி | 36/52, ஜி.கே.எம். காலனி, கொளத்தூர், செ–99 | பயனாளி பணி செய்ய விரும்பவில்லை | 261/11 29.8.09 |
| 2. | 62 | கே. விஸ்வகுமார் | ஜி.கே.எம். காலனி | 27/10, 32வது தெரு, ஜி.கே.எம். காலனி, செ–82 | பயனாளி பணி செய்ய விரும்பவில்லை | 261/11 29.8.09 |
| 3. | 40 | மோகனம்மாள் | திரு.வி.க. நகர் | 4/7, திரு.வி.க. நகர், 2வது தெரு, | பயனாளி பணி செய்ய விரும்பவில்லை | 534/10 30.12.10 |
| 4. | 62 | அலெக்ஸ் ஜான் போஸ்கோ | ஜி.கே.எம். காலனி | 75/30, 35வது தெரு, ஜி.கே.எம். காலனி, கொளத்தூர், செ–99 | பயனாளி பணி செய்ய விரும்பவில்லை | 535/10 30.12.10 |
| 5. | 62 | ஜி. வாசுதேவன் | அக்பர் சதுக்கம் | 19/9, அக்பர் சதுக்கம், 4வது தெரு, சென்னை–49 | பயனாளி பணி செய்ய விரும்பவில்லை | 535/10 30.12.10 |
| 6. | 40 | சரஸ்வதி | சாஸ்திரி நகர் | 441, சாஸ்திரி நகர் | பயனாளி பணி செய்ய விரும்பவில்லை | 156/11 29.6.11 |
| 7. | 62 | டி. புவனேஷ்வரி | ஜி.கே.எம். காலனி | 33/12, பிளாட் எண்.611, 32வது தெரு, ஜி.கே.எம். காலனி, கொளத்தூர், சென்னை–82 | பயனாளி பணி செய்ய விரும்பவில்லை | 215/11 29.7.11 |
| 8. | 62 | பி. வெங்கடேசன் | ஜி.கே.எம். காலனி | 76/36, ஜி.கே.எம். காலனி 35வது தெரு | பயனாளி பணி செய்ய விரும்பவில்லை | 261/11 29.08.11 |

மேற்காணும் 8 பயனாளிகளுக்கு பதிலாக கள ஆய்வின் மூலம் புதியதாக கண்டறியப்பட்ட கீழ்காணும் 8 மாற்று பயனாளிகளின் மூலம் இத்திட்டத்தினை செயல்படுத்தலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

**அட்டவணை–2**

**புதிய மாற்று பயனாளிகள்**

| வ. எண் | வார்டு எண் | பயனாளியின் பெயர் (திரு/திருமதி) | குடிசைப்பகுதியின் பெயர் | பயனாளிகளின் விலாசம் | குறிப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | 64 | ரவிசந்திரன் | கொளத்தூர் காலனி | 20/27, 33, கிழக்கு தெரு (எம்.ஐ.ஜி.பிளாக்) கொளத்தூர்,சென்னை–99 | |
| 2. | 64 | P . முத்து | டாக்டர்.அம்பேத்கார் நகர் | 163, டா.அம்பேத்கார் நகர், 2வது குறுக்கு தெரு, கொளத்தூர், சென்னை–99 | |
| 3. | 64 | கே. கோவிந்தம்மாள் | டாக்டர்.அம்பேத்கார் நகர் | 164, டா.அம்பேத்கார் நகர், 1வது குறுக்கு தெரு, கொளத்தூர்,சென்னை–99 | |
| 4. | 64 | எச். ஜெயவேல் | டாக்டர்.அம்பேத்கார் நகர் | 58, புதிய எண்.25 சி, 1வது குறுக்கு தெரு, டா.அம்பேத்கார் நகர், 1வது குறுக்கு தெரு, கொளத்தூர், செ–99 | |
| 5. | 64 | கே. பத்மாவதி | டாக்டர்.அம்பேத்கார் நகர் | 203, 2வது தெரு, டா.அம்பேத்கார் நகர், கொளத்தூர், சென்னை–82 | |
| 6. | 65 | ஜான் ஆரோக்கியதாஸ் | ஜி.கே.எம். காலனி | 74, 36வது தெரு, ஜி.கே.எம். காலனி, சென்னை–82 | |
| 7. | 72 | எம். அசினா பீவி க/பெ. முன்னா முகம்மது | வ.உ.சி.நகர் | 224, வ.உ.சி.நகர் 6வது தெரு, புளியந்தோப்பு, சென்னை–12 | |
| 8. | 72 | சி. ராமன் த/பெ. சின்னகுழந்தை | நரசிம்ம நகர் | 403, சாஸ்திரி நகர், 21வது தெரு, புளியந்தோப்பு, சென்னை–12 | |

மேற்கண்ட அட்டவணை–1ல் கண்டுள்ள 8 பயனாளிகளின் பெயர்களை ஏற்கனவே மன்ற தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்ட மன்ற தீர்மான எண்.261/2011 நாள்.02.9.2011, 534/2010 நாள்.30.12.2010, 535/2010 நாள்.30.12.2010, 156/2011 நாள்.29.6.2011 மற்றும் 215/2011 நாள்.29.07.2011 ஆகியவைகளில் இருந்து நீக்கவும் அதற்கு பதிலாக அட்டவணை–2ல் குறிப்பிட்டுள்ள 8 பயனாளிகளுக்கு இத்திட்டத்தை செயல்படுத்த 6வது மண்டல வார்டு குழு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம்–6 ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM) கீழ் நகர்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) PHASE-I மற்றும் (BSUP) PHASE-II திட்டத்தின்மூலமாக குடிசை பகுதிகளில் வசிக்கும் பயனாளிகளுக்கு பங்களிப்புடன் கூடிய குடியிருப்பு வீடுகள் கட்டித்தரும் திட்டத்திலிருந்து 8 பயனாளிகளை நீக்கம் செய்யவும், இவர்களுக்கு பதிலாக மேற்குறிப்பிட்டுள்ள 8 பயனாளிகளை இத்திட்டத்தில் சேர்க்கும் பொருட்டு ஒரு பயனாளிக்கு ரூ.1.30 இலட்சம் வீதம் தவணைகளாக வழங்க மாமன்றத்திற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரி விதிப்பு) மற்றும் (நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

11.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.134/2012 நாள்.11.6.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

"12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.169/2012 நாள்.12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது."

"இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது"

*******

**ம.அ.5.ந.க.எண்.பி2/2825/20**

**முதன்மை செயலர் மற்றும் ஆணையர் அவர்களின் 2.4.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.199/2012 பொருள் எண்.23

**ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் (JNNURM) நகர்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் வழங்கும் (BSUP) திட்டத்தின் மூலமாக மண்டலம்–8ல் குடிசை பகுதிகளில் பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய குடியிருப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தில் வீடு கட்ட தேர்ந்தேடுக்கப்பட்ட பயனாளிகளில் வீடு கட்ட முன்வராத பயனாளிகளுக்கு மாற்றாக வேறு பயனாளிகளை திட்டத்தில் சேர்க்க அனுமதி**

ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புனரமைப்பு திட்டம் (JNNURM) *நகர்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் வழங்கும் (BSUP) திட்டத்தின் மூலமாக மண்டலம்-8ல்* குடிசை பகுதிகளில் பயனாளிகளின் பங்களிப்புடன் கூடிய குடியிருப்பு வீடுகள் கட்டித் தரும் திட்டத்தின் கீழ் புதிய மண்டலம்–8ல் வார்டு–97, 98, 99, 100, 101, 102, மற்றும் 104ல் மன்ற தீர்மான எண்.389 / 29.10.2009, 279 / 22.6.2010, 536 / 30.12.2010, 215/ 29–7–2011, 216/29–7–2011, ன்படி 243 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. இவர்களில் 23 பயனாளிகள் சிலர் வீடுகளை விற்பனை செய்துவிட்ட காரணத்தினாலும், சில உரிமையாளர்கள் இறந்துவிட்டமையால் வாரிசுதாரர்கள் பிரச்சனைகள், பணம் இல்லாமை, உரிய ஆவணங்களை தர இயலாமை நிலையில் உள்ளனர்.

BSUP-JNNURM திட்டத்தின் கீழ் இப்பணியினை குறித்த காலத்திற்குள் முடிக்க வேண்டியுள்ளதால் மேற்குறிப்பிட்டுள்ள காரணங்களின் அடிப்படையில், ஏற்கனவே மன்ற ஒப்புதல் பெற்ற 23 எண்ணிக்கையில் உள்ள பயனாளிகளின் பெயர்களை நீக்கம் செய்யவும் அவர்களுக்கு பதிலாக 23 எண்ணிக்கையில் ஆன புதிய பயனாளிகளின் பெயர்களை சேர்த்து குடியிருப்பு வீடுகள் கட்டுவதற்கு வார்டு குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் நீக்கம் செய்ய வேண்டிய பயனாளிகளின் பட்டியல் மற்றும் விருப்பம் தெரிவித்துள்ள பயனாளிகளின் பட்டியல் பின்வருமாறு :-

**மன்ற தீர்மான எண்.389 / 29.10.2009, 279/22.6.2010, 536/30.12.2010, 215/ 29–7–2011, 216/29–7–2011ல் பெறப்பட்ட பட்டியலில் இருந்து பெயர் நீக்கம் செய்ய வேண்டிய பயனாளிகளின் விவரம்**

| வரிசை எண் | வார்டு எண் | பயனாளிகளின் பெயர் திரு. / திருமதி | திட்டம் (Phase-I or Phase- II) | பயனாளிகளின் விலாசம் | மன்றக்கூட்ட வரிசை எண். | மன்றக்கூட்ட தீர்மான எண். நாள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 97 | ராணி | Other Slum | 45, சோலை தெரு, அயன்புரம்,சென்னை– 23 | 19 | 215/ 2011 29.7.2011 |
| 2 | 97 | முருகன் | Other Slum | 67, சோலை தெரு, அயன்புரம்,சென்னை–23 | 20 | 215/ 2011 29.7.2011 |
| 3 | 97 | கோபால் சாமி | Phase -II | 41, சோலையம்மன் கோயில் தெரு,அயன்புரம்,சென்னை–23 | 7 | 215/ 2011 29.7.2011 |
| 4 | 97 | பத்மாவதி | Phase -II | 30, சோலையம்மன் கோயில் தெரு,அயன்புரம்,சென்னை–23 | 10 | 215/ 2011 29.7.2011 |
| 5 | 98 | விஜயா | Other Slum | 8/22, நாராயணன் தெரு, அயன்புரம்,சென்னை–23 | 75 | 215/ 2011 29.7.2011 |
| 6 | 98 | வீரப்பன் | Other Slum | 6/29, நாராயணன் தெரு, அயன்புரம், சென்னை–23 | 74 | 215/ 2011 29.7.2011 |
| 7 | 98 | கே. ஆதாம் | Other Slum | 218, புதுநகர், அயன்புரம், சென்னை–23 | 70 | 215/ 2011 29.7.2011 |
| 8 | 98 | பி. தேவன்னா | Phase- I | 54/112, டாக்டர். அம்பேத்கார் நகர்,அயன்புரம், சென்னை– 23 | 65 | 215/ 2011 29.7.2011 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
4) இவ்வொப்பத்தொகையானது 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 6.97% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 1.08% விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க 04.06.2012 அன்று நடைபெற்ற ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி மண்டல அலுவலர் 14 அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத் துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகளை மேம்படுத்தப்படவுள்ளதாலும் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலமும் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் ஆர்.கே. அண்டு சன்ஸ் அவரின் ஒப்பத்தொகை ரூ.63186422.66 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.
2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கினைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.
3) 2011–2012ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் உட்புற சாலைகளுக்கான ஒப்பங்கள் கோரப்பட்டன. இதற்கான மதிப்பீடுகள் 2010–2011 ஆம் ஆண்டில் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டவையாகும். ஆனால் பணிகள் 2011–2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருந்ததாலும், 2011–2012 ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியல் 2010–2011ஆம் ஆண்டின் விலைவிவரப்பட்டியலைவிட 14 முதல் 15 விழுக்காடு வரை அதிகமாக இருந்ததாலும் ஒப்பந்தங்கள் 2010–2011 ஆண்டு விலைப்பட்டியலை விட (+) 12.00% அதிகமாக அளிக்கப்பட்டது. இது போன்றே இவ்வாண்டிலும் 2012–2013ஆம் ஆண்டின் விலைப்பட்டியல் 2011–2012 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலைவிட குறைந்தது 12 முதல் 15 விழுக்காடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.
4) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது
5) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+) 6.97% விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (–) 1.08% விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் ஆர்.கே. அண்டு சன்ஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.63186422.66 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) 6.97% அதிகம் மற்றும் சந்தைவிலையைவிட (–) 1.08% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்–3Aக்கு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் ஆர்.கே. அண்டு சன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.63186422.66க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள் ஆர்.கே. அண்டு சன்ஸ் அவர்களுக்கு **2011–12**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) **6.97**% அதிகமான ஒப்பத்தொகை ரூ.**6,31,86,422.66**க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**11.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (பணிகள்) கூட்டத்தின் தீர்மான எண்.**131/2012** நாள் **11.6.2012**–ன் படி இதற்கு நிலைக்குழு (பணிகள்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வ.வி.ம.நி.) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘**12.06.2012** அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.**164/2012** நாள்.**12.06.2012**–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரைசெய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>பே.சா.து.ந.க.எண்.பி2/1670/2012</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 12.06.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**209/2012** பொருள் எண்.**33**

**<u>வயதுமுதிர்வு ஓய்வு</u>**

திரு. E. சுப்பிரமணியன், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை, (பணிமாற்று அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை துறை) அவர்கள் **30.06.2012** பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற உள்ளார்.

தனியர் **30.06.1975** அன்று சர்வேயராக சென்னை மாநகராட்சியில் பணியமர்வு செய்யப்பட்டார். **19.05.1979** அன்று இளநிலை பொறியாளர் பதவி உயர்வு பெற்றார். **28.02.2000** முதல் உதவி செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்றார். **19.01.2012** அன்று செயற் பொறியாளராக பதவி உயர்வு பெற்று தொடர்ந்து பணியாற்றி வருகிறார். தனியர் பணிபுரிந்த அனைத்து துறை மற்றும் மண்டலங்களிலிருந்தும் ஒழுங்கு நடவடிக்கை, தணிக்கை தடைகள் மற்றும் முன்பண நிலுவைகள் ஏதேனும் இருப்பின் அதனை இத்துறைக்கு அனுப்பக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அதற்கிணங்க தனியர் சர்வேயராகவும், இளநிலை பொறியாளராகவும், உதவி பொறியாளராகவும், உதவி செயற் பொறியாளராகவும் மற்றும் செயற் பொறியளராகவும் பணியாற்றிய வெவ்வேறு துறை மற்றும் காலங்களாகிய பணித்துறை, மாவட்ட அலுவலகம் (வடக்கு) மண்டலம் **–5**, மாவட்ட அலுவலகம் (தெற்கு) மண்டலம் **– 10**, மண்டலம் **– 5**, கட்டடத் துறை, மண்டலம் **–8** மற்றும் திடக்கழிவு மேலாண்மைத் துறையில் தனியர் மீது முன்பணம் மற்றும் தணிக்கை தடை ஏதும் இல்லை எனவும், பின்னர் தெரியவரின் பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனையின் பேரில் சான்று வழங்கப்பட்டுள்ளது.

தனியர் பேருந்து சாலைகள் துறையில் பணியாற்றிய காலத்தில் தனியரை பொறுப்பாக்கும் **2009–10**ம் ஆண்டுக்கான தணிக்கை தடை சீட்டு எண்.**16,17,19 (3,4,8) 24, 25, 27, 29, 31** மற்றும் **34** ஆகிய தணிக்கைத் தடைகள் நிலுவையில் உள்ளன. தனியரை கூட்டுப் பொறுப்பாக்கும் மொத்த மதிப்பு ரூ.**10,93,680/–** ஆகும். மேலும் இத்தணிக்கைத் தடைகள் அனைத்தும் கூட்டுப் பொறுப்பில் உள்ளதால், துறையின் மூலம் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையுடன் கூட்டமர்வு நடத்தி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும், தனியரின் கூட்டுப் பொறுப்பாக்கும் தணிக்கை தடையிலிருந்து விடுவித்து வயது முதிர்வு ஓய்வு பெற எவ்வித ஆட்சேபணையுமில்லை என்பதனை தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

தனியர் சென்னை மாநகராட்சியில் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகை ஏதும் இல்லை என சான்று பெறப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது விழிப்புத் துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் செயற்பொறியாளர் பதவி வகுப்பு–2ன் கீழ் வருவதால் மன்றத்தின் அனுமதி பெற்று ஓய்வு பெற அனுமதிக்க வேண்டும்.

ஆகையால், திரு. E. சுப்பிரமணியன், செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை (பணிமாற்று அடிப்படையில் திடக்கழிவு மேலாண்மை துறை) அவர்களை தணிக்கை தடை மற்றும் மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதி இழப்புகள் ஏதேனும் பின்னர் தெரியவரின், அதில் அடங்கிய தொகையினை இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தி, **30.06.2012** பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக பணி ஒய்வில் செல்ல அனுமதியும் மற்றும் பணியிலிருந்து விடுவிக்கவும் நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.4.ந.க.எண்.ஆர்1 /321/2012</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 11.06.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.210/2012 பொருள் எண்.34

**<u>வயது முதிர்வு ஓய்வு</u>**

சென்னை மாநகராட்சி, மண்டலம்–4ல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து வரும் திரு. ப்பி. ரவீந்தரன் அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.06.2012 பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளதாக 13.01.2012 நாளிட்ட பொதுத்துறையின் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.ப்பி.ரவீந்தரன், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, மண்டலம்–4 அவர்கள் சென்னை மாநகராட்சியில் லஸ்கர் பதவியில் 23.09.77ல் பணியில் சேர்ந்துள்ளார். தட்டச்சராக 14.12.1978ல் பணியில் சேர்ந்தார். 30.04.1979 முதல் சுருக்கெழுத்தராகவும், 24.12.1988 முதல் உதவியாளராகவும் பதவி உயர்வு பெற்றார். வருவாய்த்துறையில் 11.08.2000 முதல் உரிமம் ஆய்வாளராகவும், 07.09.2006 முதல் வரிமதிப்பீட்டாளராகவும் பதவி உயர்வு பெற்று, 11.01.2010 அன்று முதல் உதவி வருவாய் அலுவலராக/தலைமையிடத்தில் பதவி உயர்வு அளிக்கப்பட்டு தற்போது மண்டலம்–4ல் உதவி வருவாய் அலுவலராக பணிபுரிந்து வருகிறார்.

தனியர் பணிபுரிந்த துறை/ மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை நிலுவை (ம) முன்பண நிலுவை ஏதுமில்லை என சான்று பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

வருவாய் அலுவலர்/தலைமையிடம் அவர்களின் 24.04.2012 நாளிட்ட குறிப்பில் தனியரை பொறுப்பாக்கும் தணிக்கை தடை 2007–2008 முதல் 2008–2009 வரை ரூ.1,01,215/– உள்ளது எனவும், அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை (ம) முன்பணம் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் மீது உள்ள தணிக்கை தடைகள் அனைத்தும் கூட்டுப் பொறுப்பான தடைகளாகும். இத்தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியது பின்னர் தெரியவரின் இதனை தனியரின் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்து கொள்ளலாம் என பரிந்துரைக்கப்படுகிறது.

27.04.2012 நாளிட்ட சிறப்பு அலுவலர், சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் கடிதத்தில், திரு.ப்பி.ரவீந்தரன், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை மண்டலம்–4 அவர்கள் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை ஏதுமில்லை என தெரிவித்துள்ளார்.

விழிப்பு அலுவலர் சென்னை மாநகராட்சி அவர்கள் திரு.ப்பி.ரவீந்திரன், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை மண்டலம்–4 அவர்கள் மீது விசாரணை இந்நாள்வரை விழிப்பு குழுமத்தில் நிலுவையில் இல்லை என 05.06.2012 நாளிட்ட குறிப்பில் தெரிவித்துள்ளார். மேலும் தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் மண்டலம்–4ல் நிலுவையில் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே, திரு.ப்பி.ரவீந்திரன், உதவி வருவாய் அலுவலர், வருவாய்த்துறை, மண்டலம்–4 அவர்களின் மீது தணிக்கைத்தடை, தணிக்கை தடைகளால், சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியிருப்பது ஏதேனும் பின்னர் தெரியவரின் அதனை இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரை 30.06.2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மி.து.ந.க.எண்.அ2/046/2011**

**ஆணையாளர் அவர்களின் 12.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.211/2012 பொருள் எண்.35

**வயதுமுதிர்வு ஓய்வு**

சென்னை மாநகராட்சி, மின்துறையில் கோட்ட மின் பொறியாளராக பணிபுரியும் திரு. ந. ஜெயராமன் அவர்கள் வருகின்ற 31.07.2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளார். அன்னாரது பிறந்த தேதி 30.07.1954 ஆகும்.

திரு. ந. ஜெயராமன் அவர்கள் 15.09.1975 அன்று சென்னை மாநகராட்சியில் வரைவாளராக பணியில் சேர்ந்துள்ளார். அப்பதவியில் 15.09.1975 முதல் தகுதிகாண் பருவம் துவக்கப்பட்டு 14.09.1977 பிற்பகல் முதல் தகுதிகாண் பருவத்தினராக அறிவிக்கப்பட்டுள்ளார் பின்னர் 21.03.1984 முதல் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

தனியர் 08.10.1999 அன்று உதவி கோட்ட மின் பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை மி.து.ந.க.எண்.அ2/5726/2007, நாள்.26.06.2008–ன்படி 08.10.1999 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. 30.09.2009 முதல் கோட்ட மின் பொறியாளராக பதவி உயர்வு பெற்றுள்ளார். சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை பொ.து.ந.க.எண்.ஈ1/19746/2009, நாள்.23.02.2010–ன்படி 30.09.2009 முதல் பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி மின்துறையில் அன்னார் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் விசாரணை ஏதும் இல்லை. இவர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை என்றும் சான்றிதழ் பெறப்பட்டுள்ளது. மேலும், விழிப்பு குழுமத்தில் இவர்மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கைப் பெறப்பட்டுள்ளது.

தனியர் பணிபுரிந்த மண்டலங்கள் மற்றும் துறையிலிருந்து தணிக்கைத்தடை, முன் பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதுமில்லை என்ற சான்று பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது. இவரது ஓய்விற்கு பின்னர் இவரை பொறுப்பாக்கிய தணிக்கைத்தடை மற்றும் நிதி இழப்பீடு ஏதும் பின்னர் தெரியவரின் இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனை உறுதிமொழிக் கடிதத்தில் துறைத்தலைவரின் மேல் ஒப்பம் பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி பணியமைப்பில் கோட்ட மின் பொறியாளர் பதவி வகுப்பு 2–ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது என்பதால் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறுவதற்கு மன்றத்தின் அனுமதி பெறப்படல் வேண்டும்.

திரு.ந.செயராமன், கோட்ட மின் பொறியாளர் (தலைமையிடம்) அவர்கள் தணிக்கைத்தடை மற்றும் நிதி இழப்பீடுகளுக்கு இவர் பொறுப்பாகிறார் என்பது பின்னர் தெரியவரின் இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதியத்திலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அன்னாரை 31.07.2012 பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>ம.அ.13.ந.க.எண்.சி4/2623/2012</u>**

**<u>ஆணையாளர் அவர்களின் 08.05.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.**212/2012** பொருள் எண்.**36**

**<u>வயது முதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி</u>**

ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ம.அ.**13**.ந.க.எண்.சி**4/2623/2012** நாள் **30.04.2012** ஆணையின்படி திரு.என்.செபஞானம் செயற்பொறியாளர், மண்டலம்–**13** அவர்களை உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்புகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின் அத்தொகையினை தனியரது ஓய்வுக்கால பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்கு உட்படுத்தியும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும், தனியரை **30.04.2012** அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வு பெற்றார்.

தனியர் வகித்த பதவி சென்னை மாநகராட்சி பணியாளர் பிரிவு வகுப்பு–**2**ன் கீழ் வருவதால் தனியரது பணி ஓய்வுக்கு மன்றத்தின் அனுமதி பெறப்பட வேண்டும்.

திரு. என். செபஞானம் அவர்கள் **21.05.1977** அன்று சென்னை மாநகராட்சியில் ஓவர் சீயராக பணியில் சேர்ந்துள்ளார். தனியர் **30.04.2012** அன்று **58** வயது பூர்த்தியடைந்து வயது முதிர்வு ஓய்வு பெற வேண்டும்.

மேலும், தனியர் மீதான தணிக்கை தடை நிலுவை, அலுவலக முன் பணம் நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை நிலுவை ஏதும் உள்ளதா என, தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களுக்கு குறிப்பு அனுப்பப்பட்டது. மண்டலம்–**6,7,8,9,10** (பழையது), பணித்துறை, கட்டடத்துறை மற்றும் மழைநீர் வடிகால்துறை ஆகிய துறைகளிடமிருந்து விவரங்கள் பெறப்பட்டது. மேலும் மண்டலம்–**10**ல் (பழையது) தனியரை கூட்டுப்பொறுப்பாக்கும் தணிக்கை தடை நிலுவையில் உள்ளது. நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைக்கு தனியரிடம் பதில் பெறப்பட்டு துணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறைக்கு பதிலும் மற்றும் அதற்கான நினைவூட்டுதலும் அனுப்பப்பட்டுள்ளது.

மேலும், தனியர் மீது விழிப்பு துறையில் விசாரணை ஏதும் உள்ளதா என கோரப்பட்டதில், **29.03.2012** நாளிட்ட விழிப்பு குழுமத்தின் கடிதத்தில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆகையால் திரு. என். செபஞானம், செயற்பொறியாளர், மண்டலம்–**13** அவர்களை தணிக்கை தடை மற்றும் மாநகராட்சிக்கு இவரால் ஏற்பட்ட நிதி இழப்புகள் ஏதேனும் பின்னர் தெரியவரின், அதில் அடங்கிய தொகையினை இவரது பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்படுத்தி, தனியரை **30.04.2012** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி அளிக்கப்பட்டதற்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**ம.அ.9.ந.க.எண்.எச்1/084/2012**
**ஆணையாளர் அவர்களின் 06.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.213/2012 பொருள் எண்.37

**வயதுமுதிர்வு ஓய்வு பின்னேற்பு அனுமதி**

டாக்டர். திருமதி.ஜே.ஜாய்ஸ் திலகம், மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) சுகாதாரத்துறை, மண்டலம்–9 அவர்கள் வயது முதிர்வு ஓய்வு நாள்.31.05.2012.

டாக்டர். திருமதி.ஜே.ஜாய்ஸ் திலகம், மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) 03.01.1980 முதல் சென்னை மாநகராட்சியில் பணியமர்த்தப்பட்டு பணிபுரிந்து வருகின்றார். தனியர் மருத்துவ அலுவலராக பணியமர்த்தப்பட்ட நாளான 03.01.1980 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மருத்துவ அலுவலர் பதவியில் 03.01.1980 முதல் பணிவரன்முறைப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மருத்துவ அலுவலர் பதவியில் 03.01.1982 முதல் தகுதிக் காண்பருவம் முடித்தவராகவும் அறிவித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர். திருமதி.ஜே.ஜாய்ஸ் திலகம், மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) அவர்கள் மருத்துவ அலுவலர் பதவியில் 05.01.1990 முதல் தேர்வுநிலை ஊதிய விகிதத்திலும், 05.01.2000 முதல் சிறப்பு நிலை ஊதிய விகிதத்திலும் ஊதிய நிர்ணயம் செய்து, வழங்கப்பட்டு வருகின்றது.

டாக்டர். திருமதி.ஜே.ஜாய்ஸ் திலகம், மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி), சுகாதாரத்துறை, மண்டலம்–9 அவர்கள் ஓய்வு பெற வேண்டிய நாள்.31.05.2012, அன்னார் மீது துறை ரீதியாக எந்த ஒரு ஒழுங்கு நடவடிக்கையும் குற்றவியல் நடவடிக்கையும் நிலுவையில் இல்லை. தனியர் சென்னை மாநகராட்சியில் வீடு கட்டும் முன்பணம் வாங்கியுள்ளார். அதற்கான வட்டி தொகை பிடித்தம் 31.05.2012வுடன் முடிவடைகிறது. மேலும் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கணக்கு முடிக்கப்பட்டுள்ளது.

டாக்டர். திருமதி. ஜே. ஜாய்ஸ் திலகம், மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) சுகாதாரத்துறை, மண்டலம்–9 அவர்கள் தமிழ் நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் செயல் அலுவலருக்கான தேர்வு, மருத்துவ குறியீடு தேர்வு தேர்ச்சி பெற்று பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் அவர்களின் 12.03.2012 நாளிட்ட குறிப்பில் தனியர் 03.01.1980 முதல் 31.03.1989 வரை பொது சுகாதாரத்துறையில் பணிபுரிந்த காலங்களில் உள்ளாட்சி நிதித் தணிக்கையிலிருந்து பெறப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்ததில் தணிக்கை தடை, ஒழுங்கு நடவடிக்கை, முன்பண நிலுவைத் தொகையோ நிலுவையில் இல்லை என்று ''இன்மை அறிக்கை'' அளிக்கப்பட்டுள்ளது. மேலும் பின்னர் தெரியவரின் தனியரிடமிருந்து பிடித்தம் செய்ய விருப்ப கடிதம் பெற்று மேல்நடவடிக்கை தொடரலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்–5 அவர்களது 20.03.2012 நாளிட்ட குறிப்பில் தனியர் புதிய மண்டலம்–5, பழைய மண்டலம்–3ல் பணிபுரிந்த காலங்களான 04.07.2008 முதல் 15.12.2008 வரை தனியரை பொறுப்பாக்கும் முன் பண நிலுவை, தணிக்கைத்தடை மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர்–13 அவர்களின் 04.04.2012 நாளிட்ட குறிப்பில் 1989 முதல் 2009 வரை உள்ள ஆண்டுகளில் தனியரை பொறுப்பாக்கும் வகையில் தணிக்கை தடைகள், முன்பண நிலுவை ஏதும் இல்லை என்றும், மேலும் 2009–2010, 2010–2011, 2011–2012 ஆண்டுகளுக்கு தணிக்கை அறிக்கை இன்னும் பெறப்படவில்லை என்றும் பெறப்பட்ட பின்னர் அவ்வறிக்கையில் தனியர் மீது தணிக்கை தடை தெரியவரின் தனியரே பொறுப்பாவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், அரசாணை எண்.845/நிதி(அ)(ஓ) நாள்.19.10.1935 மற்றும் பிரிவு 918(P) தமிழ் நாடு ஓய்வூதிய விதிகளின்படி ஓய்வூதிய பணிப்பயன் தொகைகள் தவறானது என்று பின்னர் தெரியவரின் அத்தொகை முழுவதையும் சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தி விடுகிறேன் என்ற உறுதிமொழியும் ஓய்வூதிய படிவத்தில் தனியரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி, சுகாதாரத்துறை, மண்டலம்–9ல் பணிபுரியும் டாக்டர். திருமதி. ஜே. ஜாய்ஸ் திலகம், மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) சுகாதாரத்துறை, மண்டலம்–9 என்பவர் மீது நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் சென்னை மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு இருப்பது மற்றும் நீண்டகால முன்பணம் நிலுவைகள் சரி செய்யப்படாமல் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அவைகளுக்கு தனியரைப் பொறுப்பாக்கி அவரின் ஓய்வூதியப் பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்கு உட்பட்டும் **31.05.2012** அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

எனவே, டாக்டர். திருமதி. ஜே. ஜாய்ஸ்திலகம், மருத்துவ அலுவலர் (ஹோமியோபதி) சுகாதாரத்துறை, மண்டலம்–9 அவர்களை மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு **31.05.2012** பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்தமைக்கு நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>பே.சாது.ந.க.எண். பி2/0792 / 2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 12.06.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.214/2012 பொருள் எண்.38

**<u>தன்விருப்ப ஓய்வு – பின்னேற்பு அனுமதி</u>**

சென்னை மாநகராட்சி பேருந்து சாலை துறையின் உதவி செயற்பொறியாளர் திரு.டி.தியாகராஜன், அவர்கள் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன் விருப்ப ஓய்வில் செல்ல உள்ளதால் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி மற்றும் பணியிலிருந்து விடுவிக்கவேண்டி 27.02.2012 அன்று வணக்கத்திற்குரிய மேயர் அலுவலகத்தில் அளித்த கடிதத்தில் கோரியுள்ளார்.

திரு.டி.தியாகராஜன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் 06.11.1976 பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சியில் பணிபார்வையாளராக பணியை துவக்கியுள்ளார். தற்பொழுது உதவி செயற்பொறியாளராக பணி புரிகின்றார். தனியர் வகித்து வந்த பணி பார்வையாளர் பதவி மற்றும் தற்பொழுது வகித்துவரும் உதவி செயற்பொறியாளர் ஆகியனயாவும் பணிவரன் செய்யப்பட்டுள்ளது.

திரு.டி.தியாகராஜன், உதவிசெயற்பொறியாளர் பிறந்த தேதி 20.09.1955, ஆக அவர் வயது முதிர்வு ஓய்வு நாள் 30.09.2013 ஆகும். மேலும், தனியர் 36 ஆண்டுகளுக்கு மேல் பணி புரிந்துள்ளார்.

சென்னை மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்கள் 24.04.2012 நாளிட்ட மேற்குறிப்பில் திரு.டி.தியாகராஜன், உதவிசெயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்களின் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியரின் மீது வழக்குகள் நிலுவை குறித்த இயக்குநர், ஊழல் மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை, சென்னை அவர்கள் 08.05.2012 நாளிட்ட கடிதத்தில் இவர் மீது எந்தவித குற்றச்சாட்டுகளும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 24.04.2012 அன்று மத்திய குற்ற புலனாய்வுத்துறை (SBCID) துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. மத்திய குற்றக் புலனாய்வுத் துறையிலிருந்து 14.05.2012 நாளிட்ட குறிப்பில் ஏதுமில்லை என பெறப்பட்டுள்ளது

இதன் பொருட்டு தெரிவிப்பது யாதெனில், இவ்வலுவலர் பணியாற்றிய அனைத்து துறை / மண்டலங்கள் மற்றும் பேருந்து சாலைகள் துறையிலும் ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டு விசாரனைகள் ஏதும் நிலுவையில் இல்லை. மேலும், தனியர் பணி புரிந்த துறையில் இவரை தனிப்பட்ட முறையில் பொறுப்பாக்கி தணிக்கைத் துறையால் தெரிவிக்கப்பட்ட நிதி இழப்பீடு ஏதுமில்லை. இவருக்கு வழங்கப்பட்ட மிகை ஊதியம் மற்றும் தணிக்கை தடைகளில் மாநகராட்சிக்கு இவரால் நிதி இழப்புகள் ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், அத்தொகையினை இவரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய பணிக் கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு 25.05.2012 நாளிட்ட ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி இவரை 26.05.2012 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

ஆகையால் திரு.டி.தியாகராஜன், உதவி செயற்பொறியாளர், பேருந்து சாலைகள் துறை அவர்கள் மீது தணிக்கைத் தடைகள் மற்றும் மாநகராட்சிக்கு இவரால் ஏற்படும் நிதி இழப்பீடு இருப்பதாக பின்னர் தெரியவரின் அத்தொகையினை இவரது பணிக்கொடையில் மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு என்ற நிபந்தனைக்குப்பட்டு இவரை 26.05.2012 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்தற்கு பணியிலிருந்து விடுத்தமைக்கும் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி பெற நியமனக்குழு மூலமாக மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது ."

“இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது”

*******

**மா.கு.ந.(ம)ம.கு.ந.எண்.எப்4/0039/2012**
**ஆணையாளர் அவர்களின் 06.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.215/2012 பொருள் எண்.39

**பணி விலகல் – பின்னேற்பு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில், டாக்டர். திருமதி. சாந்தி விவேகானந்த், மருத்துவ அலுவலர் என்பவர் 1.6.2005 முதல் தொகுப்பூதியத்தில் பணியமர்த்தப்பட்டு, பின்பு 6.10.2007–ல் காலமுறை ஊதியத்தில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

தனியர், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் தனது பணியினை துறப்பு செய்வதாகவும், தனது பணி துறப்பினை ஏற்றுக் கொள்ளுமாறு கோரி நியமன அதிகாரிக்கு 3.1.2012 நாளிட்ட கடிதம் அளித்துள்ளார்.

டாக்டர். திருமதி. சாந்தி விவேகானந்த், மருத்துவ அலுவலர் என்பவர், தனக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் பணிவிலக வேண்டியுள்ளதை ஏற்க, தமிழ் நாடு சார்நிலை அலுவலர் பணி விலக, விதி 41A–ன்படி, பணிவிலகலுக்கு மூன்று மாதத்திற்கு முன் கடிதம் அளிக்க வேண்டும்.

இவர் மீது இத்துறையில் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை. சென்னை மாநகராட்சி, விழிப்புத் துறையிலிருந்தும், காவல்துறை கண்காணிப்பாளர், பாதுகாப்பு பிரிவு, குற்றப் புலனாய்வு அலுவலகத்திலிருந்தும், விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்ககம், சென்னை–28–லிருந்தும் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

பணிவிலகலில் செல்ல அனுமதி கோரியுள்ள டாக்டர். திருமதி. சாந்தி விவேகானந்த், மருத்துவ அலுவலர், சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன்பண நிலுவை ஏதும் இல்லை என்று மண்டல அலுவலரால் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர், சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் கடன் பாக்கி மற்றும் உறுப்பினர் இல்லை என்று சான்று பெறப்பட்டு கோப்பில் இணைக்கப்பட்டுள்ளது.

தனியரை மன்றத்தின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு 02.04.2012 பிற்பகல் முதல் பணிவிலகலில் செல்ல அனுமதித்து 30.3.2012 நாளிட்ட ஆணை வழங்கப்பட்டது.

எனவே, டாக்டர். திருமதி. சாந்தி விவேகானந்த், மருத்துவ அலுவலர் அவர்களை பணிவிலகலில் செல்ல அனுமதித்ததற்கு நியமனக்குழு மூலம் மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது''

*******

## பொ.து.ந.க.எண். ஈ1/05646/2011
## ஆணையாளர் அவர்களின் 07.06.2012 நாளிட்ட குறிப்பு

தீர்மான எண்.216/2012 பொருள் எண்.40

### உறுதியாக்கம் – அனுமதி வேண்டி

அரசாணை எண்.2(ப) எண்.89, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.08.09.2011ன்படி 2011–2012 ஆம் ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்வுக்கு 6 நபர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும், தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள பொறியாளர்களுக்கு கண்காணிப்பு பொறியாளர்களாக பதவி உயர்வு வழங்கியும் அரசு ஆணை வழங்கியுள்ளது. இதனை தொடர்ந்து கண்காணிப்பு பொறியாளர் பதவியில் காலியாகவுள்ள பணியிடங்களில் தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 3 பொறியாளர்களுக்கு ரூ.37400–67000+ தரஊதியம் 8700 என்ற காலமுறை ஊதியத்தில் கண்காணிப்பு பொறியாளர்களாக ஆணையரது 21.09.2011 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

2011–2012அம் அண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவி உயர்விற்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படும் போது, திரு. கே. யதுகுலராவ் மற்றும் திரு. ஏ. வின்செண்ட், செயற் பொறியாளர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால், தனியர்களின் பெயர்களை தெரிவுப்பட்டியலில் சேர்க்காமல் ஒத்திவைக்கப்பட்டது. அரசாணை (ப) எண்.339, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME 4) துறை, நாள் 30.08.2011 மற்றும் அரசாணை (ப) எண்.467, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ME 4) துறை, நாள் 18.11.2011ன்படி தனியர்கள் மீது நிலுவையிலிருந்த ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்பட்டதை தொடர்ந்து தனியர்களின் பெயர்களை 2011–2012 ஆண்டிற்கான கண்காணிப்புப் பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் திரு. கே. யதுகுலராவ், அவர்களின் பெயரை அவரது உடனடி இளையவரான திரு.ஜெ.வேணுகோபால் அவர்களின் பெயருக்கு முன் வரிசை எண்.3A என இடம் பெற செய்தும், திரு. ஏ. வின்செண்ட், அவர்களின் பெயரை அவரது உடனடி இளையவரான திரு. சி. சார்லஸ், பெயருக்கு முன் வரிசை எண்.2A என இடம் பெற செய்தும், கண்காணிப்பு பொறியாளராக பதவி உயர்வு வழங்கி அரசு ஆணை வழங்கியுள்ளது. இதனை தொடர்ந்து கண்காணிப்பு பொறியாளர் பதவியில் காலியாகவுள்ள பணியிடங்களில் 2 பொறியாளர்களுக்கு ரூ.37400–67000+தர ஊதியம் 8700 என்ற காலமுறை ஊதியத்தில் கண்காணிப்பு பொறியாளர்களாக கருத்தியலாக பதவி உயர்வு வழங்கி, கண்காணிப்பு பொறியாளர் பதவியில் பணி ஏற்ற நாள் முதல் பணப்பயன் வழங்கிட 29.03.2012 நாளிட்ட ஆணையரது செயல்முறை ஆணையின்படி பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது.

| வ.எண். | கண்காணிப்புப் பொறியாளரின் பெயர் திருவாளர்கள் |
|---|---|
| 01. | திரு. வி.சி. ராஜசேகரன் |
| 02 | திரு. ஆர். சீனிவாசன் |
| 03 | திரு. சி. சார்லஸ் |
| 04 | திரு. ஏ. வின்செண்ட் |
| 05 | திரு. கே. யதுகுலராவ் |

மேற்படி அரசின் அனுமதியினை தொடர்ந்து, 21.09.2011 மற்றும் 29.03.2012 ஆகிய தேதியிட்ட சென்னை மாநகராட்சி ஆணையரது செயல்முறை ஆணைகள் மூலம் மேற்சொன்ன 5 பொறியாளருக்கு, கண்காணிப்புப் பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. பதவி உயர்வு பெற்ற பொறியாளர்களின் விவரம் மற்றும் தனியர்கள் அப்பதவியில் பணியில் சேர்ந்த நாள் பின்வருமாறு அமைகிறது.

| வஎண். | பெயர் / திருவாளர்கள் | கண்காணிப்பு பொறியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் மற்றும் உறுதியாக்கம், பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|
| 1. | திரு. வி.சி. ராஜசேகரன் | 21.09.2011 மு.ப., |
| 2. | திரு. ஆர். சீனிவாசன் | 23.09.2011 பி.ப., |
| 3. | திரு. சி. சார்லஸ் | 23.09.2011 பி.ப., |
| 4. | திரு. ஏ. வின்சென்ட் | 02.04.2012 பி.ப., |
| 5. | திரு. கே. யதுகுலராவ் | 02.04.2012 மு.ப., |

சென்னை மாநகராட்சி பொறியியல் பணிவிதிகளின் படி சென்னை மாநகராட்சி கண்காணிப்புப் பொறியாளர் பதவி வகுப்பு – IBன் கீழ் வருவதால், பதவி உயர்வு வழங்கியமைக்கு அரசின் உறுதியாக்கம் பெறப்படல் வேண்டும்.

எனவே, மேற்படி வரிசை எண்.1 முதல் 5 வரையில் உள்ள கண்காணிப்புப் பொறியாளர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் உறுதியாக்கம் மற்றும் பணிவரன்முறைப் படுத்த அரசுக்கு செயற்குறிப்பு அனுப்ப மன்றத்தின் அனுமதி நியமனக்குழு மூலமாக ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**பொ.து.ந.க.எண்.ஈ1/11972/2010**
**ஆணையாளர் அவர்களின் 06.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.217/2012 பொருள் எண்.41

**செயற்பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல்**

2010–2011 ஆம் ஆண்டிற்கான செயற் பொறியாளர் பதவிக்கு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டபோது திரு. என். செபஞானம், உதவி செயற் பொறியாளர், மழைநீர் வடிகால் துறை அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருந்ததால் 2010–2011 ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் அன்னாரின் பெயரை சேர்க்காமல் ஒத்தி வைத்து மன்றத் தீர்மானம் எண். 441/2010, நாள் 29.10.2010ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திரு.என்.செபஞானம், உதவி செயற்பொறியாளர் அவர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் வழங்கப்பட்ட தண்டனையை அரசாணை எண்.94(டி), நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்: 30.03.2012ன்படி அரசு தள்ளுபடி செய்து ஆணையிட்டுள்ளது.

திரு. என். செபஞானம், உதவி செயற் பொறியாளர் அவர்களுக்கு வழங்கிய ‘‘மூன்று ஆண்டு ஊதிய உயர்வு திரண்ட பயனின்றி நிறுத்தம்’’ என்ற தண்டனையினை அரசு தள்ளுபடி செய்து ஆணையிடப்பட்டுள்ளதால், அரசானை எண்.368 பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை நாள் 18.10.1993ல் தெரிவித்துள்ளவாறு கருத்தியலான (Notional Promotion) பதவி உயர்வு இன்றைய தேதியில் தனியருக்கு வழங்கிடவும், இன்றைய தேதியில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் இல்லையென்பதாலும், 2010–2011ஆம் ஆண்டிற்கான செயற்பொறியாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலில் திரு.என்.செபஞானம், உதவி செயற்பொறியாளர் அவர்களின் உடனடி இளையவரான (Immediate Junior) வரிசை எண்.3ல் உள்ள திரு. எம். சம்பத், செயற் பொறியாளர் அவர்களுக்கு முன்னதாக வரிசை எண்.2Aல் திரு. என். செபஞானம், அவர்களுக்கு செயற் பொறியாளராக மன்றத்தின் பின்னேற்புக்குட்பட்டு பதவி உயர்வு வழங்கி தனியர் இப்பதவியில் பணியேற்ற நாள் முதல் பணப்பயன்கள் வழங்க ஆணையர் அவர்களின் 10.4.2012 நாளிட்ட செயல்முறை ஆணை வழங்கப்பட்டது.

எனவே, 2010–2011 ஆம் ஆண்டின் செயற் பொறியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு திருத்தியமைத்தமைக்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதி நியமனக்குழு மூலம் வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| 1. | திரு.எல். ரட்சகர், உ.செ.பொ.கட்டடத்துறை |
| 2. | திரு.சி.முரளி, உ.செ.பொ., திடக்கழிவு மேலாண்மைத்துறை |
| 2A. | திரு. என். செபஞானம், உ.செ.பொ., மழைநீர் வடிகால்துறை |
| 3. | திரு. எம். சம்பத் உ.செ.பொ., மழைநீர் வடிகால்துறை |
| 4. | திரு. கே. செல்லப்பா, உ.செ.பொ., பாலங்கள் துறை |
| 5. | திரு. ஆர். ராமச்சந்திரன், உ,செ.பொ., கட்டடத்துறை |
| 6. | திரு. எஸ். யோகநாதன், உ.செ.பொ., பாலங்கள் துறை |
| 7. | திரு. ஜெ. கண்ணன், உ.செ.பொ., கட்டடத்துறை |
| 8. | திரு. கே. ஶ்ரீதரன், உ.செ.பொ., பாலங்கள் துறை |
| 9. | திரு. பி. எஸ். ஶ்ரீதரன், உ.செ.பொ., மழைநீர் வடிகால் துறை |
| 10. | திரு. ஆர். சீனிவாசலு உ.செ.பொ., பேருந்து சாலைத்துறை |
| 11. | திரு. ஜெ. ஶ்ரீராமுலு, உ.செ.பொ., பேருந்து சாலைத்துறை |
| 12 | திரு. எஸ். இளஞ்செழியன், உ.செ.பொ., திடக்கழிவு மேலாண்மைத்துறை |

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் பின்னேற்பு அனுமதி அளிக்கின்றது’’

*******

**ச.கு.ந.க.எண்.சி1/2949/2012**

**ஆணையாளர் அவர்களின் 08.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.218/2012 பொருள் எண்.42

**பணியமைப்பு**

தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களின் **22.08.2011** நாளிட்ட ஆணையர் அவர்களுக்கு முகவரியிட்ட கடிதத்தில் சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே உள்ள **23** நிலை வழக்குரைஞர்களை மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கவும், கடிதத்தில் இணைத்து அனுப்பப்பட்ட **30** வழக்குரைஞர்களை சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களாக நியமனம் செய்யவும் பரிந்துரை செய்து அனுப்பப்பட்டதனை தொடர்ந்து, அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களின் பரிந்துரையின்படி ஏற்கனவே இருந்த **23** நிலைவழக்குரைஞர்களை இதுவரை பணி செய்தமையினை வரண்முறைப்படுத்தவும், மாநகராட்சி பணியிலிருந்து விடுவிப்பு செய்தும், புதிதாக **30** நிலை வழக்குரைஞர்களை சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களாக அவர்கள் பணி ஏற்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு ஆணையர் அவர்களின் **02.09.2011** நாளிட்ட ஆணை பெறப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

எனவே, கீழ்காணும் சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களை மாநகராட்சி பணியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களின் பட்டியல்,

| | | |
|---|---|---|
| 1 | திரு.ஈ.ஆர்.கே.மூர்த்தி | உயர்நீதிமன்றம் |
| 2 | திரு.எல்.என்.பிரகாசம் | உயர்நீதிமன்றம் |
| 3 | திரு.முகம்மது கௌஸ் | உயர்நீதிமன்றம் |
| 4 | திரு.ஜி.டி.சுப்பிரமணியம் | உயர்நீதிமன்றம் |
| 5 | திரு.டி.மதி | உயர்நீதிமன்றம் |
| 6 | திரு.வி.பாரதிதாசன் | உயர்நீதிமன்றம் |
| 7 | திருமதி. ஆர்.கே.கல்பனா | உயர்நீதிமன்றம் |
| 8 | திரு.பி.உதயகுமார் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 9 | திரு.ஜெ.எஸ்.மகாலிங்கம் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 10 | திரு.பி.வேணுகோபால் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 11 | திரு.வி.முரளி | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 12 | திரு.டி.சுரேஷ் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 13 | திரு.என்.சுப்பிரமணி | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 14 | திரு.பி.கணேசன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 15 | திரு.பி.குருநாதன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 16 | திரு.ஜி.ஜகநாதன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 17 | திரு.கே.சுரேந்திரன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 18 | திரு.எஸ்.எழிலன் | சிறு வழக்குகள் நீதிமன்றம் |
| 19 | திரு.வி.நன்மாறம் (எ) கோபிகிருஷ்ணன் | சிறு வழக்குகள் நீதிமன்றம் |
| 20 | திரு.கே.வேலாயுதம் | குற்றவியல் நீதிமன்றம் |
| 21 | திரு.ஜி.ஸ்ரீராம் | குற்றவியல் நீதிமன்றம் |
| 22 | திரு.ஆர்.ஜெயசங்கரன் | குற்றவியல் நீதிமன்றம் |
| 23 | திரு.டி.பாபு | குற்றவியல் நீதிமன்றம் |

**22.08.2011** நாளிட்ட கடிதத்தில் தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட கீழ்காணும் **30** வழக்குரைஞர்களை சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களாக அவர்களது பெயருக்கு நேராக குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்றங்களில் பணிபுரிய நியமனம் செய்யப்பட்டவர்களின் பட்டியல்.

| | | |
|---|---|---|
| 1. | திரு.எ.நாகராஜன் | உயர்நீதிமன்றம் |
| 2. | திரு.ஆர்.அருண்மொழி | உயர்நீதிமன்றம் |
| 3. | திரு. டி. ராஜ் | உயர்நீதிமன்றம் |
| 4. | திரு.பி.வி.செல்வகுமார் | உயர்நீதிமன்றம் |
| 5. | திரு. எஸ். கிருஷ்ணா | உயர்நீதிமன்றம் |
| 6. | திரு. பாரதிதாசன் | உயர்நீதிமன்றம் |
| 7. | திரு. எஸ். சரவணன் | உயர்நீதிமன்றம் |
| 8. | திரு. ஜி. அனந்தரங்கன் | உயர்நீதிமன்றம் |
| 9. | திரு. பி.பி. செந்தில்குமார் | உயர்நீதிமன்றம் |
| 10. | திரு. கார்த்தீகா அசோக் | உயர்நீதிமன்றம் |
| 11. | திரு. வி.சி. செல்வசேகரன் | உயர்நீதிமன்றம் |
| 12. | திரு. சி. ரவிசந்திரன் | உயர்நீதிமன்றம் |
| 13. | திரு. இ. பாலமுருகன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 14. | திரு. எம் .தமிழ்செல்வன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 15. | திரு. கே. சரவணன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 16. | திரு. பி. முத்துகுமார் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 17. | திரு. பி. மோகன்ராஜ் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 18. | திரு. கே. ரவிகுமார் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 19. | திரு. கே. ரமேஷ்கண்ணன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 20. | திரு. வி.எஸ் .ரமேஷ் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 21. | திரு. எஸ். முருகவேல் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 22. | திரு.வி.கோவிந்தன் | நகர உரிமையியல் நீதிமன்றம் |
| 23. | திரு.ஓ.செல்வம் | தொழிலாளர் நீதிமன்றம் |
| 24. | திரு.டி.வெங்கடாசலம் | நுகர்வோர் தீர்ப்பாயம், லோக் அதாலத் மற்றும் மனித உரிமைகள் வழக்குகள் |
| 25. | என்.அமுதலட்சுமி | சிறு வழக்குகள் நீதிமன்றம் |
| 26. | திருமதி. எஸ்.வி. உமா சங்கர் | சிறு வழக்குகள் நீதிமன்றம் |
| 27. | திரு. இ. ராமன்னா | குற்றவியல் நீதிமன்றம் |
| 28. | திரு. வி. மணிபல்லவன் | குற்றவியல் நீதிமன்றம் |
| 29. | திரு.மோகனரங்கன் | குற்றவியல் நீதிமன்றம் |
| 30. | திரு. ஜி. வாசுதேவன் | குற்றவியல் நீதிமன்றம் |

22.02.2012 நாளிட்ட கடிதத்தில் தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட திரு. இ. முருகேசன், வழக்குரைஞர் அவர்களை அம்பத்தூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலை வழக்குரைஞராக 28.03.2012 நாளிட்ட சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையில் அவர்கள் பணி ஏற்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய மன்றத்தின் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளது.

19.05.2012 நாளிட்ட கீழ்கண்ட வழக்குரைஞர்களின் கடிதத்தின்படி வரிசை எண் 1 முதல் 5 வரையுள்ள நபர்களை மாதாந்திர தொடர் கட்டணத்துடன் (Retaineer Fees) நிலை வழக்குரைஞர்களாக நியமிக்கவும், வரிசை எண் 6 முதல் 12 வரையுள்ள நபர்களை மாதாந்திர தொடர் கட்டணமின்றி தேவைப்படும் போது வழக்குகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் நியமிக்க கேட்டு கொண்டுள்ளார்.

1. திரு.எ.பி.பாலசுப்பிரமணி
2. திரு.கே.பிரபாகரன்
3. திரு.ராஜசேகர்
4. திரு.எஸ்.பாலு
5. திரு.ஜெ.பொன்னுதுரை

6. திரு.தினேஷ் குமார்
7. திரு.கே.சௌந்தரராஜன்
8. திரு.ஆர்.சூரியபிரகாஷ்
9. திரு.சி.சி.ரங்கராஜன்
10. திரு.வி.முரளிகிருஷ்ணன்
11. திரு.கே.புகழேந்தி
12. திரு.டி.சி.கோபாலகிருஷ்ணன்

06.06.2012 நாளிட்ட கடிதத்தில் தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் திரு.எம். கோவிந்தராஜ், வழக்குரைஞர் அவர்களின் பெயரை பரிந்துரைத்து சென்னை மாநகராட்சியில் நிலை வழக்குரைஞராக நியமனம் செய்ய கேட்டு கொண்டுள்ளார்.

எனவே, கீழ்கண்ட 1 முதல் 5 வரையிலான இனங்களுக்கு நியமனக்குழு மூலமாக மன்றத்தின் பின்னேற்பு அனுமதி வேண்டப்படுகிறது.

1) சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே இருந்த 23 நிலை வழக்குரைஞர்களை மாநகராட்சி பணியிலிலிந்து விடுவிக்கப்பட்டும், 02.09.2011 வரை பணிசெய்தமையினை வரன்முறைப்படுத்தியதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்

2) தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களின் 22.08.2011 நாளிட்ட கடிதத்தில் பரிந்துரைக்கப்பட்ட 30 வழக்குரைஞர்களை சென்னை மாநகராட்சி நிலை வழக்குரைஞர்களாக அவர்களது பெயருக்கு நேராக குறிப்பிடப்பட்டுள்ள நீதிமன்றங்களில் அவர்கள் பணி ஏற்ற நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்குட்பட்டு நியமனம் செய்ததற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்

3) தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களின் 22.02.2012 கடிதத்தில் பரிந்துரை செய்யப்பட்ட திரு.இ.முருகேசன், வழக்குரைஞர் அவர்களை அம்பத்துார் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலை வழக்குரைஞராக அவர்கள் பணி ஏற்ற நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்குட்பட்டு நியமனம் செய்யப்பட்டதற்கு மன்றத்தின் பின்னேற்பு அனுமதியும்

4) 19.05.2012 நாளிட்ட வழக்குரைஞர்களின் கடிதத்தின்படி வரிசை எண் 1 முதல் 5 வரையுள்ள நபர்களை மாதாந்திர தொடர் கட்டணத்துடன் (Retaineer Fees) நிலை வழக்குரைஞர்களாக நியமிக்கவும், வரிசை எண் 6 முதல் 12 வரையுள்ள நபர்களை மாதாந்திர தொடர் கட்டணமின்றி தேவைப்படும் போது வழக்குகளுக்கு பயன்படுத்திக் கொள்ளவும் மாநகராட்சியில் வழக்குரைஞர்களாக அவர்கள் பணி ஏற்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய நியமனக் குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதி பெறவும் மற்றும்,

5) தமிழக அரசு தலைமை வழக்குரைஞர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட திரு.எம்.கோவிந்தராஜ், வழக்குரைஞர் அவர்களை நிலை வழக்குரைஞராக அவர்கள் பணி ஏற்கும் நாளிலிருந்து ஓராண்டு காலத்திற்கு விதிமுறைகள் மற்றும் வரையரைகளுக்குட்பட்டு நியமனம் செய்ய நியமனக் குழுவின் மூலம் மன்றத்தின் அனுமதியும்

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**பொ.து.ந.க.எண்.ஈ3/21551/2009**
**ஆணையாளர் அவர்களின் 07.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.219/2012 பொருள் எண்.43

**பணிநீட்டிப்பு**

அரசாணை மற்றும் ஆணையர், சென்னை மாநகராட்சி அவர்களின் செயல்முறை ஆணையின்படி, திரு. எஸ். பொன்னுசாமி, துணை கண்காணிப்பு பொறியாளர், தேசிய நெடுஞ்சாலை அவர்கள் சென்னை மாநகராட்சி, தொழில் நுட்ப தணிக்கை குழுமத்தில் கோட்ட பொறியாளராக அயற்பணியில் 01.07.2009 முதல் பணிபுரிந்து வருகிறார்.

திரு. எஸ். பொன்னுசாமி, கோட்ட பொறியாளர் (தொழில் நுட்ப தணிக்கை குழுமம்), சென்னை மாநகராட்சி அவர்களின் அயற்பணிகாலம் 30.06.2012 ல் மூன்றாண்டுகள் முடிவடைகிறது.

சென்னை மாநகராட்சி, தொழில் நுட்ப தணிக்கை குழுமத்திற்கு திரு. எஸ். பொன்னுசாமி, கோட்ட பொறியாளர் (தொழில் நுட்ப தணிக்கை குழுமம்), சென்னை மாநகராட்சி அவர்களின் பணி அவசியமாக தேவைப்படுவதால் சிறப்பு நிகழ்வாக கருதி, திரு. எஸ். பொன்னுசாமி, சென்னை மாநகராட்சி அவர்களின் அயற்பணிக் காலத்தினை 01.07.2012 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து அரசின் ஆணை பெற தனியரின் தாய்த் துறையான நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறையினை கேட்டுக்கொள்ள நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மா.கு.ந.(மு).ம.கு.ந.எண்.எப்4/000520/2012**
**முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர் அவர்களின் 24.03.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.220/2012 பொருள் எண்.44

**24 மணிநேர அவசர சிகிச்சை மருத்துவமனைகளில்**
**சிறப்பு மருத்துவர்களை நியமிப்பதற்கு அனுமதி**

சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையின்கீழ் இயங்கும் பிரசவ வார்டுகளில் கடந்த 50 வருடங்களாக சுகப்பிரசவங்கள் மட்டும் மகப்பேறு உதவியாளர்கள் மூலம் நடைபெற்று வந்தன. கடினமான பிரசவங்கள் அருகிலுள்ள அரசு உயர் மருத்துவமனைகளுக்கு அனுப்பப்பட்டு பிரசவங்கள் பார்க்கப்பட்டது.

1993–க்குப்பின் மருத்துவ அலுவலர்களால் பிரசவங்கள் மற்றும் அறுவை சிகிச்சையை மேற்பார்வையிட்டு அதிகமான அளவில் மேற்கொண்டதுடன் இரவுகால பணியினையும் செய்து வந்தனர்.

2003–ல் இரண்டு பிரசவ வார்டுகள் சைதாப்பேட்டை மற்றும் பெருமாள்பேட்டை நலவாழ்வு மையங்கள் 24 மணிநேர பிரசவ கவனிப்பு மையங்களாக ஆணையர் அவர்களால் மாற்றப்பட்டு சேவை அளிக்கப்பட்டு வருகிறது. 2008–ல் மற்ற அனைத்து பிரசவ வார்டுகளையும் 24 மணிநேரமும் இயங்குமாறு மாற்றி அமைத்து சேவை புரிந்து வருகின்றனர்.

சென்னை மாநகராட்சியில் மருத்துவ அலுவலர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் அடிப்படையான கல்வித்தகுதி M.B.B.S. மட்டும் என்று தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் குறைந்த எண்ணிக்கையிலான மருத்துவ அலுவலர்கள் மேல்படிப்பிற்காக அனுப்பப்பட்டு, பிரசவம், மயக்கம் மற்றும் குழந்தைகள் நலப்பிரிவிற்காக மருத்துவ அலுவலர்களை நியமனம் செய்யப்படுகிறது. அவ்வாறு நியமனம் செய்யப்பட்டதில் தற்சமயம் 17 பிரசவங்கள் பார்க்கும் மகப்பேறு மருத்துவ அலுவலர்கள் மற்றும் 4 மயக்க மருந்து மருத்துவ அலுவலர்கள், 3 குழந்தை நல பிரிவு மருத்துவ அலுவலர்கள் மட்டுமே சிறப்பு மருத்துவ அலுவலர்களாக உள்ளனர்.

மாநகரம் விரிவாக்கம் செய்யப்பட்டதில் ஏற்கனவே 12 எண்ணிக்கை 24 மணிநேர மருத்துவமனைகளாக இயங்கிக் கொண்டுள்ளது. தற்பொழுது புதிய 8 மண்டலங்களில் ஒரு 24 மணிநேர மருத்துவமனை என்று 8 E.O.C. சேர்த்து மொத்தமாக 20 எண்ணிக்கை 24 மணிநேர மருத்துவமனைகளாக இயங்கும்.

தற்போது, ஒவ்வொரு 24 மணிநேர மருத்துவமனையிலும் 120 சுகப்பிரசவங்கள் மற்றும் 50–லிருந்து 75 வரை அறுவை சிகிச்சை பிரசவங்களும் 100–லிருந்து 150 குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சை ஒரு மாதத்தில் நடைபெறுகிறது. 2010–2011 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையின்கீழ் இயங்கும் 24மணிநேர மருத்துவமனைகளில் 12000 சுகப்பிரசவங்கள், 6000 அறுவை சிகிச்சை பிரசவங்கள் மற்றும் 14000 குடும்ப கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் நடைபெற்றன. shift முறையில் பின்பற்றப்பட்டு மேற்கூறிய குடும்ப நல சேவைகள் அளிக்கப்பட்டு வருகிறது. எனவே, இந்த சுழற்சி முறைமாற்றம் அடிப்படையில் பணி மேற்கொள்ள 20 அவசர கால மருத்துவமனைக்கு கீழ்கண்டவாறு மருத்துவ அலுவலர்கள் தேவைப்படுகிறார்கள்.

| வரிசை எண். | சிறப்பு மருத்துவ அலுவலர் | தேவைப்படும் மருத்துவ அலுவலர்கள் | தற்பொழுது உள்ளவர் |
|---|---|---|---|
| 1 | மகப்பேறு மருத்துவ அலுவலர் (DGO) | 20 x 4 = 80 | 17 |
| 2 | மயக்க மருந்து மருத்துவ அலுவலர்(D.A) | 20 x 2 = 40 | 4 |
| 2 | குழந்தை நல மருத்துவ அலுவலர்(D.C.H) | 20 x 2 = 40 | 3 |
| | மொத்தம் | 160 | |

மேற்கூறிய மருத்துவ அலுவலர்களுக்கு ஊதிய விகிதம் ரூ. 15,600 – 39,100, தர ஊதியம் ரூ.5,400/– ஆகும். 160 பேருக்கு மொத்தமாக ரூ.58,68,800/– ஒரு மாதத்திற்கு ஊதியம் வழங்கும் வகையில் செலவாகிறது. ஒரு வருடத்திற்கு ரூ.7,04,25,600/– (ஏழு கோடியே நான்கு இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து அறுநூறு மட்டும்) செலவாகிறது. சிறப்பு மருத்துவ அலுவலர்களை பணியமர்த்தும்பொழுது இவர்களுக்கு அதிகமான ஊதியம் ஏதும் வழங்கப்படமாட்டாது.

Basic Pay = 15,600
Grade Pay = 5,400
58 % DA = 12,100
HRA = 2,800
CCA = 600
M.A = 100
------------
36,680 (ரூ.36,680 X 160 = ரூ.58,68,800/–)
------------

ஒரு வருடத்திற்கு செலவாகும் தொகை ரூ.58,68,800/–x12= ரூ.7,04,25,600/–

ஒரு வருடத்திற்கு ரூ.7,04,25,600/– செலவாகிறது. மேற்கூறிய இந்த பணத்தை சென்னை மாநகராட்சி செலவினத்தில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

மேலும், சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்தறையில் ஏற்கனவே இயங்கி வந்த 93 நல வாழ்வு மையங்கள் மற்றும் 10 (EOC) அவசர கால மருத்துவமனைகளிலும் புதியதாக இணைக்கப்பட்ட மண்டலங்களிலும் கீழ்கண்டவாறு மருத்துவ அலுவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

<table>
<tr><td>சென்னை மாநகராட்சி மாவட்ட குடும்ப நலத்தறையில் உள்ள மருத்துவ அலுவலர்கள் அரசு மான்யம் பெறும் மருத்துவ அலுவலர்கள் ஆகும்.</td><td>புதியதாக இணைக்கப்பட்ட மண்டலங்களில் உள்ள மருத்துவ அலுவலர்கள் அரசு மான்யம் பெறும் அரசு அலுவலர்கள் ஆகும்.</td></tr>
<tr><td>IPPV - 64<br>GOI - 33<br>ORS - 20<br>CWC - 18<br>-----<br>135<br>-----</td><td>GOI ORS IPPV<br>திருவொற்றியூர் – – 3 2<br>அம்பத்தூர் – – – 7<br>மாதவரம் – – – 2<br>ஆலந்தூர் – – – 4<br>————————<br>– 3 15<br>————————</td></tr>
</table>

மேற்கூறிய மருத்துவ அலுவலர்களில் 24 சிறப்பு மருத்துவ அலுவலர்கள் மட்டுமே உள்ள நிலையில் சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதில் ஏற்கனவே இருந்த (12+8) 20 அவசர கால மருத்துவமனைகளாக மாற்றப்பட்டதால் சுழற்சி முறைமாற்றம் அடிப்படையில் சிறப்பு மருத்துவ அலுவலர்களை அமர்த்தி பணிபுரியும் பொழுது சிறப்பாக மருத்துவ சேவையை சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மூலம் சுமார் 75 இலட்சம் ஏழை மக்களுக்கு வழங்கலாம்.

எனவே, சென்னை மாநகராட்சி விரிவாக்கம் செய்யப்பட்டதில் 24 மணிநேர அவசரகால சிகிச்சை மருத்துவமனைகள் 20–ல் சுழற்சி முறையில் பணிபுரிய வேண்டியுள்ளதால், தேவையான சிறப்பு மருத்துவ அலுவலர்கள் கீழ்கண்டவாறு பணி அமர்த்த வேண்டியுள்ளது.

| வரிசை எண் | சிறப்பு மருத்துவ அலுவலர்கள் | தேவையான மருத்துவ அலுவலர்கள் |
|---|---|---|
| 1 | மகப்பேறு மருத்துவ அலுவலர் (DGO) | 80 |
| 2 | மயக்க மருந்து மருத்துவ அலுவலர் (D.A) | 40 |
| 3 | குழந்தை நல மருத்துவ அலுவலர்(D.C.H) | 40 |
| | | மொத்தம் = 160 பேர்கள் |

சென்னை மாநகராட்சியில் ஏற்கனவே 12 எண்ணிக்கை 24 மணிநேரமும் இயங்கும் மருத்துவமனைகளாக மாற்றி இயங்குவதாலும், விரிவாக்கத்திற்கு பிறகு மேலும் 8 E.O.C-யும் சேர்த்து 24 மணி நேர மருத்துவமனைகள் 20 எண்ணிக்கையாக இயங்கி வருவதால் தேவைப்படும் 80 சிறப்பு மகப்பேறு மருத்துவ அலுவலர்கள் (DGO), 40 சிறப்பு மயக்க மருந்து மருத்துவ அலுவலர்கள்(D.A) , 40 சிறப்பு குழந்தை நல மருத்துவ அலுவலர்கள்(D.C.H) ஆக மொத்தமாக 160 சிறப்பு மருத்துவ அலுவலர்களை சென்னை மாநகராட்சி, மாவட்ட குடும்ப நலத்துறையில் பணி அமர்த்துவதற்கு அரசின் ஆணை வேண்டி, அரசிற்கு செயற்குறிப்பு அனுப்ப நிலைக்குழுக்கள் (சுகாதாரம்), (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘30.05.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தின் தீர்மான எண். 08 /2012 நாள் 30.05.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி ) மற்றும் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி)ன் கூட்டத்தின் தீர்மான எண். 144 /2012 நாள் 12.06.2012–ன் படி இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி) பரிந்துரை செய்து நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.’’

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**<u>மி.து.ந.க.எண்.அ2/1591/2009</u>**
**<u>ஆணையர் அவர்களின் 28.04.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.221/2012 பொருள் எண்.45

**<u>பணியிடை காலமானதால் வீடுகட்ட பெற்ற முன்பணம் நேர் செய்திட அனுமதி</u>**

திரு. கே.பி. அருணகிரி, உதவி கோட்ட மின் பொறியாளர், மின்துறை, அவர்கள் 04.02.2008 பணியில் இருக்கும்போது காலமானார்.

ஆணையர் அவர்களின் 19.07.1999 நாளிட்ட ஆணையின்படி அன்னாார் உதவி கோட்ட மின் பொறியாளராக பணிபுரிந்த போது எண்.16. சேஷாச்சல முதலி தெரு, சைதாப்பேட்டை, சென்னை –15 வீடுகட்ட முன்பணம் –ரூ.4,00,000/– 03.08.1999 அன்று வழங்கப்பட்டது.

தனியருக்கு வழங்கப்பட்ட முன்பணத்தொகை ரூ.4,00,000/–க்கு மாதம் ரூ.4,000/– வீதம் 100 மாதங்களுக்கு பிடித்தம் செய்யப்பட்டு வந்த நிலையில் தனியர் காலமாகிவிட்டபடியால் வீடுகட்டும் முன் பணத்திற்கு நிலுவைத்தொகையை கணக்கீடு செய்து நேர் செய்யவும் 24.02.2012 நாளிட்ட நிதி ஆலோசகர் அவர்களின் கருத்துரை பெறப்பட்டது.

திரு. கே.பி. அருணகிரி, உதவி கோட்ட மின் பொறியாளர் 04.02.2008 அன்று பணியிலிருக்கும் காலமானவருக்கு வழங்கப்பட்ட வீடுகட்டும் முன்பணத்திற்கு சிறப்பு குடும்ப நலத்திட்டத்தின் கீழ் ஒரு சதவிகிதம் தொகை பிடித்தம் செய்யப்பட்டுள்ளதால், தனியர் செலுத்த வேண்டிய நிலுவைத்தொகை ரூ.1,98,097/–ஐ சுற்றறிக்கை எண்.A.C.C.No.A7/16348/1987ன்படி நேர் செய்ய அனுமதிக்க நியமனக்குழு மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பரிந்துரைத்து மன்றத்தின்
அனுமதி வேண்டி சமர்ப்பிக்கின்றது.''

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**தொ.நோ.ம.மனை. ந.க.எண்.அ1/ 322/2012**
**ஆணையர் அவர்களின் 12.05.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.222/2012 பொருள் எண்.46

**தொற்றுநோய் மருத்துவமனை– 2012–2013 ஆம் ஆண்டிற்கான மருத்துவ இணையியல் படிப்புகள் – அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவிகள் – சேர்க்கைக்கு அனுமதி**

தொற்றுநோய் மருத்துவமனையில் சுயநிதி உதவித் திட்டத்தின் கீழ் மருத்துவ இணையியல் படிப்புகளான மருத்துவ ஆய்வக பட்டயப்படிப்பும், செவிலியர் உதவியாளர் பயிற்சி படிப்பும் மன்றத் தீர்மான எண். 183 மற்றும் 184ன் படி 2004 - ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வருகிறது.

இப்பயிற்சிகள் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியருக்கும் மற்றும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கு மட்டும் நடத்தப்படும் பயிற்சிகளாகும். இங்கு செவிலியர் உதவியாளர் பயிற்சி முடித்த மாணவ, மாணவிகள்அனைவரும் தனியார் மருத்துவமனைகளில் நல்ல முறையில் பணி செய்து வருகின்றனர்.

2011 – 2012 – ஆம் ஆண்டுக்கான மருத்துவ இணையியல் படிப்புகளுக்கான அனுமதியில் கீழே குறிப்பிட்டுள்ள எண்ணிக்கையில் மாணவ மாணவிகள் சேர்ந்தனர்.

| வ.எண் | பயிற்சியின் பெயர் | மொத்த இடங்கள் | நிரப்பப்பட்ட இடங்கள் | நிரப்பப்படாத இடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | மருத்துவ ஆய்வகப் பட்டயப்படிப்பு | 30 | 30 | – |
| 2 | செவிலியர் உதவியாளர் | 50 | 19 | 31 |

2012 –ம் ஆண்டு மேல்நிலைக்கல்வி மற்றும் 10–ம் வகுப்பு தேர்வு முடிவுகள் இன்னும் சில மாதங்களில் வெளிவரும் நிலையில் உள்ளதால் மருத்துவ இணை இயல் படிப்புகளில் மாணவ மாணவியர் அனுமதிக்காக ஆணை வேண்டப்படுகிறது.

சென்ற ஆண்டுகளில் தமிழ்நாடு அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற மாணவ, மாணவிகள் (சுமார் 50 மாணவ, மாணவிகள் ) தங்களுக்கும் விண்ணப்பம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர். மன்றத்தீர்மான எண் 183 மற்றும் 184 ன்படி சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவ, மாணவியர் மற்றும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகள் மட்டும் இப்பயிற்சியில் சேர இயலும். ஆதலால் மன்றத் தீர்மானத்தின்படி சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியருக்கு 80%ம், சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளுக்கு 20% ம் என்ற அடிப்படையில் அனுமதி செய்யவும், அப்படி அந்த இடங்கள் நிரப்பப்படாத பட்சத்தில் அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற ஏழை மாணவ, மாணவிகளை கொண்டு நிரப்பினால் அரசு அங்கீகரித்த 30 மருத்துவ ஆய்வகப் பட்டயப்படிப்பு இடங்கள் மற்றும் 50 செவிலியர் உதவியாளர் படிப்பு இடங்களும் முழுமையாக பூர்த்தியாகும் என்ற கருத்து தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. மேலும் அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவிகளும் பயன்பெறுவர்.

சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர் மற்றும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளால் அந்த இடங்கள் நிரப்பப்படாத பட்சத்தில் அரசு மற்றும் அரசு சார்ந்த பள்ளிகளில் பயின்ற ஏழை மாணவ மாணவிகளை வைத்து நிரப்ப நிலைக்குழுகள் (பொது சுகாதாரம்) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

“30.05.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (பொதுசுகாதாரம்) கூட்டத்தில் சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவ, மாணவியர் மற்றும் சென்னை மாநகராட்சிப் பணியாளர்களின் வாரிசுகளால் அந்த இடங்கள் நிரப்பப்படாத பட்சத்தில், வேறு வழிகளிலும் நிரப்பப்படலாம் என்ற கருத்தின் அடிப்படையில் தீர்மான எண்.11/2012 நாள்.30.05.2012–ன்படி இதற்கு நிலைக்குழு (பொது சுகாதாரம்) பரிந்துரை செய்து நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது”.

“12.06.2012 அன்று நடைபெற்ற நிலைக்குழு (வ.வி.ம.நி.) கூட்டத்தில் தீர்மான எண்.147/2012 நாள் 12.06.2012–ன்படி, இதற்கு நிலைக்குழு (வ.வி.ம.நி.) பரிந்துரை செய்து மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.”

“சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பயின்ற மாணவ மாணவியர் மற்றும் சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களின் வாரிசுகளால் அந்த இடங்கள் நிரப்பப்படாத பட்சத்தில் அரசு மற்றும் அரசு சார்ந்த (விரிவாக்கம் செய்யப்பட்ட பகுதிகளையும் சேர்த்து) பள்ளிகளில் பயின்ற ஏழை மாணவ மாணவிகளை வைத்தும் நிரப்பலாம் என்று தீர்மானித்து இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது”

*******

**ம.அ.2.ந.க.எண்.இ1 /461 /2012**
**ஆணையர் அவர்களின் 13.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.223/2012 பொருள் எண்.47

**மண்டலம்—2 சிப்பம் – 2 சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம் சென்னை விரிவாக்கப் பகுதிகளில் உள்கட்டமைப்பு பணிகள் – ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது – குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ஷ்ரக்ஷன் அவர்களுக்கு ரூ.11,77,73,189.60க்கு பணியினை வழங்க அனுமதி.**

சென்னை நகரின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக "சென்னை பெருநகர வளர்ச்சித் திட்டம்" என்னும் முன்னோடித் திட்டத்தை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். இச்சிறப்புத் திட்டத்தின் மூலம் உள்கட்டமைப்பு வசதிகளான சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள், ஆகிய அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூ.500 கோடியை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் சென்னை நகரிலும் அதன் விரிவாக்கப்பகுதிகளிலும் ஒருங்கிணைந்த குடிநீர் மற்றும் கழிவு நீர்த் திட்டங்களும் செயல்படுத்தப்படும்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னை மாநகருக்கு நிகராக புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளிலும் மழைநீர் வடிகால்வாய்கள், தெருவிளக்குகள், நடைபாதைகள் மற்றும் தெருக்கலன்களைக் கொண்ட சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்துவதற்கு ரூ.333.27 கோடியில் செயல்படுத்த ஒருங்கிணைந்த செயல்திட்டம் உருவாக்கப்பட்டது.

அவற்றின் முதல் கட்டமாக 175.36 கி.மீ. நீளமுள்ள 8 விரிவாக்கப்பட்ட பகுதி மண்டலங்களிலும் மேற்கொள்ள எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அவற்றிற்கான நிர்வாக ஒப்புதலை அதற்கான ஒப்புதல் அளிக்கும் குழு தீர்மானித்து சில நிபந்தனைகளுடன் ரூ.308 கோடிக்கு அரசாணையின் படி ஒப்புதல் வழங்கியுள்ளது.

அதன்படி ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப் பணிகள் மணலி மண்டலத்தில், (மண்டலம்-2) 10.70 கி.மீ. நீளமுள்ள 11 சாலைகளில் ரூ.22.93 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ளன. பணிக்காலம் 6 மாதங்கள் என நிர்ணயித்து பணிகளை நல்ல தரத்துடன் முடிப்பதற்கு ஏதுவாக தோராயமாக ரூ.10.00 கோடிக்கு மேல் மதிப்பீடுகளை சிப்பங்களாக பிரித்து ஒப்பங்கள் கோர வேண்டும் என்ற நிபந்தனைகளுடன் ஒப்பம் கோர அறிவுறுத்தப்பட்டது. இரண்டு சிப்பங்களாக பிரிக்கப்பட்ட பணிகளுக்கு இரண்டு உறை முறையில் தகுதி வாய்ந்த ஒப்பங்கள் அறிவிப்பு மூலம் கோரப்பட்டது.

சிப்பம் 2 – 8 ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுப்பணிகள்

சென்னை பெருநகர வளர்ச்சி திட்டம் மூலம் மண்டலம்—2ல் உள்ள 8 சாலைகளை ஒருங்கிணைந்த முறையில் மேம்படுத்தும் பணி தோராய மதிப்பு ரூ.1024.20 இலட்சங்கள்

ஒப்பந்த அறிவிப்பு 04.05.2012 அன்று ஆங்கில நாளிதழ் – நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ், தமிழ் நாளிதழ் – தினமணி மற்றும் 04.05.2012 அன்று சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் ஆகியவற்றில் பிரசுரிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 11.05.2012 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. அதன் விவரம் கீழ்வருமாறு :—

**சிப்பம்—2**

1. திருவாளர்கள். எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் தொழில்நுட்ப ஆவணம் மதிப்பீடு செய்யப்பட்டதில் சிப்பம் 2ல் கலந்து கொண்ட திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரராக நிர்ணயிக்கப்பட்டார்கள். தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரரின் நிதி ஆவணம் 14.05..2012 அன்று திறக்கப்பட்டது.

**<u>சிப்பம் 2</u>**

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | அலுவலக மதிப்பீட்டுத் தொகை 2011–2012ஆம் ஆண்டு விலைவிவரப்படி ரூ. | ஒப்பத்தொகை ரூ. | ஒப்ப சதவீதம் உயர்வு (அ) குறைவு |
|---|---|---|---|---|
| 1 | திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 10,24,19,758.04 | 11,79,80,345.60 | (+)15.19 % |

சிப்பம்–2க்கான குறைந்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள், எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களிடம் விலைக்குறைப்பு கோரப்பட்டது. திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் 16.05.2012 நாளிட்ட கடிதத்தில் சாலை பணியில் வரிசை எண் 7ல் உள்ள WMM பணிக்கு ஒரு கன மீட்டருக்கு ரூ 1700/–லிருந்து ரூ.1639/– விலை குறைப்பு செய்து கடிதம் கொடுத்துள்ளார்.

இதன்படி திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.11,77,73,189.60 ஆகும். ஒப்பத்தொகை ரூ.11,77,73,189.60 ஆகும். இவ்வொப்பத் தொகையானது 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)14.99 % விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-) 4.62% விழுக்காடு குறைவாகும்.

இது சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் மண்டல அலுவலர்–2 அவர்களால் ஒப்ப குழுமத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களின் ஒப்பத்தொகை ரூ.11,77,73,189.60 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்த தொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது என்னவென்றால் சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சேவைத் துறையினரின் வடங்கள் கொண்டு செல்ல (Duct) அமைப்புகள் ஏற்கனவே வார்ப்பிக்கப்பட்ட Precast முறைப்படி கட்டப்படவுள்ளதாலும் புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.

3) 2011–2012ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் உட்புற சாலைகளுக்கான ஒப்பங்கள் கோரப்பட்டன. இதற்கான மதிப்பீடுகள் 2010–2011 ஆம் ஆண்டில் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டவையாகும். ஆனால் பணிகள் 2011–2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருந்ததாலும், 2011–2012 ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியல் 2010–2011ஆம் ஆண்டின் விலைவிவரப்பட்டியலைவிட 14 முதல் 15 விழுக்காடு வரை அதிகமாக இருந்ததாலும் ஒப்பந்தங்கள் 2010–2011 ஆண்டு விலைப்பட்டியலை விட (+) 12.00% அதிகமாக அளிக்கப்பட்டது. இது போன்றே இவ்வாண்டிலும் 2012–2013ஆம் ஆண்டின் விலைப்பட்டியல் 2011–2012 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலைவிட குறைந்தது 12 முதல் 15 விழுக்காடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4) இவ்வொப்பத்தொகையானது 2011–12ஆம் ஆண்டு விலை விவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)14.99 % விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-) 4.62 % விழுக்காடு குறைவாகும்.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த ஒப்பந்ததாரருக்கு பணியினை வழங்க ஒப்பகுழும கூட்டத்தின் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒப்ப குழுமம் கீழ்க்கண்ட விவரங்களை விரிவாக விவாதித்தது.

சென்னை மாநகரின் விரிவாக்கப்பட்ட பகுதிகளில் அதிகமான சாலைகள் சேவைத்துறையினரின் சாலை வெட்டுக்களால் சேதமடைந்துள்ளதால் மழைக்காலத்திற்கு முன்னர் பொது மக்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு விரைவில் புதுப்பிக்கப்பட வேண்டி உள்ளது. மேலும் சென்னை நகரின் மையப்பகுதிகளுக்கு நிகராக சாலைகளை மேம்படுத்தப்படவுள்ளதாலும் ஒருங்கிணைந்த சாலைகளாக அனைத்து கட்டமைப்பு பயன்பாட்டுகளுடன் கூடிய நவீன சாலைகளாக அமைப்பதன் மூலமும் விரிவாக்க பகுதிகள் புதிய பொலிவு பெறும்.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் அவரின் ஒப்பத்தொகை ரூ.11,77,73,189.60 ஆகும். குறைந்த பணிக்காலமான 6 மாதங்கள் மற்றும் சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள ஒப்பந்ததொகையானது ஏற்றுக்கொள்ள தக்க நிலையில் உள்ளது.

2) இத்திட்டத்தின் சிறப்பம்சமானது சென்னை மாநகரில் விரிவாக்க பகுதிகளில் முதல் முறையாக ஒருங்கிணைந்த சாலைகள் மேம்படுத்தப்படவுள்ளது. அதில் சாலைகள், அடித்தளத்திலிருந்து உறுதிப்படுத்தி மேம்படுத்தப்படவுள்ளதாலும், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சேவைத் துறையினரின் வடங்கள் கொண்டு செல்ல (Duct) அமைப்புகள் ஏற்கனவே வார்ப்பிக்கப்பட்ட Precast முறைப்படி கட்டப்படவுள்ளதாலும் புதிய தெரு விளக்குகள் அமைக்கப்படவுள்ளதாலும் அதற்கான மூலப்பொருள்களான சிமெண்ட், ஜல்லி, இரும்பு கம்பிகள், தார் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் பெருகி உள்ளதாலும் சந்தை விலை ஒப்ப விலையை விட மிகவும் அதிகமாக உள்ளது.

3) 2011–2012ம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் உட்புற சாலைகளுக்கான ஒப்பங்கள் கோரப்பட்டன. இதற்கான மதிப்பீடுகள் 2010–2011 ஆம் ஆண்டில் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டவையாகும். ஆனால் பணிகள் 2011–2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவிருந்ததாலும், 2011–2012 ஆம் ஆண்டின் விலை விவரப்பட்டியல் 2010–2011ஆம் ஆண்டின் விலைவிவரப்பட்டியலைவிட 14 முதல் 15 விழுக்காடு வரை அதிகமாக இருந்ததால் ஒப்பந்தங்கள் 2010–2011 ஆண்டு விலைப்பட்டியலை விட (+) 12.00% அதிகமாக அளிக்கப்பட்டது. இது போன்றே இவ்வாண்டிலும் 2012–2013ஆம் ஆண்டின் விலைப்பட்டியல் 2011–2012 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலைவிட குறைந்தது 12 முதல் 15 விழுக்காடு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

4) பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட அடிப்படை பொருட்கள் மற்றும் தொழிலாளர்களின் ஊதியம் ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீட்டு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீகத்தில் பணிகள் வழங்கலாம் என 29.10.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

5) அதன்படி இவ்வொப்பத்தொகையானது 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படியான அலுவலக மதிப்பீட்டு தொகையைவிட (+)14.99 % விழுக்காடு அதிகமாகும். சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-) 4.62 % விழுக்காடு குறைவாகும்.

மேலும் இவ்வொப்பந்தமானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர் பங்கேற்ற ஒப்பந்தப்புள்ளி என்பதாலும், விலை குறைப்பு பேச்சு வார்த்தைக்கு பின் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள விலைப்புள்ளியான ரூ.11,77,73,189.60 2011–12ஆம் ஆண்டு விலைவிவரப்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகையைவிட (+) 14.99% அதிகம் மற்றும் சந்தைவிலையைவிட (-) 4.62% குறைவாக உள்ளது, ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் உள்ளதாலும் ஒப்பக்குழுமம் இதனை கவனமாக ஆராய்ந்து பணியினை காலம் தாழ்த்தாமல் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியிருப்பதையும் கருத்தில் கொண்டு சிப்பம்–1க்கு குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்கள் அளித்துள்ள ஒப்பத்தொகையான ரூ.11,77,73,189.60க்கு பணியினை வழங்க ஒப்பக்குழுமம் பரிந்துரை செய்துள்ளது. எனவே, இப்பணிக்கான ஒப்பத்தினை திருவாளர்கள் எஸ்.எஸ்.எஸ்.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் அவர்களுக்கு மாநகராட்சியில் சாலைப்பணி ஒப்பந்ததாரராக பதிவு பெறுவதற்கு உட்பட்டு

**2011–12**ஆம் ஆண்டு விலை விவரப்பட்டியலின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட (+) **14.99%** அதிகமான ஒப்பத்தொகை ரூ.**11,77,73,189.60**க்கு பணியை வழங்க ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் **1998** பிரிவு **7(1)** மற்றும் **7(2)**ன்படி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் **11.06.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **15.06.2012** அன்று தீர்மான எண்.**139/2012**–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் **12.06.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **15.06.2012** அன்று தீர்மான எண்.**173/2012**–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 20553 / 2012</u>**
**<u>ஆணையாளர் அவர்களின் 06.06.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.224/2012 பொருள் எண்.48

**<u>துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்கள் பணியேற்ற விவரம்</u>**

அரசாணை (நிலை) எண். 1641, பொது (சிறப்பு–அ) துறை, நாள் 23.05.2012ன் படி, திருமதி. பூஜா குல்கர்ணி, இ.ஆ.ப., முன்னாள் இணை தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு துணை செயலாளர், பொது (தேர்தல்) துறை, அவர்கள் சென்னை மாநகராட்சியில் துணை ஆணையர் (சுகாதாரம்) ஆக 24.05.2012 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின்
தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது''

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''

*******

## **<u>பொ.து.ந.க.எண். ஈ3 / 20670 / 2012</u>**
## **<u>ஆணையாளர் அவர்களின் 06.06.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.225/2012 பொருள் எண்.49

**<u>மண்டல அலுவலர்–1 அவர்களின் பணியேற்ற விவரம்</u>**

அரசாணை (நிலை) எண். 1642, பொது (சிறப்பு – அ) துறை, நாள்: 23.05.2012ன் படி, திரு. எஸ். பழனி, துணை ஆட்சியர் / உதவி ஆணையர் (நிவாரணம் மற்றும் மறுவாழ்வு), வருவாய் நிர்வாகம், சென்னை அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலராக பதவி உயர்வு பெற்று சென்னை மாநகராட்சி, மண்டலம் – 1 (திருவொற்றியூர்) ல் மண்டல அலுவலராக 25.05.2012 முற்பகல் முதல் பணியேற்ற விவரம் நியமனக்குழு மூலமாக மன்றத்தின் தகவலுக்கும் மற்றும் பதிவுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

" இதனை நியமனக்குழு பதிவு செய்து மன்றத்தின் தகவலுக்காகவும், பதிவிற்காகவும் சமர்ப்பிக்கின்றது''

''இதனை மன்றம் பதிவு செய்கின்றது''

*******

**<u>பே.சா.து.ந.க.எண்.பி1/1973/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 14.06.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.226/2012 பொருள் எண்.50

**<u>சென்னை மாநகராட்சி – பேருந்து சாலைகள் துறை – தனியார் நிறுவனங்கள் கண்ணாடி இழை வடங்கள் பதித்தல் – தடவாடகை உயர்த்துவதற்கு கருத்துரு வேண்டி அரசிற்கு கடிதம் அனுப்ப மன்றத்தின் அனுமதி</u>**

சென்னை மாநகரில் பல்வேறு சாலைகளில் கண்ணாடி இழைவடங்கள் பதிக்கும் பணிக்காக தனியார் நிறுவனங்களுக்கு சென்னை மாநகராட்சி மூலமாக அனுமதி வழங்க 04.05.2000 நாளிட்ட அரசாணை எண்.10, தகவல் தொழில்நுட்பத் துறை மற்றும் கொள்கை வழிகாட்டுதல் வெளியிடப்பட்டு, இவ்வழிகாட்டுதலின்படி அனுமதி வழங்கப்பட்டுவருகிறது.

அரசாணை எண்.172, நாள்:28.03.2000 வருவாய்த்துறையில் குறிப்பிட்டுள்ள அரசாணையின்படி தனியார் நிறுவனங்களிடமிருந்து தட வாடகையாக ஆண்டிற்கு ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.9400/– என்று வசூலிக்கப்படுகிறது. இந்த தடவாடகை மூன்று வருடங்களுக்கு ஒரு முறை உயர்த்தலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகரில் கண்ணாடி இழைவடங்கள் அமைக்கும் தனியார் நிறுவனங்களிடமிருந்து 2000ம் ஆண்டு முதல் தடவாடகையாக ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.9400/– மட்டுமே வசூல் செய்யப்பட்டுவருகிறது. கடந்த 12 வருடங்களாக இந்த தடவாடகை மாற்றியமைக்கப்படாமலேயே உள்ளது.

இத்தடவாடகையினை தமிழ்நாடு அரசின் வருவாய்துறை தான் மாற்றி அமைக்க வேண்டும். கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு இத்தடவாடகை நான்கு முறை உயர்த்தப்பட்டிருக்க வேண்டும்.

எனவே, இந்தடவாடகையினை ஒவ்வொரு வருடத்திற்கு ஒரு முறை 10% உயர்த்தலாம் எனவும், இதன்படி 10% ஒவ்வொரு வருடமும் உயர்த்தப்பட்டால் நடப்பு ஆண்டிற்கு (2012–13) தடவாடகை ஒரு கிலோ மீட்டருக்கு ரூ.29,500/– என நிர்ணயம் செய்யப்படவேண்டும்.

தனியார் நிறுவனங்களுக்கு கண்ணாடி இழை வடங்கள் பதிப்போருக்கான தட வாடகையை வருடத்திற்கு ஒரு முறை 10% சதவீதம் உயர்த்தவும், இந்த மாற்றியமைக்கப்பட்ட தடவாடகையின்படி கணக்கிட்டு 12 வருடங்களுக்கு நிலுவைத் தொகையை அந்தந்த தனியார் நிறுவனங்களிடமிருந்து வசூல் செய்ய வேண்டியும் கருத்துரு ஒன்றை அரசாங்கத்திற்கு அனுப்புவதற்கு நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் ஒப்புதல் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 11.06.2012 அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 15.06.2012 அன்று தீர்மான எண்.140/2012–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

> ‘‘ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் 12.06.2012 அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 15.06.2012 அன்று தீர்மான எண்.175/2012–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**ம.அ.5.ந.க.எண்.இ1/6717/2012**
**ஆணையர் அவர்களின் 15.06.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.227/2012 **பொருள் எண்.51**

**மண்டலம்–5. பகுதி–12 - ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் JNNURM (BSUP) கீழ் நகர்புற ஏழைகளுக்கு அடிப்படை வசதிகள் (BSUP) திட்டத்தில் 9 பயனாளிகளை ரத்து செய்து புதிய 11 பயனாளிகளை தேர்வு செய்யப்பட்டதற்கு அனுமதி**

மண்டலம்–5, பகுதி–112, வார்டு–50, 52 மற்றும் 53ஐ சார்ந்த நகர்புற குடிசைப்பகுதி பயனாளிகள் பங்களிப்புடன் கூடிய புதிய குடியிருப்பு வீடுகள் கட்டி தர **JNNURM (BSUP)** திட்டத்தின் கீழ் தீர்மானம் பெறப்பட்டதில் கீழ்காணும் 09 பயனாளிகள் இத்திட்டத்தின் கீழ் புதிய வீடு கட்டிக்கொள்ள முன் வராததால் அவர்களை ரத்து செய்துவிட்டு அவர்களுக்கு பதிலாக தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய 11 பயனாளிகளுக்கு மேற்படி திட்டத்தின் கீழ் பங்களிப்புடன் கூடிய புதிய வீடுகள் கட்டித்தர ஒப்புதல் வேண்டப்படுகிறது.

அதன் பொருட்டு கீழ்காணும் பயனாளிகளுக்கு வீடு கட்டும் பணிக்கு 09 பயனாளிகளை ரத்து செய்து அதற்கு பதிலாக 11 புதிய பயனாளிகளை தேர்வு செய்ய வார்டுகுழு கூட்டத்தின் தீர்மான எண்.47 நாள்:22/05/2012 அன்று நடைப்பெற்ற 5வது மண்டல வார்டுகுழு கூட்டத்தின் பரிந்துரை பெறப்பட்டுள்ளது.

**ரத்து செய்ய வேண்டிய பயனாளிகள்**

| வ. எண். | பழைய வார்டு எண் | புதிய வார்டு எண் | தீர்மான எண்/நாள் | பயனாளியின் பெயர் | குடிசை பகுதி | பயனாளிகளின் விலாசம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 31 | 53 | 214/2011 29.07.2011 | கே. முருகேசன் | சி.பி.சாலை | 123/42, நார்த்வால் சாலை, சென்னை-79 |
| 2 | 17 | 50 | 214/2011 29.07.2011 | மணிமொழி | ஜி.எம். பேட்டை | 12/54, ஜி.எம். பேட்டை, தம்பு சந்து, சென்னை-13 |
| 3 | 22 | 52 | 214/2011 29.07.2011 | சென்னம்மாள் | ஆஞ்சநேயர் நகர், | 8, ஆஞ்சநேயர் நகர், 10வது சந்து,சென்னை-13 |
| 4 | 22 | 52 | 214/2011 29.07.2011 | மாஸ்தானம்மா | ஆஞ்சநேயர் நகர், | 25/A,பழையஆடு தொட்டி சாலை, சென்னை-13 |
| 5 | 22 | 52 | 214/2011 29.07.2011 | நித்தியாணந்தம் | மீனாட்சிஅம்மன் பேட்டை | 39/1, ராமா 6வது சந்து, சென்னை-13 |
| 6 | 22 | 52 | 214/2011 29.07.2011 | எஸ். ரமேஷ்பாபு | மீனாட்சிஅம்மன் பேட்டை | 39/3, ராமா 6வது சந்து, சென்னை-13 |
| 7 | 31 | 53 | 385/09 29.10.09 | ஏ. செல்வி | பி.பி.அம்மன் கோயில் | 15/26, பி.பி.அம்மன் கோயில் 2வது சந்து |
| 8 | 31 | 53 | 276/2010 22.06.10 | ஜெயலஷ்மி | பி.பி.அம்மன் கோயில் | பி.பி. அம்மன் கோயில் 2வது சந்து, சென்னை-21 |
| 9 | 31 | 53 | 533/2010 30.12.2010 | ஏ.ஜே.சந்திரசேகரன | பி.பி.அம்மன் கோயில் | 18, பி.பி. அம்மன் கோயில் 2வது குறுக்கு சந்து, சென்னை-21 |

**தேர்வு செய்யப்பட்ட பயனாளிகளின் விவரம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 31 | 53 | சி. பாளையம் | சி.பி.சாலை | 7/4, நாகப்பன் நகர் 2வது தெரு சென்னை-21 |
| 2 | 31 | 53 | பி. ராஜ்குமார் | பி.பி.அம்மன் கோயில் | 4 பி.பி. அம்மன் கோயில் 7வது தெரு சென்னை-21 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | 31 | 53 | ஆர். ராமலிங்கம் | பி.பி.அம்மன் கோயில் | 14, பி.பி. அம்மன் கோயில் 2வது தெரு சென்னை–21 |
| 4 | 31 | 53 | ப்பி. வெங்கைய்யா | ஆதிஆந்திரா காலனி | 39, நியூ பென்சினர்ஸ் 2வது சந்து, சென்னை–21 |
| 5 | 17 | 50 | எ. கௌசல்யா | இதர குடிசை பகுதி | 7/1, ஏ.ஜே. காலனி 4வது சந்து, சென்னை. |
| 6 | 31 | 53 | கே. லஷ்மி | பி.பி. அம்மன் கோயில் | பி.பி. அம்மன் கோயில் தெரு, சென்னை–21 |
| 7 | 31 | 53 | முனுசாமி | போஜராஜன் நகர் | 47, போஜராஜன் நகர், 2வது தெரு. சென்னை- |
| 8 | 31 | 53 | ஏழுமலை | போஜராஜன் நகர் | 45, போஜராஜன் நகர், 2வது தெரு. சென்னை- |
| 9 | 22 | 52 | பி. கமலா | ஆஞ்ச நேய நகர் | 19/1, ஆஞ்சநேயர் நகர் 10வது தெரு. சென்னை- |
| 10 | 22 | 52 | எம். வெங்கைய்யா | ஆஞ்ச நேயர் நகர் | ஆஞ்சநேயர் நகர் 10வது தெரு. சென்னை- |
| 11 | 31 | 53 | ட்டி. கமலம்மாள் | சி.பி.சாலை, கெனால் தெரு | கெனால் தெரு |

எனவே, ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தின் **JNNURM (BSUP)** கீழ் மேற்காணும் 11 புதிய பயனாளிகளுக்கு வீடு கட்டித்தர அனுமதி வேண்டி நிலைக்குழு (பணிகள்) மற்றும் நிலைக்குழு (வரிவிதிப்பு (ம) நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (பணிகள்) கூட்டம் 11.06.2012 அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 15.06.2012 அன்று தீர்மான எண்.141/2012–ன்படி நிலைக்குழு (பணிகள்) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி)வின் மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் 12.06.2012 அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு 15.06.2012 அன்று தீர்மான எண்.176/2012–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது’’.

‘‘இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது’’

*******

**க.துநே.க.எண்.பி3/5602/2012**
**ஆணையர் அவர்களின் 08.05.2012 நாளிட்ட குறிப்பு**

தீர்மான எண்.228/2012 **பொருள் எண்:52**

**வணக்கத்திற்குரிய மேயர் அறிவிப்புகள் 2012–13 – அறிவிப்பு எண்–4 – சென்னை பள்ளிகள் – மாணவர்களுக்கு ஆங்கிலத்தில் பேசவும் உரையாடவும் பயிற்சிகள் அளிக்க ஆங்கில போதிக்கும் ஐம்பது ஆசிரியர்களுக்கு சிறப்பு வகுப்புகள் Glint நிறுவனம் மூலம் நடத்த அனுமதி**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 2012–13 ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கை எண்.4 ல் மாணவர்கள் ஆங்கிலத்தில் சரளமாகப் பேசும் திறமையை பெற்றால் அவர்கள் தன்னம்பிக்கை வளர்வதுடன் வேலைவாய்ப்பினை பெற ஏதுவாகும் என்பதால் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் 6,7,8 வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் ஆங்கிலத்தில் உரையாடவும் ஆங்கிலத்தில் பேசிப்பழகும் பயிற்சி வகுப்புகள் தொடங்கப்படும். என்றும் 9,10,11 மற்றும் 12ம் மாணவர்களுக்கு தேர்வுகள் தொடங்குவதற்கு முன்னதாக ஆங்கில சிறப்பு வகுப்புகள் நடத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் இவ்வறிக்கையினை செயல்படுத்துவதன் முதல் கட்டமாக மாணவர்களுக்கு ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்த திட்டமிடப்பட்டு அதன் மூலம் மாணவர்களின் ஆங்கில அறிவினை மேம்படுத்தலாம் என்பதால் மேற்காண் ஆங்கில போதிக்கும் ஐம்பது ஆசிரியர்களுக்கு சிறப்பு வகுப்புகள் Glint நிறுவனம் மூலம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் தனது பயிற்சியை ஏழு பிரிவுகளாக நடத்தவும் ஒரு பிரிவிற்கான நேரம் மூன்று மணியளவில் மொத்தமாக 21 மணி நேரம் நடத்துவதாக தெரிவித்துள்ளது. இப்பயிற்சிக்கான தொகை ஒரு ஆசிரியருக்கு ரூ.800/– வீதம் வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

எனவே, இப்பயிற்சிக்காக கீழ்கண்ட இனங்களின் மீது நிலைக்குழுக்கள் (கல்வி) மற்றும் (வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

1. மாணவர்களின் ஆங்கிலம் பேசும் திறனை மேம்படுத்த 6,7,8 வகுப்புகளுக்கு ஆங்கிலம் போதிக்கும் 50 ஆசிரியர்களை தேர்வு செய்து Glint நிறுவனம் மூலம் பயிற்சி வழங்கவும்,

2. இப்பயிற்சிக்கான தொகை ஒரு ஆசிரியருக்கு ரூ.800/– வீதம் 50 ஆசிரியர்களுக்கு ரூ.40,000/– Glint நிறுவனத்திற்கு காசோலையாக வழங்கவும் ,

3. இதர சில்லரைச் செலவீனங்களாக ரூ.10,000/– செலவு மேற்கொள்ளவும்,

4. பயிற்சிக்கான மொத்தத் தொகை ரூ.**50,000/–** ஐ 230 - இயக்குதல் மற்றும் பராமரிப்பு செலவினங்கள், துறை குறியீடு Z பிரிவு 80-82-06, கணக்கு குறியீடு 230-11-02-02 கல்வி செலவுகள் – மற்றவை என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்.

''ஏற்கனவே நிலைக்குழு (கல்வி) கூட்டம் **06.06.2012** அன்று முடிவடைந்த நிலையில் இப்பொருளின் அவசரம் மற்றும் அவசியத்தன்மையை கருத்தில் கொண்டு **15.06.2012** அன்று தீர்மான எண்.**39/2012**–ன்படி நிலைக்குழு (கல்வி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று நிலைக்குழு(வரிவிதிப்பு மற்றும் நிதி) மூலமாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''ஏற்கனவே நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) கூட்டம் **12.06.2012** அன்று முடிவடைந்த நிலையில், இப்பொருளின் அவசியம் மற்றும் அவசரத்தினை கருத்தில் கொண்டு **15.06.2012** அன்று தீர்மான எண்.**176/2012**–ன்படி நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) வின் சுற்றின் மூலம் பெரும்பான்மை உறுப்பினர்களின் பரிந்துரையை பெற்று மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது''.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**<u>ம.அ.11.ந.க.எண்.இ1/2672/2012</u>**
**<u>ஆணையர் அவர்களின் 18.06.2012 நாளிட்ட குறிப்பு</u>**

தீர்மான எண்.229/2012 **பொருள் எண்:53**

**<u>நிலம் எடுப்பு</u>**

வணக்கத்திற்குரிய மேயர் அவர்களின் 15.05.2012 நாளிட்ட குறிப்பில் சென்னை மாநகராட்சி மண்டலம் –11, வார்டு –143க்குட்பட்ட நொளம்பூர் கிராமத்தில் ஸ்ரீ ராம் நகர் பிரதான தார் சாலையில் ஒரு சில இடங்களுக்கு தனிநபர் பட்டா வைத்துள்ளதாகவும், அவ்விடங்களின் பட்டாதாரர்கள் சாலையினை சென்னை மாநகராட்சி சீரமைக்கக் கூடாது என மறுப்பு தெரிவிப்பதாகவும், இதனால் பொது மக்கள் மிகுந்த இன்னலுக்குள்ளாகின்றனர் என பெருவாரியான கோரிக்கைகள் மேயர் அவர்களுக்கு வரப்பெற்றதைத் தொடர்ந்து மேற்படி சாலை மாநகராட்சி மூலம் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது. சென்னை கோயம்பேடு வணிக வளாகத்திலிருந்து நொளம்பூர் வழியாக டி.ஏ.பி.சி அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு செல்லும் ஸ்ரீ ராம் நகர் பிரதான சாலையில் தார் சாலை அமைக்க முடியாமல் மண் சாலையாக உள்ள தனியாருக்கு சொந்தமான புலங்களில் கட்டாய நில எடுப்பு செய்ய நடவடிக்கை எடுக்க கோரப்பட்டுள்ளது.

எனவே மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமைத்துறை) அவர்கள் வருவாய் கணக்குகளில் தனிநபர்களின் பெயர்களில் பட்டாவாக தாக்கலாகி வரும் மேற்கண்ட புல எண்களை ஒரு பொது நோக்கத்திற்காக (சாலை அமைக்க) நில எடுப்பு சட்டத்தின் அவசர பிரிவின் கீழ் நிலங்களை கையகப்படுத்த நிர்வாக ஒப்புதல் பெற்றுத் தர திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு நில எடுப்பு அறிக்கை அனுப்பி வைக்க கேட்டு கொள்ளப்பட்டது. மேலும் இது குறித்து கையகப்படுத்தப்பட வேண்டிய நிலங்கள் குறித்த ஒரு சில மேல் விவரங்கள் கோரி அம்பத்தூர் வட்டாட்சியர்க்கு தந்த 28.05.2012ல் கடிதமும் எழுதப்பட்டுள்ளதாக வருவாய் அலுவலர் (நிலம் (ம) உடைமைத் துறை) அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் கையகப்படுத்த வேண்டிய நில எடுப்பு தொடர்பாக மண்டலம் –11 யின் வார்டுக்குழு தீர்மானம் எண்.1 நாள் 25.05.2012ல் நிறைவேற்றப்பட்டு வரைப்படத்துடன் நிலம் மற்றும் உடைமைத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் ஆணைப்படி மாவட்ட வருவாய் அலுவலர் நிலம் மற்றும் உடைமைத் துறையின் மூலம் நொளம்பூர் கிராமம், நில அளவை எண்.71/1, 71/2, 208/1பி, 214/4, 214/3, 214/2ஏ, 214/1ஏ ஆகிய புல எண்களில் சாலைக்காக கையகப்படுத்த வேண்டிய மேற்கண்ட தனியார் நிலத்தினை திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மூலம் அவசர நில எடுப்பு பிரிவின் மூலம் கையகப்படுத்த உரிய மன்ற தீர்மானம் பெற ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு ஆணையருக்கு சமர்பிக்கப்பட்டது.

கூடுதல் ஆணையர் (வ.ம.நி) அவர்கள் விரிவு படுத்த கோரப்படும் சாலை விரிவாக்கத் திட்டம்–IIன் கீழ் பேருந்து சாலை என வகை செய்யப்பட்டுள்ளதா என்றும், மேலும் பேருந்து சாலையாக இருந்தால் மேற்பார்வை பொறியாளர் பேருந்து சாலைகள் மூலமாகவும், உட்புற சாலைகளாக இருந்தால் மண்டல செயற் பொறியாளர் மூலமாகவும், விரிவான அறிக்கை பெற்று குழுவிற்கு சமர்பிக்க அறிவுரை வழங்கியுள்ளார்.

வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமைத்துறை) அவர்கள் நொளம்பூர் கிராமம், நில அளவை எண். 71/1, 71/2, 208/1பி, 214/4, 214/3, 214/2ஏ, 214/1ஏ ஆகிய புல எண்களில் சாலைக்காக கையகப்படுத்த வேண்டிய நிலங்கள் குறித்த விரிவான அறிக்கையுடன் உரிய நிர்வாக ஒப்புதல் திட்ட மதிப்பீடு, தேவையான நிதி ஒதுக்கீடு ஆணையரிடம் பெற்று உரிய வழிமுறையாக ஒப்புதல் பெற நிலம் மற்றும் உடைமைத்துறைக்கு அனுப்ப கோரப்பட்டது.

எனவே நொளம்பூர் கிராமம் நில அளவை எண். 71/1, 208/1பி, 214/4, 214/3, 214/2ஏ, 214/1ஏ ஆகிய புல எண்களில் சாலைக்காக கட்டாய நில ஆர்ஜிதத்தின் கீழ் கையகப்படுத்தப்பட வேண்டிய நிலங்களின் அளவு சுமார் 21645 சதுரடி என கருதப்பட்டு கீழ்கண்ட புல எண்கள் மற்றும் அவற்றின் கீழ் கையகப்படுத்த வேண்டிய நிலங்களின் அளவுகள் மற்றும் மொத்த செலவினம் 7,79,22,000/–ற்கு ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்பிக்கப்பட்டது.

| வ. எண் | பரப்பளவு | நில உரிமை | நில எல்லைகள் | | |
|---|---|---|---|---|---|
| 1 | 904 சதுரடி (புல.எண்.208/1B) | புஷ்பா பிரிக் ஓர்க்ஸ் | புல.எண்.207 | – | கிழக்கு |
| | | | புல.எண்.261/1B புல.எண்.211/2A2A3 | – | மேற்கு |
| | | | புல.எண்.208 | – | வடக்கு |
| | | | | – | தெற்கு |
| 2 | 8270 சதுரடி (புல.எண்.71/2) | புஷ்பா பிரிக் ஓர்க்ஸ் | புல.எண்.71/1 | – | கிழக்கு |
| | | | புல.எண்.220 | – | மேற்கு |
| | | | புல.எண்.65 | – | வடக்கு |
| | | | புல.எண்.73 | – | தெற்கு |
| 3 | 12471 சதுரடி (புல.எண்.214) | அப்பர் திருவேதி மற்றும் சிலர் | புல.எண்.214/1B1C1D மற்றும் 38 & 2C | – | கிழக்கு |
| | | | புல.எண்.215. | – | மேற்கு |
| | | | புல.எண்.222 | – | வடக்கு |
| | | | புல.எண்.210 | – | தெற்கு |

ஆணையரின் ஆணை வேண்டி சமர்பிக்கப்பட்ட கோப்பில் கூடுதல் ஆணையர்(வ.ம.நி) அவர்கள் மேற்குறிப்பிட்ட சாலை உட்புற சாலை எனவும், கிரிட் சாலை இல்லை எனவும், நில கையகப்படுத்த வேண்டிய நிலத்தின் மதிப்பு ரூபாய் சுமார் எட்டு கோடியாக உள்ளதால் இணை ஆணையர் (பணிகள்) அவர்கள் இது குறித்து நிலம் கையகபடுத்த வேண்டியதின் அவசியத்தை ஆராய்ந்து ஆணையருக்கு பரிந்துரைக்க கோரியிருந்தார். மேலும் இணை ஆணையர் (பணிகள்) அவர்கள் இது குறித்து கருத்து தெரிவிக்கையில் மேற்பார்வை பொறியாளர் (பேருந்து சாலைகள் துறை) அவர்களை ஸ்தல ஆய்வு மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளார்.

மேற்பார்வை பொறியாளர் அவர்கள் மேற்குறிப்பிட்ட கையகபடுத்த வேண்டிய சாலையினை ஆய்வு மேற்கொண்டதில் கீழ்காணும் புல எண்களில் உள்ள நிலங்களை கையகப்படுத்த கோப்பு அறிவுருத்தப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் நொளம்பூர் கிராமம் நில அளவை எண். 71/1, 71/2, 208/1பி, 214/4, 214/3, 214/2ஏ, 214/1ஏ ஆகிய புல எண்களில் சாலைக்காக கட்டாய நில ஆர்ஜிதத்தின் கீழ் (Compulsory Land Acquisition) கையகப்படுத்தப்பட வேண்டிய கீழ்கண்டுள்ள நிலங்களுக்கான புல எண்கள் மற்றும் நில அளவை விவரங்கள் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பரப்பளவு | நில உரிமை | நில எல்லைகள் | | |
|---|---|---|---|---|---|
| 1 | 904 சதுரடி (புல.எண்.208/1B) | புஷ்பா பிரிக் ஓர்க்ஸ் | புல.எண்.207 | – | கிழக்கு |
| | | | புல.எண்.261/1B புல.எண்.211/2A2A3 | – | மேற்கு |
| | | | புல.எண்.208 | – | வடக்கு |
| | | | | – | தெற்கு |
| 2 | 733 சதுரடி (புல.எண்.71/2) | புஷ்பா பிரிக் ஓர்க்ஸ் | புல.எண்.71 | – | கிழக்கு |
| | | | புல.எண்.219. | – | மேற்கு |
| | | | புல.எண்.220 | – | வடக்கு |
| | | | புல.எண்.73 | – | தெற்கு |
| 3 | 12471 சதுரடி (புல.எண்.214) | அப்பர் திருவேதி மற்றும் சிலர் | புல.எண்.214/1B1C1D மற்றும் 38 & 2C | – | கிழக்கு |
| | | | புல.எண்.215. | – | மேற்கு |
| | | | புல.எண்.222 | – | வடக்கு |
| | | | புல.எண்.210 | – | தெற்கு |
| 4 | 790 சதுரடி (புல.எண்.71/1) | வீட்டு வசதி வாரிய மனை | 30′0 சாலை | – | கிழக்கு |
| | | | புல.எண்.71/2 | – | மேற்கு |
| | | | வீட்டு வசதி வாரிய மனை | – | வடக்கு |
| | | | 15′0 சாலை | – | தெற்கு |

மேற்கண்டுள்ள புல எண்களில் புல எண் **214**–ல் உள்ள சுமார் **12471** சதுரடி நிலமானது அங்கீகரிக்கப்படாத வீட்டு மனை பிரிவுகளாக பிரிக்கப்பட்ட போது ஏற்கனவே சாலையாக கருதப்பட்டு தற்பொழுதும் சாலையாக உபயோகத்தில் உள்ள நிலமாகும். எனவே அதனை தவிர்த்து மீதமுள்ள புல எண்கள் **71/2, 71/1, 208/1**B-ல் கையகப்படுத்த வேண்டிய நிலத்தின் அளவு சுமார் **2427** சதுர அடிகள் ஆகும். நொளம்பூர் கிராமம் ஸ்ரீ ராம் நகர் சாலையில் உள்ள நிலங்களின் சந்தை வழிகாட்டு மதிப்பு **(31.03.2012** வரை**)** சதுரடிக்கு ரூ.**3,600** உள்ளதால் இதற்காகும் மொத்த செலவீனம் ரூ.**87,37,200/**– (எண்பத்தி ஏழு லட்சத்து முப்பத்து ஏழாயிரத்து இருநூறு மட்டும்) ஆகும் என்ற தகவல் அளிக்கப்படுகிறது.

எனவே, நிலை குழுக்களின் கூட்டம் ஏற்கனவே முடிவடைந்த நிலையில் பொது மக்களின் அவசியத்தை கருத்தில் கொண்டு மேற்கண்ட நிலத்தினை கையகப்படுத்துவது சம்மந்தமான இப்பொருள் நேரடியாக மன்றத்தின் அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

''இதற்கு மன்றம் அனுமதி அளிக்கின்றது''

*******

**மன்ற செயலாளர் (பொ)** **ஆணையாளர்.**

**மேயர்**

**19.06.2012 செவ்வாய் கிழமை**
**மாலை 3.00 மணிக்கு**
**நடைபெற்ற சாதாரண**
**மன்றக்கூட்ட தீர்மானங்கள்**